பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா. 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 28 சனிக்கிழமை (14.11.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 353

# ஏ-9 பாதையில் பஸ்ஸில் பயணிக்க பாதுகாப்பு அனுமதி தேவையில்லை

யாழ்ப்பாணம்.நவம்பர்14

ஏ-9 பாதை ஊடாக இ.போ.ச. பஸ்களில் பயணிக்க இன்று முதல் பாதுகாப்புத் தரப்பின் அனுமதி ('கிளியரன்ஸ்') தேவையில்லை. பாதுகாப்பு அமைச்சு இதனை அறிவித்துள்ளது.

மக்கள் தமது தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம் ஆகிய வற்றில் ஏதேனும் ஒன்றைக் காண்பித்து இ.போ.ச பஸ்களில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும் புக்கும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் பயணம் செய்யலாம். (20ஆம் பக்கம் பார்க்க)

**கல்விச் சுடர்**

**உள்ளே**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான தமிழ்மொழியும் இலக்கியமும்- I,II,III பாடத் துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## இந்திய அமைச்சர் பிரணாப் இன்று இலங்கை விஜயம்



கொழும்பு, நவ.14

இந்திய மத்திய நிதியமைச்சர் பிர ணாப் முகர்ஜி இன்று விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்பு வருகின் றார் என இந்தியச் செய்திகள் தெரிவிக் கின்றன.

சரத் பொன்சேகா, மஹிந்த ராஜபக் ஷவை எதிர்த்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போகிறார் என செய்திகள் வெளிவரும் நிலையில், பிரணாப் இலங்கை (20ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டுக்கு நான் செய்த பங்களிப்பை மறந்து அரசுத் தரப்பு எனக்கு சூட்டிய பட்டம் 'துரோகி'

**பொன்சேகா பதவி விலகியதற்கான காரணங்களில் இதுவும் ஒன்று**



கொழும்பு, நவம்பர் 14

" இராணுவத்தில் இவ்வளவு காலமும் இருந்து நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் நான் செய்த பங்களிப்புகளை மறந்து அரசுத் தரப்பினர் எனக்குத் தந்த பட்டம் 'துரோகி'. இராணுவச் சதிப்புரட்சியில் ஈடுபட்டு ஆட்சியைக் கவிழ்க்கப் போகின்றேன் என்று கதைகளைப் பரப்பி அரசு என்னை அவமதித்துவிட்டது.

இவ்வாறு, தாம் பதவி விலகியமைக்கான காரணங்களைப் பட்டியல் படுத்தியிருக்கிறார் முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரியான ஜெனரல் சரத் பொன்சேகா. (17ஆம் பக்கம் பார்க்க)

## மகஸின் சிறையில் தமிழ்க் கைதிகள் மீது சிங்களக் கைதிகள் மூர்க்கத் தாக்குதல்!

**ஏழுபேர் படுகாயம்; ஆனால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படவில்லை**

கொழும்பு, நவ. 14

கொழும்பு, வெலிக்கடைச் சிறைச்சாலை யில் உள்ள தமிழ்க் கைதிகள் பலர் அங்குள்ள சிங்களக் கைதிகளால் நேற்றுக் காலை கடு மையாகத் தாக்கப்பட்டனர்.

இத்தாக்குதலின்போது ஏழுக்கும் மேற் பட்ட தமிழ்க் கைதிகள் காயமடைந்தனர் என்று சிறைச்சாலை வட்டாரம் தெரிவித் துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

**புதிதாக நியமனம் பெறும் 416 ஆசிரிய உதவியாளர்களின் விவரம் 4 ஆம் ,17ஆம் பக்கங்களில்......**

## நல்லூர் முருகனுக்குச் சமீபமாக புதிய ரயில் நிலையம்

**விரைவில் கட்டப்படும் என்கிறார் அமைச்சர்**

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு அரு கில் புதிதாக ரயில் நிலையம் ஒன்றை (20ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் இராஜினாமாவை ஏற்றுக்கொண்டார் ஜனாதிபதி

கொழும்பு, நவ.14

சரத் பொன்சேகாவின் இராஜிநாமாக் கடிதம் ஜனாதிபதியால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்று இலங்கை அரசு நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது. (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே. முன்னணியின் பேரணியை மறித்து நிட்டம்புவவில் தாக்குதல்; 15 பேர் காயம்!

**12 வாகனங்கள் சேதம்; அரச ஆதரவாளர்கள் கைவரிசை**

கொழும்பு, நவ.14

ஐக்கிய தேசிய முன்னணியின் கொள் கைப் பிரகடனத்தைக் கண்டியில் வெளி யிடுவதற்காக நேற்றுக்காலை கொழும் பில் இருந்து கண்டி நோக்கிப் புறப்பட்ட அந்த முன்னணியின் வாகனப் பேரணி மீது நிட்டம்புவவில் வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப் பின் கம்பஹா மாவட்ட எம்.பி. சரண குண வர்த்தனவே தனது ஆள்களுடன் வந்து இத்தாக்குதலை (20ஆம் பக்கம் பார்க்க)

உங்கள்

**உதயன்**

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**நெல்லியடியில் இன்று முதல்**

வடமராட்சி வாசகர்கள், விளம்பரதாரர்கள், விற்பனை முகவர்கள் மற்றும் செய்தி யாளர்களின் நன்மைகருதி உதயன் உப பணிமனை பிரதான வீதி, நெல்லியடி (மக்கள் வங்கி முன்பாக) எனும்,முகவரியில் இன்று மு.ப. 9 மணிக்கு திறந்துவைக்கப்படுகிறது.

Cosy Hotel & Restaurant
Open 06.00am to 11.00pm
>AC/Non AC Rooms (with all Facilities)
> Conference/ Party Hall (75 Persons)
> Special Function Menus (buffet style)
கொசி உணவகம்
Feel like home
இல: 25, புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தை. HOTLINE: 0112504020
இல:15, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம். HOTLINE: 021-2225899
Introducing Special North Indian Break fast
06.00am to 10.00am
யாழ் நகரிலும் கொழும்பிலும் சுவையான, தரமான
Indian, Chinese, Jaffna Foods

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நான்காவது பிறந்தநாள் வாழ்த்து

## புஸ்பராசா அபிநெயா





வேலணை கிழக்கைச் சேர்ந்த
புஸ்பராசா- சசிகலா தம்பதியரின்
செல்வப்புதல்வி அபிநெயா இன்று
(14.11. 2009) சனிக்கிழமை
தனது நான்காவது பிறந்த நாளை
நோர்வேயில் உள்ள தனது
இல்லத்தில் வெகு விமரிசையாக
கொண்டாடுகின்றார். அபிநெயாவை
வேலணை பெருங்குளம் முத்துமாரி
அம்மன் அருள் பெற்று பல்லாண்டு
காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
புஸ்பராசா (அப்பா), சசிகலா (அம்மா),
ருசாந்தன் (அண்ணா).

(90944)



# முக்கிய அறிவித்தல்

யாழ்.மாவட்ட தேசவள விவசாய சம்மேளனம், திருநெல்வேலி

எமது நிறுவன்த்திடம் விதை உருளைக்கிழங்குக்கு விண்ணப்பித்தவர்கள் தங்களுக்கான விதைக்கிழங்கினை சனி (இன்று), திங்கள், செவ்வாய் ஆகிய மூன்று தினங்களுக்குள் உடன் வந்து சீக்கோ நிறுவன களஞ்சியத்தில் பெற்றுக் கொள் ளவும்.

நிர்வாகம்,
யாழ்.மாவட்ட தேசவள விவசாய சம்மேளனம்,
விவசாயிகள் கூடம்,
பலாலி வீதி, திருநெல்வேலி.
021 300 2345 , 077 2477977

(சி-562414)



# UNIVERSITY OF JAFFNA
# TENDER NOTICE

The Chairman University Procurement Committee, University of Jaffna will receive sealed tenders from civil works contractors registered with ICTAD for the following works.

| Work Details | Refundable deposit (Rs.) | Non - Refundable deposit (Rs.) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|
| Re- construction of Kitchen of Hostel and Repairs / Improvements to related structures at Ramanathan Academy of Fine Arts, Maruthanamadam, University of Jaffna. | 20,000.00 | 400.00 | M7 / C8 |

Tender forms may be obtained from Senior Assistant Registrar / Capital works & Planning University of Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above tender fee at the shroff's Counter, University of Jaffna until 23.11.2009

Perfected tender should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P.Box 57, Thirunelvely , Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.

Tenders will be accepted till 2.00pm on 27.11.2009 and open immediately thereafter.

Tenderers or their accredited representative could be present at the time of opening of tenders.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Capital Works & Planning Branch of this University during office hours, if necessary.

P.O Box 57,
Thirunelvely, Jaffna.13.11.2009 (சி-562413)

Registrar
University of Jaffna


## இசுறு திட்ட ஆரம்ப நிகழ்வு

தேசிய தொலைக்கல்வி நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் றஞ்சித் குமாரசிறி தலைமையில் இசுறு நிகழ்ச்சித்திட்ட ஆரம்ப வைபவம் புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

## பரிசளிப்பு விழா

புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சி.மணியம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாக்குப் பிரதம விருந்தினராக ஆசியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திருமதி சத்தியா ரஞ்சித் கலந்துகொள்வார்.

# மீள்குடியமர்ந்தவர்களுக்கு புனர்வாழ்வு நிறுவனம் உதவி

யாழ்ப்பாணம், நவ.14

நலன்புரி நிலையங்களில் இருந்து நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடிமர்ந்த மக்கள் கைத்தொழில், கால்நடை வளர்ப்பு, விவசாயம் போன்றவற்றில் ஈடுபடுவதற்கென அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான உதவிக்கள் மற்றும் உபகரணங்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை நிறுவனத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

மறுநாள் புதிதாக மேற்படி நிறுவனத்தில் பதிவு செய்தவர்களுக்கு எவ்வாறனஉதவிகளை வழங்கலாம் என்பது குறித்து பகுப்பாய்வு செய் யப்படவுள்ளது. ஒவ்வொரு குடும்பத்தில் இருந்தும் ஒருவர் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.


### வீடு விற்பனைக்கு

உடுவில் டச் வீதியில் மகளிர் பாடசாலைக்கு அருகாமையில் பழைய வீடு ஒன்று விற்பனைக்குண்டு.

லிங்கம் மோட்டேர்ஸ்,
டச் ரோட், உடுவில்.
தொ.பே.: 021 321 8087
021 321 3482


## ஒன்றிணைந்து எமது சூழலை பாதுகாத்து எதிர்காலச் சந்ததிக்கு பசுமையான சூழலை வழங்கிச் செல்வோம்

சூழல் பாதுகாப்பு என்பது இன்று உலகளாவிய ரீதியில் பரவலாகப் பேசப்பட்டு வரும் பாரிய பிரச்சினையாகும் . எனவே சூழல் பாதுகாப்பில் நாம் ஒவ்வொருவரும் அக்கறை கொள்வோம்.

**மனிதர்கள் எவ்வாறு சூழலை மாசுபடுத்துகின்றார்கள்.**

- மரங்களை அழித்தல்
- நீர்வீண்விரயம்
- மிதமிஞ்சிய பொலித்தீன் பாவனை
- மின்சாரப் பாவனையில் சிக்கனமின்மை
- விறகு, எரிபொருள்களை அதிகமாகப் பாவித்தல்
- கழிவுப் பொருள்களை உரியமுறையில் அகற்றாமை
- வாழ்வாதாரத் தேவைக்காக காடழிப்பு
- தேவைக்கதிகமான இரசாயணக் கிருமி நாசினிகள் மற்றும் பசளைகளின் பாவனை

**சூழல் மாசடைவதால் ஏற்படும் விளைவுகள்**

- காலத்திற்கேற்பவும் தேவைக்கேற்பவும் மழை வீழ்ச்சியை பெற்றுக் கொள்ள முடியாமை
- நிலத்தடி நீர் வற்றிப் போகும் அபாயகரமான நிலைமை
- இனங்காண முடியாத மற்றும் நோய்களின் தாக்கம்
- விவசாய நிலங்களின் பாதிப்பு
- நன்னீர் உவர் நீராகும் தன்மை
- எதிர்காலச் சந்ததியினர் ஆரோக்கியமான சூழலில் வாழமுடியாமை

**சூழலைப் பாதுகாப்பதில் எமது பங்களிப்பு**

- இயன்றளவு மரங்களை நட்டுப் பராமரித்தல்
- நீர் விரயமாவதைத் தடுப்போம்
- தூவல் முறை நீர்ப்பாசனத்தினை முன்னெடுப்போம்.
- குளங்களைப் புனரமைப்போம். பாதுகாப்போம்.
- விவசாயத்தில் இயற்கை பசளையை பயன்படுத்தல்
- பொலித்தீன் பிளாஸ்டிக் பாவனையைக் குறைத்தல்
- மிதமிஞ்சிய வாகனப் பாவனையை இயன்றளவு குறைத்தல்

சூழல் மாசுறுதலைத் தடுப்பதற்காய் நாம் அனைவரும் ஒன்றிணைவோம் வாரீர்.

- தி.திருஷைாந்

(இன்று இடம் பெறும் காலநிலை மாற்றம் தொடர்பான போட்டியின் பரிசளிப்பினையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது)

(90943)


### வீடு வளவு விற்பனைக்கு

சுண்டுக்குளி, விதானையார் வீதியில் சகல வசதிகளையும் கொண்ட 3பரப்புக் காணியுடன்கூடிய வீடும் சுண்டுக்குளி குருசோ வீதியில் 3 பரப்புக் காணியுடன் கூடிய வீடும் கொழும்புத்துறை வலன்புரத்தில் (புனித சவேரியார் குருமடத்திற்கு அருகாமையில் ) 2 பரப்புக் காணியுடன் கூடிய வீடும் விற்பனைக்கு உண்டு.

T.P. 0776146434
021 3008577

தொடர்பு: S.Sநாதன்
இல.16/3,விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.



### தவறிவிட்டது

265, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தையுடைய வைத்திலிங்கம் சிவரூபன் என்பவருடைய அடையாள அட்டை (832243949V) யாழ். பஸ் நிலையப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்கண்ட முகவரியில் அல்லது 077 5948372 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (90949)



### வேலையாள்கள் தேவை

கொழும்பில் பிரபல சைவ உணவகத்திற்கு இடியப்பம், ஆப்பம், பிட்டு, கொழுக்கட்டை போடத் தெரிந்தவர்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதியுடன் 16,000 ரூபா சம்பளம் வழங்கப்படும்.

சிறியாணி, 131, 2 nd Cross Street,
Colombo - 11
T.P.:0773000469



### கணனி விற்பனை

pentium III கணனிகள் விற்பனைக் குண்டு.
தொடர்புகளுக்கு:
IDM computer studies (p.v.t) Ltd
216, Navalar Road, Jaffna.
T.P.: 021 222 9901



### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதி வைத்தீஸ்வராச் சந்திக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொ.பே. இல. 0772850769.

நித்தி சைக்கிள் வேக்ஸ்,
வைத்தீஸ்வராச் சந்தி,
[illegible]


# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை ஞானசுந்தரம்

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை ஞானசுந்தரம் நேற்று (13.11.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பூமணியின் அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று(14.11.2009) சனிக்கிழமை நடைபெற்று மு.ப. 10 மணியளவில் வல்வெட்டி, ஊறணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

வேவில் லேன்,
வல்வெட்டி.

தகவல்:
எம்.பி. தர்மலிங்கம்.

## மருசிலின் மார்க்கு



சென்.ஜேம்ஸ், இளவாலையைப் பிறப்பிடமாகவும், இல.41, சமன்புர ஒழுகாந்த தோட்டம், பலாங்கொடையை வசிப்பிடமாகவும் கொண்ட மருசிலின் மார்க்கு நேற்றுமுன்தினம் (12.11.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.11.2009) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பலாங்கொடை புனித சூசையப்பர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் நல்லடக்கத்துக்காக பலாங்கொடை கிரிந்தகல றோமன் கத்தோலிக்க பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மார்க்கு லூயிஸ் மன்ரேசா
(ராஜன் மகன்).

தொ.இல. 0452286992 (சி-562412)

## செல்லையா இந்திரகுமார்



அல்லைப்பிட்டி, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு செங்கலடியை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா இந்திரகுமார் 11.11.2009 புதன்கிழமை அன்று அகாலமரணமானார்.

அன்னார் செல்லையா - பவளம்மா தம்பதியினரின் அன்பு மகனும் சதாசிவம் பிள்ளை - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சுலோசனாதேவியின் அன்புக் கணவரும் கேமலக்ஸ்சனின் அன்புத் தந்தையும் சச்சிதானந்தம் (துரை), சண்முகரட்ணம், மயில்வாகனம், நகுலேஸ்வரி, இராஜேஸ்வரி, மணிமாறன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரஞ்சினிதேவி, யோகேஸ்வரி, பத்மாதேவி, எஸ்.மகேந்திரன், ரி.மகேந்திரன், நகுலாம்பிள்ளை, பாலசிங்கம், சிறிஸ்கந்தராஜா, சிறிஸ்கந்ததேவன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (15.11 2009) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செங்கலடி இந்துமயானத்திற்கு எடுத்துசெல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.27, சங்கிலியன் வீதி ,
நல்லூர்.

தகவல்:
சகோதரர்கள்.

(90945)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சிறைக்கூண்டுகளுக்குப் பின்னால் சிக்கித் தவிக்கும் தமிழ்க் கைதிகள்

பேரினவாதத்தின் அடக்குமுறை மேலாண்மை - மேலாதிக்கத் திமிர் - மீண்டும் ஒருமுறை தனது குரூரத்தை வெலிக்கடைச் சிறைக்குள் நேற்றுக் காட்டியிருக்கின்றது.

அங்கு தமிழ்க் கைதிகள் மீது காவலர் தரப்பு சீற்றம் கொண்டு தாக்கியதில் பதினேழு கைதிகள் படுகாயமடைந்திருக்கின்றனர். அவர்களில் ஏழு பேரின் நிலைமை மோசமாக உள்ளது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

பொதுமக்களைக் கைதிகளாக்குகின்ற அரசே அவர்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பு. அந்தக் கடப்பாட்டிலிருந்து - அரசு - அரசுத் தலைமையும் அதிகாரிகளும் - எக்காரணம் கொண்டும் தப்பிப்பிழைக்க முடியாது; எந்தச் சாக்குப் போக்குச் சொல்லியும் அந்தப் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது.

தாம் கைதிகளாகப் பிடித்து அடைத்து வைத்திருக்கும் சிறுபான்மையினரான தமிழ் மக்களுக்குத் தனது சிறைக்குள்ளேயே உரிய பாதுகாப்பை வழங்க முடியாத இந்த அரசுத் தலைமைத்துவங்களால் இந்த நாட்டின் சிறுபான்மையினரான தமிழர்களுக்கு இந்த நாட்டுக்குள் எப்படி உரிய பாதுகாப்பை வழங்க முடியும்? உரிய நீதியையும், நியாயத்தையும் பெற்றுக்கொடுக்க முடியும்?

இது ஒன்றும் இப்போது மட்டும் நடக்கும் புதிய சம்பவம் அல்ல. காலங்காலமாக சிறைக் கூண்டுக்குள் சிக்கும் தமிழர்களுக்குத் தொடர்கதையாக நேரும் அவலத்தின் மற்றொரு அங்கமே நேற்றுக்காலை வெலிக்கடையில் நடந்து முடிந்திருக்கின்றது.

வன்முறைப் புயல் இனத் துவேஷமாக இலங்கையில் மிக மோசமாகக் கோரத் தாண்டவமாடிய 1983 ஜூலைக் கலவரத்தின் போதும் இதேபோல வெலிக்கடைச் சிறையில் தமிழ் அரசியல் கைதிகள் கொன்றொழிக்கப்பட்டார்கள்.

வெளியே தமிழர்களுக்கு எதிரான குரூர இனக்கலவரம் கொடூர வன்முறையாகக் கொழுந்து விட்டு எரிந்தபோது, சிறைக் கூண்டுகளுக்குள் தனித்து விடப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராகவும் மிக மோசமான வன்முறை, திட்டமிடப்பட்ட முறையில் கட்டவிழ்த்து விடப்பட்டது.

1983 ஜூலை 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் தமிழ்க் கைதிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்த சிறைக் கூண்டுகளை ஆயுதங்கள் சகிதம் முற்றுகையிட்ட பெரும்பான்மையினத்தவர்கள் - சிறை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் - தமிழ்க் கைதிகளைக் கண்டதுண்டமாக வெட்டிக் கொன்றனர். பலரின் கண்கள் கூடப் பிடுங்கி வீசப்பட்டன. சிறைக் கைதிகளால் குத்திக் கிழிக்கப்பட்டு, அடித்து நொருக்கப்பட்டு, மிருகத்தனமாகக் கொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் நால்வர் முக்கியமானவர்கள். தமிழீழ விடுதலை இயக்கத்தின் மூல பிதாக்களான தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் ஆகியோரும் 'காந்தீயம்' அமைப்பை உருவாக்கிய கலாநிதி ராஜசுந்தரமும் அன்று அப்படிக் கொன்றொழிக்கப்பட்ட 52 தமிழ் அரசியல் கைதிகளில் அடங்குவர்.

இரண்டு நாள்கள், அடுத்தடுத்து அரங்கேறிய இந்தக் கோரத் தாண்டவத்துக்காக யாரும் நீதிமன்றில் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்படவில்லை.

1983 இனக் கலவரத்தின் மற்றொரு 'ஆபரணமாக' இந்தக் கொடூரக் கொலை அத்தியாயத்தைப் பெருமையுடன் அணிந்து கொண்டது சிங்க(ள) ஆட்சித் தலைமை.

இதேபோன்ற சம்பவங்கள் இலங்கைச் சிறைகளுக்குள் தமிழ்க் கைதிகளுக்கு எதிராக சிறிய அளவில் அவ்வப்போது தொடர்ந்து கொண்டிருந்த போதிலும் - வெலிக்கடையில் 1983 ஜூலையில் நடைபெற்றமை போன்ற - பிறிதொரு அலங்கோலச் சம்பவம் 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 24 ஆம் திகதி பிந்துனுவெவவில் இடம்பெற்றது.

புனர்வாழ்வு அளித்தல் என்ற பெயரில் தான் கூட்டிச் சென்று தடுத்து வைத்திருந்த 28 தமிழ் இளைஞர்கள், பிந்துனுவெவப் பிரதேசவாசிகளினால் வெட்டியும், தாக்கியும் கொடூரமாக - குரூரமாக - கொன்றொழிக்கப்பட இடமளித்து வாளாவிருந்தது அரச நிர்வாகம்.

இந்த இரண்டு சிறைக் கொடூரங்கள் தொடர்பிலும் முக்கியமாக அவதானிக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், இவை இரண்டு தொடர்பிலும் கடைசியாக யாருமே தண்டிக்கப்படவில்லை என்பதுதான்.

தான் தடுத்து வைத்திருக்கும் கைதிகளுக்கு உரிய பாதுகாப்புப் கொடுக்க முடியாத அரசு - அந்தக் கைதிகள் கொத்துக் கொத்தாகக் கொன்றொழிக்கப்பட்டமைக்குப் பொறுப்புக்கூற முடியாத அரசு - அந்தக் கொலைகளுக்குப் பொறுப்பானவர்களைத் தண்டிக்கக்கூட தகுதியோ அல்லது விருப்பமோ அற்ற அரசு - தன்னை இறைமையுள்ள சட்டரீதியான ஓர் அரசு என்று கூறிக்கொள்வதற்கே தகுதியற்றதாகும்.

நீதிமன்றங்களின் - நீதியமைச்சின் - நேரடிப் பார்வையிலும் கட்டுப்பாட்டிலும் இயங்கும் பகிரங்கச் சிறைச்சாலைகளிலேயே இத்தகைய கொடூரங்களும், குரூரங்களும் அரங்கேறுமானால் -

பொதுசனத்துக்கோ, ஊடகங்களுக்கோ, சர்வதேசத்துக்கோ காட்டப்படாமல் - அவசரகாலச்சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்டுள்ள விசேட அதிகாரங்களுக்கு அமைய, பல்வேறு இரகசிய இடங்களிலும், படைமுகாம்களுக்குள்ளும் இயக்கப்படும் தடுப்பு நிலையங்களில் எத்தகைய கொடூரங்கள் அரங்கேறலாம் என்ற சந்தேகம் பேரச்சத்தைத் தரு கின்றது.

இப்படி உலகின் பார்வைக்குத் தெரியாமல் மூடப்பட்ட தடுப்பு மையங்களுக்குள் பத்தாயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் 'பயங்கரவாதிகள்' என்ற பெயரோடு அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது அப்பட்டமான உண்மை.

வெலிக்கடை பகிரங்கச் சிறை. அதனால் அங்கு நடப்பது சற்றேனும் கசிகிறது. இரகசியச் சிறைகளுக்குள் எத்துணை கொடூரங்கள் அரங்கேறுமோ.........? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்..........?

விதியே! விதியே! தமிழ்ச் சாதியை என் செய்ய நினைத்தாய்.........? என் செய்ய நினைத்தாய்........?

# சிறந்த கைத்தொழில் முயற்சியாளருக்கான ஜனாதிபதி விருது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 14 பேருக்கு வழங்கப்படுகிறது

யாழ்ப்பாணம், நவ.14

சிறந்த கைத்தொழில் முயற்சியாளர்களுக்கான ஜனாதிபதி விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பத்திரமுல்ல ஜனகலா நிலைய மண்டபத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 14 முயற்சியாளர்கள் ஜனாதிபதி விருது பெறுகின்றனர்.

கிராமிய கைத்தொழில் மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சும், கைத்தொழில் அபிவிருத்திச் சபையும் இணைந்து நாடளாவிய ரீதியில் நடத்திய சிறந்த தொழில் முயற்சியாளர்களுக்கான தெரிவில் 2008ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியாக மாகாண மட்டத் தெரிவில் முதலாம் இடத்தைப் பெற்றவர்களுக்கே இந்த விருது வழங்கப்படவிருக்கின்றது.

இலத்திரனியல் மற்றும் மின்சார உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் இயந்திரப் பகுதிகள் உணவு, பானங்கள், பாதணி, தோல் உற்பத்திகள், இலகு பொறியியல், பொறியியல் கைத்தொழில், தும்பு, நார் அடிப்படையிலான உற்பத்திகள், மரம் மற்றும் மரம் அடிப்படையிலான உற்பத்திகள், அச்சிடும் கடதாசி மற்றும் கடதாசிக் கூழ் அடிப்படையிலான உற்பத்திகள், கனிப்பொருள்கள் மற்றும் இரசாயன அடிப்படையிலான உற்பத்திகள், இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் அடிப்படையிலான உற்பத்திகள், கட்டடம் மற்றும் கட்டடப் பொருள் அடிப்படையிலான உற்பத்திகள், தைத்த ஆடைகள் மற்றும் ஒத்த உற்பத்திகள், வேறு உற்பத்திகள் மற்றும் சேவைகள் என்னும் தலைப்புகளில் விருதுகளுக்கான தெரிவுகள் இடம்பெற்றுள்ளன.

தொழில் முயற்சியாளர் தெரிவு 2008 இல் விருது பெறும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிறிய, நடுத்தர கைத்தொழிலாளர்களின் பெயர் விவரம் வருமாறு:

* சோமசேகரன் ககனானந்தா- மைக்றோ பி.சி. சிஸ்ரம், யாழ்ப்பாணம்.
* கனகசபை பூரணச்சந்திரன்- ஸ்ரார் இன்டஸ்ரியல் சேவிஸ், நல்லூர்.
* சுப்பர் பொன்னையா நடராசா- 'அண்ணா தொழிலகம், இணுவில்.
* சிவதாசா சந்திரமேனன்- ஜனா தொழிலகம், அல்வாய்.
* தோமஸ் கிறிஸ்ரின் செல்வராஜன்- நியுட்டா இன்டஸ்ரி, யாழ்ப்பாணம்.
* சின்னப்பன் குருநாதன்- ஒமேக்கா மல்ரி புரடக்ஸ் இன்டஸ்ரி, அளவெட்டி.
* ஜீவரட்ணம் ஜெயப்பிரகாஸ்- ஆறுமுகம் சிற்பாலயம், திருநெல்வேலி மேற்கு.
* சிவஞானசுந்தரம் ராஜ்குமார் - கரிஹரணன் பிறிண்டர்ஸ், யாழ்ப்பாணம்.
* சுப்பிரமணியம் பாஸ்கரன் ஆச்சாரி- பாஸ்கரன் சிற்பாலயம், யாழ்ப்பாணம்.
* சின்னத்துரை யசோதரன்-யசோ ஆட்ஸ், யாழ்ப்பாணம்.
* ஆறுமுகநாதன் ஜனார்த்தனன் - ஜனா கட்டடப் பொருள், தெல்லிப்பழை.
* திருமதி வாமதேவன் சோமேஸ்வரி- சிற்றி கணன்ஸ் காமென்ஸ், இணுவில்.
* வேலுப்பிள்ளை ஸ்ரீஸ்கந்தராசா- EUT Ltd., சுன்னாகம்.
* யோசப் யோகராசா-யாழ்ப்பாணம்.

இவ்வாறு விருதுக்காகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்குச் சான்றிதழும் பத்தாயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். தெரிவு செய்யப்பட்டவர்கள் கைத்தொழில் அபிவிருத்திச் சபையால் அனுப்பப்பட்ட கடிதத்துடன் நிகழ்விற்கு சமுகமளிக்குமாறு யாழ்ப்பாணம் கைத்தொழில் அபிவிருத்திச் சபை பதில் பணிப்பாளர் ஆர்.ஜெயமனோன் கேட்டுள்ளார். (50-14)

**நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட**

# சாதாரணதரத் தனிப்பட்ட பரீட்சார்த்திகளை யாழ். வலயத்துடன் தொடர்பு கொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம் நவ.14

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜீ.சீ.ஈ. சாதரண பரீட்சைக்கு தோற்றவுள்ள தனிப்பட்ட பரீட்சார்த்திகள் யாழ். கல்வி வலயத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளவர்களில் இம்முறை டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள சாதாரணதர பரீட்சையில் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாகத் தோற்றவுள்ள மாணவர்கள் தமது பெயர் மற்றும் ஏனைய விவரங்களுடன் யாழ். கல்வி வலய அலுவலகத்துடன் உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

இவ்வாறு திரட்டப்படுகின்ற தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் விவரங்களை எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

எனவே காலம் தாழ்த்தாது மாணவர்கள் உடனடியாக தமது விவரங்களைப் பதிவுசெய்து கொள்ள வேண்டும் -என்றார் அவர். (50-9)

# யாழ்ப்பாணத்தில் எரிபொருள் தட்டுப்பாடு ஒருசில தினங்களில் முற்றாக நீங்கிவிடும்

**பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தகவல்**

யாழ்ப்பாணம் நவ.14

யாழ்.குடாநாட்டில் எரிபொருளுக்கான தட்டுப்பாடு இன்னும் ஒருசில தினங்களில் முற்றாக நீங்கிவிடும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் டீசல் போதியளவு வாகனங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. அதேசமயம் மண்ணெண்ணெய், பெற்றோல் என்பன மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் தட்டுப்பாடு ஒருசில தினங்களில் முற்றாக நீங்கிவிடும் என்றும் அந்த அதிகாரி நம்பிக்கை தெரிவித்தார்.

இதேவேளை -

தரைப்பாதையூடாக ''பவுசர்'' வாகனங்களில் எரிபொருள்களை எடுத்து வருவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும், நேற்றும் ஒரு தொகுதி மண்ணெண்ணெய், பெற்றோல் என்பன தரைப் பாதையூடாக எடுத்து வரப்பட்டன என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (50-224)

# சில இடங்களில் இன்று மின் விநியோகம் தடை

யாழ்ப்பாணம்.நவ14

அவசர திருத்த வேலைகள் காரணமாக இன்று சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை சில இடங்களில் மின்சார விநியோகம் தடைப்படும் என சுன்னாகம் மின்சார சபையின் மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர், வேலணை, ஊர்காவற்றுறை, அராலி, மானிப்பாய், கட்டுடை, சங்குவேலி, உடுவில், மருதனார்மடம், சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் மின்சார விநியோகம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (204)

# யோகர் சுவாமிகளின் சமாதிக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்

யாழ்ப்பாணம் நவ.14

சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கடந்த 11ஆம் திகதி கொழும்புத்துறைக்கு சென்று யோகர்சுவாமிகளின் சமாதியைப் பார்வையிட்டதுடன் வழிபாட்டிலும் ஈடுபட்டார்.

யோகர் சுவாமிகளின் சமாதியில் நடைபெற்ற வழிபாடுகளில் கலந்து கொண்ட அமைச்சருடன் யாழ். மாநகர முதல்வர் திருமதி ப.யோகேஸ்வரி, பிரதி முதல்வர் து.இளங்கோவன் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள் உட்படப் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

யோகர் சுவாமிகள் இளைப்பாறிய ஐயர் கடைக்கு முன்பாகவுள்ள பாரிய இலுப்பை மரம் ஒன்று 1995ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையில் அழிக்கப்பட்டது. அங்கு சென்ற அமைச்சர் அதே இடத்தில் இலுப்பை மரம் ஒன்றையும் நாட்டிவைத்தார்.

பின்னர் இலந்தைக்குளம் விநாயகர் ஆலயத்துக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்ட அமைச்சர் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் புதிய மூன்றுமாடி கட்டடத்தையும் பார்வையிட்டார். (50-224)

# யாழ். மாநகர சபைக்கு 25 டிராக்டர்கள்

யாழ்.மாநகர சபையின் பாவனைக்கென 25 டிராக்டர்களை வழங்க அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் இணங்கியுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

தற்சமயம் இரண்டு டிராக்டர்கள் மாநகரசபைக்கு வந்துள்ளன. இந்தியாவின் உதவியுடன் வழங்கப்பட்ட இந்த டிராக்டர்களைத் திருத்தியமைக்கக்கூடிய பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதற்கென டில்லியில் இருந்து தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் கொழும்புக்கு வந்திருந்ததாக எனவும் மேயர் திருமதி ப.யோகேஸ்வரி தெரிவித்தார். (2[illegible]-111)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 29 | 15.11.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | சதுர்த்தசி |
| | பி.இ. 01.30 வரை |
| நட்சத்திரம்: | சித்திரை |
| | காலை 06.10 வரை |
| சுபநேரம்: | 08.07-10.37 வரை |
| இராகுகாலம்: | 04.37-06.07 வரை |

# மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நேற்று யாழ்.நகரில் மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ.14

யாழ்.நகரில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் நேற்று கடற்றொழிலாளர்களுக்கும், நுகர்வோருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டது.

ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத தொகைக்கு இந்த மண்ணெண்ணெய் விநியோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மண்ணெண்ணெயைப் பெறுவதற்கு மக்கள் நீண்ட வரிசையில்காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய உதவியாளர்களாக 416 பேருக்கு இன்று நியமனம்

யாழ்ப்பாணம், நவ.14

வடக்கு மாகாண சபைக்குட்பட்ட பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்றிய 416 பேருக்கு ஆசிரிய உதவியாளர் பதவிக்கு இன்று நியமனம் வழங்கப்படவுள்ளது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் நிகழ்வில் வைத்து இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கையளிக்கபடவிருக்கிறன.

வடக்கு மாகாண கல்வியமைச்சுச் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்துகொண்டு நியமனக்கடிதங்களை வழங்குவர்.

நியமனம் பெறுபவர்களை ஆசிரிய உடையில் வருமாறும்:-

பெற்றோர்/கணவன்/மனைவி ஆகியோருடன் சமுகமளிக்குமாறும் - கேட்கப்பட்டுள்ளனர்.

நியமனம் பெறும் 416 பேரின் விவரம் வருமாறு:-

திருமதி சந்திரசேகரம்பிள்ளை செல்வராணி-சரசாலை வடக்கு,செல்வி சின்னத்துரை துரைராணி- மந்துவில் மேற்கு, கொடிகாமம், திருமதி கமலராணி இராசையா-கலைமகள் வீதி இமையாணன், திருமதி சிவலிங்கராசா தெய்வரதி-கரணவாய் தெற்கு, கரவெட்டி, திருமதி மதிவதனி ரகு-விஜயபுரி நாவலடி, உடுப்பிட்டி, திருமதி சிவசுகுணா சந்திரகாந்தன்- மட்டுவில் தெற்கு, திருமதி வாசுகி மகிந்திரராசா- நீதிமன்ற வீதி, மல்லாகம், கிருஷ்ணன் திருச்செல்வம்-மட்டுவில் கிழக்கு, திருமதி திருச்செல்வம் விஜயசிறி- மட்டுவில் கிழக்கு, திருமதி வாசுகி அன்ரன் ராஜசேகரம்- பலாலி வீதி-

திருமதி பாமா தர்மராஜா-அரியாலை, மகாதேவன் தவக்குமார்- இணுவில் மேற்கு, செல்வி பத்மவதனி பாலசிங்கம் கோப்பாய் தெற்கு, திருமதி சிவசாந்தி சிவம்-உடுப்பிட்டி, திருமதி சத்தியதேவி சிவகுமாரன்-சுன்னாகம், செல்வி இராகினி இரத்தினமணி- சரசாலை தெற்கு, செல்வி செல்வநாயகி வடிவேலு- நாவற்குழி, செல்வி சத்தியபாமா இராசலிங்கம்- நாவற்குழி, திருமதி இயுயீன் மனனட் கற்பகவதனம்- சுன்னாகம், சிவதாஸ் சிவக்காந்தன்- மட்டுவில் கிழக்கு,

செல்வரட்ணம் மோகநாதன்- கோப்பாய், செல்வி கபேரியல் ஜெனோபா- உரும்பிராய், திருமதி யொனிற்றா மெலானி கியுமன்-கரம்பன் கிழக்கு, திருமதி றோகின் கேதீஸ்வரன்- வட்டுக்கோட்டை, செல்வி வத்சலா திருமேனி- வல்வெட்டித்துறை, திருமதி நந்தா மணிராஜன்- வல்வெட்டித்துறை, செல்வி கமலேஸ்வரி சண்முகநாதன்-சுழிபுரம், செல்வி கஸ்தூரி பாலசுப் பிரமணியம்- சங்கானை, செல்வி மஞ்சுளா நடராசா- சண்டிலிப்பாய்,

செல்வி சுலோசனா சீவரட்ணம்- கச்சேரி நல்லூர் வீதி, செல்வி சுகிர்தா முருகானந்தம்-கைதடி, செல்வி மதனரூபி பாரதிதாசன்- அல்வாய் வடக்கு, திருமதி லலிதா ஜெயக்குமார்-சாவகச்சேரி, திருநாவுக்கரசு ரூபாகரன்-சுழிபுரம், செல்வி சுகிர்தா பரமானந்தம்- கொக்குவில், சண்முகம் நகுலேஸ்வரன்-கரவெட்டி, செல்வி சங்கீதா கருணானந்த சிவம்- ஆனைக்கோட்டை, செல்வி வில்லியம் அன்ரன் மேரி சுரேகா-பருத்தித்துறை, செல்வி அன்ரலின் றஜிதா மங்களதாஸ்-யாழ்ப்பாணம், செல்வி ஜெயதா ஜெராட் பீற்றசன்- யாழ்ப்பாணம்,

தனபாலசிங்கம் சகிலன்-கொடிகாமம், செல்வி ராதாலக்சுமி லோகசுப்பிரமணியன்- காரைநகர், செல்வி வத்சலா சந்திரகுமாரன்-கொக்குவில், வல்லிபுரம் கிருஷ்ணவேல்- பருத்தித்துறை, செல்வி சிவரூபி நமசிவாயம்-காரைநகர், முருகன் சதீஸ்-கோப்பாய் தெற்கு, செல்வி துஸ்யந்தி கிருஷ்ணப் பிள்ளை- குடத்தனை மேற்கு, திருமதி துஸ்யந்தி பிரதீபன்-புத்தூர், செல்வி சோபிகா சிவபாலன்-நயினாதீவு, செல்வி யான்சி துரைராஜா- கோண்டாவில்-

அகிலேஸ்வரன் பிரதீபன்-புத்தூர், திருமதி சொருபா கண்ணதாசன்- யாழ்ப்பாணம், செல்வி யோன்பிள்ளை ஜெராலின் தனுசியா-கோப்பாய், செல்வி பாலசிங்கம் பிரதீபா-அச்சுவேலி வடக்கு, செல்வி சுந்தரலிங்கம் தர்சினி-வல்வெட்டித்துறை, திருமதி யோகலிங்கம் தர்மினி-இருபாலை கிழக்கு, செல்வி தாட்சாயினி முத்துராசா-நாவாலி தெற்கு, செல்வி பத்மசுதர்சினி கிருஷ்ணகோபால்-துன்னாலை கிழக்கு, செல்வி சுதர்சினி பாலச்சந்திரன்-பருத்தித்துறை, செல்வி ஜெயச்சந்திரன் வக்சலா- வல்வெட்டித்துறை,

திருமதி சகுந்தலாயினி இரவீந்திரதாசன்-யாழ்ப்பாணம், செல்வி சசிகலா செல்வராசா-யாழ்ப்பாணம், திருமதி பற்றிமா வசந்தமேரி றொபேட் அலெக்ஸ்-யாழ்ப்பாணம், செல்வி சோதி நாதன் கீர்த்தனா-கோண்டாவில் வடக்கு, செல்வி ஏ.ஜெயந்தா-யாழ்ப்பாணம், சங்கரப்பிள்ளை கருணாகரன்- நெடுந்தீவு, திருமதி மயுதினி யுட் நிக்ஸன்-நெடுந்தீவு, செல்வி சர்மிலா வடிவேலு-நயினாதீவு, செல்வி ஜீவதர்சினி இலட்சுமணன்- நெடுந்தீவு, செல்வி அமலசெல்வி பத்மராஜன்-எழுவைதீவு,

திருமதி தர்மலோஜினி சதீஸ்வரன்-புங்குடுதீவு, ஞானரத்தினம் அன்ரன் செல்வராஜ்-புங்குடுதீவு, பாலச்சந்திரன் கஜதீபன் -ஏழாலை தெற்கு, ஞானரத்தினம் அன்ரன் அமலராஜ்-புங்டுதீவு, திருமதி ஜெயந்தினி நந்தகுமாரன்-கொடிகாமம், திருமதி பரமேஸ்வரி அனோஜிதன்-புலோலி மேற்கு, செல்வி ஜெசிந்தா ராஜ சங்கர்-அல்வாய் தெற்கு, செல்வி தாட்சாயினி முத்துராசா- நாவலி தெற்கு, திருமதி சுதாஜினி சிவசுதர்சன-சில்லாலை வடக்கு,

செல்வி மகேந்திரகுமாரி ஆறுமுகம்-பண்டத்தரிப்பு, செல்வி இராஜேஸ்வரி சுப்பன்-சுன்னாகம், கந்தசாமி சுதேஸ்- அல்வாய் மத்தி, செல்வி ராதிகா ராஜேந்திரா-ஆவரங்கால் மேற்கு, செல்வி ஞானகணேசன் ஜெயசுபாஜினி-கச்சேரி நல்லூர் வீதி, செல்வி செல்வரதி செல்வராஜா- கோப்பாய் மத்தி, திருமதி பிரியதர்சினி ஜெயரூபன்-பருத்தித்துறை, செல்வி கோகுலம் செல்லத்துரை- ஆவரங்கால் மேற்கு, செல்வி பாலசுந்தரம் லஜிதா-சுன்னாகம் வடக்கு, திருமதி சுகந்தினி யோகராசா-சுன்னாகம் வடக்கு,

செல்வி சம்சித்தி தம்பித்துரை- வட்டுக்கோட்டை, செல்வி வாசுகி பொன்னுத்துரை- நாகர் கோயில், திருமதி பிறேமலதா பிரபாகரன்-கொக்குவில், செல்வி தாரணி ராஜேந்திரம்- சுன்னாகம், செல்வி நவரத்தினம் கலைவாணி-தாவடி கிழக்கு, சரவணபவன் சரதிலகன், பற்குணலிங்கம் ஜெயந்தன்- சுன்னாகம், இராசரத்தினம் வசீகரன்- நவாலி, ராஜலிங்கம் கார்த்திகேயன்-மல்லாகம் தெற்கு, சீவரத்தினம் சிவநேசன்-பஞ்சு தோட்டம்-

சிவப்பிரகாசம் ரஜனிக்காந்- புலோலி தெற்கு, கணபதிப்பிள்ளை முகுந்தன்-அல்வாய், பொன்னுத்துரை காண்டீபன்-புத்தூர், வேலுப்பிள்ளை திருக்குமரன் -பருத்தித்துறை, யோகதாஸ் அசோக்காந்-அல்வாய், செல்வி சுஜாதா சாமிநாதர்-பருத்தித்துறை, செல்வி சுபாஜினி சுந்தரேஸ்வரன்-அளவெட்டி மேற்கு, அருட்சகோதரி மேரி அந்தோனிற்றா-கரவெட்டி, அருட்சகோதரி மேரி டிலக்ஸி- கரவெட்டி, செல்வி வேணுசா அருணகிரிநாதன்-கொக்குவில் கிழக்கு,

திருமதி அச்சுதன் சந்திரமலர்-வதிரி, திருமதி சுகந்தி சத்தியானந்தன்- சாவகச்சேரி, முத்துக்குமாரு பிரதீபா- சாவகச்சேரி,செல்வி கிரிஜா ஞானசேகரம்- கல்வயல், திருமதி சோபனா குகதாசன்- பண்ணாகம் தெற்கு, சரவணமுத்து பரமேசன்-திரு நெல்வேலி, செல்வி யமீலா துரைச்சாமி-யாழ்ப்பாணம், செல்வி கஜபாலினி இராசையா-நீர்வேலி, செல்வி சைலஜா சிவராஜன்- சாவகச்சேரி, திருஞானசம்பந்தர் ஞானேஸ்வரன்- ஏழாலை,

கனகலிங்கம் நந்தகுமார்-மூத்ததம்பி வீதி, செல்வி மனோகரி கேதீஸ்வரநாதன்-கந்தர்மடம், செல்வி கோமதி செல்வநாதன் - கலைமகள் வீதி, திருமதி சர்வேஸ்வரன் பத்மா- பண்டத்தரிப்பு, செல்வி சிவநந்தினி சிவநாதன்-மானிப்பாய், செல்வி சுவர்ணா கந்தசாமி-கைதடி, செல்வி துஷ்யந்தி விஜயகுமார்- கொக்குவில், செல்வி கோசலை அரியரத்தினம்- யாழ்ப்பாணம், செல்வி சுனிதா செல்வரத்தினம்- கொக்குவில், திருமதி சுனித்திரா சிறிதரமோகன்-யாழ்ப்பாணம்-

செல்வி பற்றீசியா ஞானச்சந்திரன்-இணுவில், திருமதி பத்மபிரியா ரூபன்-ஆனைக்கோட்டை, செல்வி நாகநாதன் காயத்திரி-கொடிகாமம், மதுராம்பிகை சிவானந்தம்-கரணவாய் மேற்கு, நற்குணம் அகிலன்-யாழ்ப்பாணம், செல்வி சிறிகந்தராஜா சுஜிதா- திருநெல்வேலி, செல்வி தணிகாசலம் கலாவித்தியா- கொக்குவில், பாலசுப்பிரமணியம் சசிக்குமார்-நீர்வேலி, செல்வி மதனசுரேந்தரன் சுரேகா-கொக்குவில் கிழக்கு,செல்வி அனுசியா பத்மநாதன்-சுன்னாகம்,

செல்வி சிந்துஷா மகேஸ்வரன்-வல்வெட்டி, செல்வி சிவப்பிரகாசம் லோகதர்சினி-நல்லூர், [illegible] ணன்- அரியாலை, செல்வி தர்சினி ஜெயரட்ணம்- ஆனைக்கோட்டை, அற்புதம் விநோராஜ்-சண்டிலிப்பாய், செல்வி வளர்மதி யோகராஜா-நாவற்குழி தெற்கு, செல்வி நிசாந்தினி இராஜகுலநாயகம்-கைதடி, செல்வி கவிதா சிவஞானசுந்தரம்-நீர்வேலி, திருநானந்தம் ஜெயரூபன்-காரைநகர், கனகசிங்கம் லக்சுமிகாந்-பலாலி வீதி,

குணசீலன் சாள்சன்-நவாலி தெற்கு, செல்வி சிறிபாலசந்திரன் தாரணி-நல்லூர், செல்வி சின்னத்துரை சுதாநிதி-கோப்பாய் தெற்கு, செல்வி முத்துக்கிருஸ்ணன் நிஷாலினி-சங்கத்தானை, கந்தசாமி ஜெயநீதன், மரியநாயகம் கிறிஸ்ரியன் அனுசாந்- மானிப்பாய், செல்வி சிவயோகநாதன் சுதர்சினி-நீர்வேலி, இரட்ணசிங்கம் மகேஸ்வரன்- ஆனைப்பந்தி, செல்வநாயகம் ரஞ்சித் குமார்-கோண்டாவில், செல்வி ஹரிலதா பரமநாதன்- அரியாலை,

செல்வி ஜான்சி சிதம்பரநாதன்- துன்னாலை தெற்கு, செல்வி சிவதர்சினி சின்னத்தம்பி-மல்லாகம், தாமோதரம்பிள்ளை சுகந்தன்- தாவடி, சிவபாதராஜா ராஜீவ்-அல்வாய்,செல்வி யசோதரா சுப்பிரமணியம்- மாதகல், செல்வி சிவஜோதி இராஜரத்தினம்-சண்டிலிப்பாய், செல்வி சாமில்டா கதரின்றோசா- கரவெட்டி, திருமதி ரசிதா சுதாகரன்-விக்னேஸ்வரா வீதி, செல்வி கேமறஜீ நமசிவாயம்-அச்செழு, செல்வி தர்சினி செல்வராஜா-ஊரெழு மேற்கு,

செல்வி சின்னராசா கலாசினி-வாதரவத்தை, செல்வி சிதம்பரப்பிள்ளை லலீஸ்வரி-நீர்வேலி மேற்கு, செல்வி செல்லக்கண்டு சுகன்யா-அச்சுவேலி தெற்கு, திருமதி செல்வலட்சுமி புவனேந்திரராசா-உரும்பிராய் வடக்கு, திருமதி துரைரத்தினம் தெய்வமலர்-இடைக்காடு, திருமதி சதீஸ்கரன் சுஜிந்தா-தம்பாலை, செல்வி லாவண்யா ஸ்ரீசந்திரன்-சங்கணாவத்தை வீதி, செல்வி கந்தையா ஜெயகாந்தா -அச்சுவேலி வடக்கு, மகாதேவன் விநோகாந்தன்-கோப்பாய் வீதி, செல்வி விமலேஸ்வரி கதிர்காமநாதன்- சிறுப்பிட்டி வடக்கு,

செல்வி நடராசா சிவகாமசுந்தரி- அராலி வீதி, செல்வி மன்மதராஜா யாழினி-கஸ்தூரியார் வீதி, திருமதி லிந்துஜா நிமலகுமார்-சிவப்பிரகாசம் வீதி, செல்வி வதனா சுப்பிரமணியம்- இரத்தினவாசா, செல்வி செல்வமாணிக்கம் சுபாசினி-புரூடி லேன், செல்வி வாமதேவன் ஜெனிற்றா-புலவர் வீதி, திருமதி கோகிலா சக்திவேல்- நாவற்கட்டை லேன், செல்வி ஆரோக்கியராசா ஜெயசீலி-கொண்டலடி லேன், செல்வி அப்புத்துரை விஜயலட்சுமி-புத்தூர் கிழக்கு, திருமதி சுகிர்தா சிவயோகன்- புத்தூர் கிழக்கு-

திருமதி மதிவதனி நடனசபை- சிவன் கோயிலடி, செல்வி கைமாறட்சன் ஆன்றுக்சி-பழைய பூங்காவீதி, அருட்சகோதரி மேரிடிலக்சி-லங்கா மாதா மடம், சிவராசா சிவரூபன்-உரும்பிராய் தெற்கு, சுப்பிரமணியம் ஜெயந்தன்-நெட்டிலிப்பாய், திருமதி ரவீந்திரா தவரூபி-வட்டுதெற்கு, சுப்பிரமணியம் கோகுலன்-கோயில் வீதி, செல்வி மகேந்திரன் கலைமகள் -மஞ்சவனப்பதி வீதி, திருமதி கங்கா ஜெகதீஸ்வரன்-கருவேலடி வீதி, திருமதி அன்ரனிற்றா ஜெயக்குமாரி-செட்டிசீமாலேன்,

செல்வி யூட்டினா சுபாசினி-பருத்தித்துறை வீதி, செல்வி சகாயமேரி விசுவாசம்-நீற்றம்மா கோயிலடி, செல்வி நற்குணசிங்கம் பிரவீனா-அச்சுவேலி வடக்கு, செல்வி குமாரசாமி துவாரகைமலர்- அச்சுவேலி தெற்கு, செல்வி ஸ்ரீகாந்தா பிரசாந்தி- பாற்பண்ணை வீதி, திருமதி ரூமினா றெஜிமோகனதாஸ்-சென் மேரிஸ் வீதி, திருமதி சசிக்குமார் விஜித்திரா-10ஆம் கட்டை, திருமதி அனிதா கருணாகரன்-நாவலர் வீதி, செல்வி மரீனா சியாமினி-ஈச்சமோட்டை வீதி, திருமதி ஜெனிதா மெனஸ்ஸஸ்- ஐஸ்பிளான்ற்-

செல்வி அலோசியஸ் தர்சினி-ஆசீர்வாதப்பர் வீதி, திருமதி மார்ரெலன்ஸ் ரொசிரா-6ஆம் குறுக்குத்தெரு, செல்வி தனசிலி மரியநாயகம்-மத்தியூஸ் வீதி, சின்னப்பு இந்திரராசா-பழைய வீதி, மேரிறோசா ஹெரால்ட்-4ஆம் குறுக்கு, திருமதி கிரிதரன் உஷாநந்தி-பிரதானவீதி,செல்வி ரோகினி வீரசிங்கம்-அரசடி வீதி, கந்தசாமி துற்ஜெயந்தன்-கேணியடி ஒழுங்கை, திருமதி தேவகி யோகேந்திரன்-நீர்வேலி மேற்கு,

திருமதி அபரஞ்சினி சிவகணநாதன்-இணுவில் மேற்கு, சின்னராஜா பிரதீபா-நல்லூர் வடக்கு, சிவராசா சிவகாந்தன் கோகிலா வீதி-

கந்தையா மயில்வாகனம்-அளவெட்டி, [illegible]சன்- சூழானை, தவ[illegible]லை, சாந்தினி சுரேஸ்குமார்- சுன்னாகம் கிழக்கு,பூபாலசுந்தரம் பிரகாஸ் - ஏழாலை, செந்தில்நாதன் சபேசன் - அளவெட்டி மேற்கு, புனிதநாயகி-அளவெட்டி தெற்கு, கவிதா சந்திரமோகன் - ஆனைக்கோட்டை, இராசா கிருஸ்ணசேகரன்- அளவெட்டி,தர்ஜினி தில்லைநாதன் - ஏழாலை மேற்கு, சாரதாதேவி ராதாகிருஸ்ணன் காளிகோவிலடி, நந்தினி இடபாரூடன் - அளவெட்டி தெற்கு, சிவராசா நாகதீபன் - பங்களா லேன், மேரி இமெல்டா அல்மினஸ் - 44 கோவில் வீதி ஒழுங்கை, அனற்பிறிம்றோல் சதீஸ்குமார் - குளமங்கால், பிரணவசோபினி ரவிசங்கர்- மகாதனை, துர்க்காபுரம், பரராசசிங்கம் ஸ்ரீசங்கர் ஞானப்பிரகாசம் வீதி, கலைமதி ஈஸ்வரானந்தம் - அராலி மத்தி, மரிய ஸ்ரெலா - நவாலி தெற்கு, சங்கரப்பிள்ளை யஷோதரன் - சுழிபுரம் கிழக்கு, ரவுரி மார்க்கண்டு - தெல்லிப்பழை, தேமொழி குகதாஸ் - நெல்லோடை, கவிதா நடராசா- ஏழாலை மேற்கு, யசோத்தா ரஜீனந்தா - வேலவளவு, துறாஜினி துரைராசா - வட்டப்புலம், அமித்தா ஜெயசீலன் - ஆர்க் வீதி, ஜேசுதாசன் ஜெயசித்திரா - உடுவில் தெற்கு, மரியசாந்தனா றீகன் - இளவாலை மேற்கு, கவிதா பரமேஸ்வரன் - இளவாலை, இராசையா தாட்சாஜினி - கற்பகப் பிள்ளையார் கோவிலடி, றெனா அன்ரனிசியா - பற்றிமா வீதி, இராசையா ஷசிகுமார் - முருகமூர்த்தி கோவில் வீதி, ஜேசுதாசன் அனுஸ்டதாஸ் - பிரதான வீதி, இளையதம்பி ரமணன் - காளிகோவிலடி, சண்டிலிப்பாய் மத்தி, கலைவாணி சிவானந்தன் - வீரபத்திரர் கோவிலடி, காசினிதேவி நடராசா - வங்கியடி, இன்னாசி முத்து அன்ரன் - பற்றிமா வீதி, ஏகாம்பரநாதன் சிறிறங்கன் - பூமனை ஒழுங்கை, கார்த்திகேசு சிவரஞ்சன் - சிவகுரு வீதி, கௌசலா திருவருள்நாதன் - வட்டு வடக்கு, மகேஸ்வரி நடன சிங்காரவேல் - மூத்தவிநாயகர் கோவிலடி, தில்லைநாதன் நடனசபை - சிவன்கோவிலடி, திருமதி வாசுகி தவச்செல்வம் - சண்டிலிப்பாய்வீதி, செல்வி சிவரஞ்சனி - திருவருளகம், கலாவதனி ரமேஸ் - சென்ற் ஜேம்ஸ். றெயினா பீற்றர் - நவாலி கிழக்கு, நிரூஜா கந்தசாமி - மயிலங்காடு, லதாஜினி அமிர்தலிங்கம் - சண்டிலிப்பாய் மேற்கு, டொறின் ஜெயதிபா ஒலிவர் - FPB, அருகாமை, சசிக்குமாரி சின்னத்தம்பி - சுழிபுரம் மத்தி, பவானி ஆனந்த கிருஸ்ணகுமார் - மூளாய் தெற்கு, விஜயராணி வரதீஸ்வரன் -கலையரசி வீதி நவாலி தெற்கு, சாந்தி விநாயகமூர்த்தி - வட்டு வடக்கு, நிர்மலா ஞானாந்தன்- அரசடி ஒழுங்கை, பிரியா குமாரசாமி - ஏழாலை வடக்கு, அஜந்தா அப்புத்துரை - வட்டு வடக்கு, கொன்சீலியா செல்வரெத்தினம் - புனித செபஸ்தியன் வீதி, சின்னத்துரை கிருஸ்ணசாந்தி - அலுக்கை, தீபா சந்திரபவன் - மூளாய் தெற்கு, ஜோசப் றேசானி - அலுக்கை, தர்சினி சிவராசா - நிற்சாமம், பொன்னுத்துரை ஜெகநேசன்-குளமாங்குளம், கௌசலா சிவலிங்கம்-பாடசாலை வீதி, சுகந்தினி கமலதாஸ் - அளவெட்டி மத்தி, சிவகுமார் திருமாவளவன் - லீலா பேக்கரி லேன், பரிமளா சிவசுப்பிரமணியம் அராலி தெற்கு, ஜோசெவ் கதரின் - அரசடி வீதி, பிரியதர்சினி சிவசுப்பிரமணியம் , தாமரைச் செல்வி பூபாலன் - வேலவில்லா, தம்பிநாயகம் நாகநாதன் - சித்திரமேழி, ஜெயபானு சுரேந்திரநாத் - சோடாக்கம்பனி லேன், தாட்சாயினி வேலுப்பிள்ளை - காளிகோவிலடி, ஜேம்ஸ் யூட் நிரஞ்சன் - செனற் ஜேம்ஸ் வீதி, முரளிதரன் சகாயமேரி - சாகய மாதா கோவில், துரைராசசிங்கம் கலைச்செல்வி - கல்லூரி வீதி, நடேசன் சிறிதரன் - விறுமர் கோவிலடி, சிந்துஜா ஸ்ரீகோபாலன் - சீனாப்புலம், கரணவாய் வடக்கு, இராஜனி ரஜனிகாந் - அம்பன், ரதிதேவி கணபதிப்பிள்ளை - அம்பன், ஆனந்தக்கிளி தேவகுமார் - தும்பளை தெற்கு, தேவநாயகம் டெனிஸ் மேரி தும்பளை தெற்கு, சாந்தினி பேரம்பலம் - தேத்தா வடலி, ஜெயரதி அருட்செல்வம் - துவாளி வீதி, தயானி தவராசா - பாரதி வீதி, சோபனா தூயவன் - கற்கோவளம், சிவானந்தராஜாகுருக்கள் ரூபா - வியாபாரி மூலை, செல்வநாயகம் சுபா- பந்தியாவத்தை, நளாயினி அரவிந்தன் - கல்லடி ஒழுங்கை, பஞ்சவர்ணம் தயாளதாஷன் - உடுப்பிட்டி வீதி-

திருமதி விஜிலிங்கேஸ்வரன்-கந்தன் இல்லம், தவேந்திரன் வித்தியானந்தன்-மாயக்கை, திருமதி செல்வநாதன் பிரதீபா-ஒதியடி பொலிகண்டி, திருமதி அனுராதா ஜெகநாதன்- அண்ணா சிலையடி, திருமதி ராஜ்மனோகரன் கமலினி-குச்சம் ஒழுங்கை, திருமதி தயாநிதி சசிகரன்-அவ்வொல்லை வீதி, செல்வி சிறிவித்தியா சிறியானந்தம்- அரசடி ஒழுங்கை,

(17 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் உதயன் உப பணிமனை

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நெல்லியடியில் இன்று திறப்பு விழா (14.11.2009)

# இவர்கள் வாழ்த்துகிறார்கள்

## மென்மேலும் வளர்ந்து சிறப்புறுக!



செல்வச்சந்நிதி மாணிக்க விநாயகர் சந்நிதி முருகன் துணையுடன் உதயன் பத்திரிகைக்கு ஆசியுரையினை வழங்குகின்றேன். இப்பத்திரிகை தமிழ் மண்ணில் காலடி பதித்து பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலும் முன்னணியில் திருநடை வீறுநடைபோட்டு தனது 25 ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இவ்வேளையில் வடமராட்சி மண்ணிலும் தனது உப பணிமனையை ஆரம்பிக்கின்றது. இப்பத்திரிகை 50 ஆம் ஆண்டு பொன்விழவையும் 100 ஆம் ஆண்டு நூற்றாண்டு விழாவையும் இதே பாணியில் மென்மேலும் பற்பல உப பணிமனைகளையும் திறந்து தமிழ் மக்களின் நன்நெறி வளர்ச்சிக்கு உதவி மென்மேலும் வளர எமது நல்லாசிகள் உரித்தாகுக.

தங்கராசா ஐயர் குகனேந்திரா ஐயர்,
பிரதம குரு,
செல்வச் சந்நிதி முருகன் ஆலயம்,
தொண்டைமானாறு.

## வடமராட்சியில் சேவை மேலும் சிறக்கட்டும்



தமிழ் மக்களின் மனம் நிறைந்ததும் பல விருதுகளைத் தனதாக்கிக் கொண்டதுமான உதயன் நாளிதழ் வடமராட்சி நெல்லியடியில் தனது உப பணிமனையினை இன்று (14.11.2009) சனிக்கிழமை திறந்து வைப்பதையிட்டு வடமராட்சிமண் பெருமையடைகிறது. வடமராட்சியில் மென்மேலும் உதயனின் சேவை சிறப்பாகத் தொடர நெல்லியடி தடங்கன் புளியடி முருகப் பெருமான் உடன் இருந்து அருள் ஆசி வழங்கப் பிரார்த்திக்கிறேன்.

சிவஸ்ரீ. அ. செல்வராசக்குருக்கள்.
(பிரதமகுரு, நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் ஆலயம்)

## மக்களின் மனம் கவர்ந்தவன் உதயன்



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உயர்ந்த இலட்சியத்துடன் செயற்பட்டு வரும் உதயன் நாளிதழ் தனது பிராந்தியக் கிளை ஒன்றினை வடமராட்சியில் நெல்லியடியில் ஸ்தாபிப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். பலவிதமான சோதனைகள், போர்ச் சூழல், போக்குவரத்துத்தடை, காகிதாதிகளின் தட்டுப்பாடு போன்றவற்றிற்கு மத்தியிலும் உதயன் தொடர்ச்சியாக வெளிவந்தமை அதன் சாதனையையும் நடுநிலைமையையும் புலப்படுத்துகின்றது. நேர்மையான முறையில் பக்கச் சார்பின்றி ஆக்கபூர்வமான செய்திகள் தரவுகள் மற்றும் பல்வகைத் தொகுப்புக்களை மக்களுக்கு வழங்கி அவர்களின் மனங்களில் ஒரு உரிய இடத்தினைப் பெற்றிருக்கின்றது உதயன்.

நெல்லியடியில் ஸ்தாபிக்கப்படும் கிளையானது பொதுமக்களுக்கு பல்வேறு வகையான வழிகளில் விளம்பரங்களையோ முக்கிய செய்திகளையோ உடனுக்குடன் உதயனுடன் பகிர்ந்து கொள்வதற்கு வசதி அளிக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தினைப் பிரதேச மக்கள் நன்கு பயன்படுத்த வேண்டும்; பயன்படுத்துவார்கள் என நம்புகின்றேன். இந்த நாளிதழ் மேன் மேலும் சிறப்புறவும் அதில் பணியாற்றும் அனைவரினதும் வாழ்வு வளம் பெறவும் உதயன் இன்னும் வளர வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் மா. நடராஜசுந்தரம்,
முகாமைக் கற்கையியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

## வடமராட்சியில் மீண்டும் உதயன் உப பணிமனை



வடமராட்சியில் 'உதயன்' உப பணிமனை ஒன்றை இன்று திறப்பதையிட்டு நீண்ட காலம் [illegible]துப்பத்திரிகையை விற்பனை செய்யும் [illegible]வர் என்ற வகையில் மகிழ்ச்சியடை[illegible]

[illegible] நெருக்கடிகளுக்கு மத்தியில் தினமும் [illegible]வந்து கொண்டிருக்கும் 'உதயன்' பத்தி[illegible]கை வடமராட்சி மக்களுக்குத் தனது பணியை விரிவுபடுத்தி மீண்டும் தனது அலுவலகத்தை அமைப்பதை வரவேற்கின்றேன்.

முன்னர் நெருக்கடியான காலகட்டத்தில் தனது அலுவலகத்தை வடமராட்சியில் இயக்கி மக்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றியது போன்று இன்று திறக்கும் அலுவலகம் மூலம் வடமராட்சி மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய வழி பிறந்துள்ளது.

வடமராட்சி மக்கள் சார்பில் வரவேற்கும் நாம் உதயன் தனது மக்கள் பணியைத் தொடர வாழ்த்துகிறோம்.

அன்ரன் செல்வராஜா,
பத்திரிகை முகவர், நெல்லியடி.

## உதயன் மென்மேலும் வளர்க!



பத்திரிகா தர்மத்திற்கு அமைவாக சகல தகவல்களையும் உடனுக்குடன் பிரசுரித்து யாழ். மக்களுக்கு தனித்துவமான சேவையை வழங்கிவரும் உதயன் பத்திரிகை வடமராட்சி மக்களின் நன்மை கருதி தனது சேவையின் நிமிர்த்தம் நெல்லியடியில் தனது புதிய கிளையை இன்று ஆரம்பிப்பது வடமராட்சி மக்களுக்குரிய காலத்தின் தேவையாகும். உதயன் உப பணிமனையைச் சார்ந்த அனைவரையும் வாழ்த்துவதோடு இப்பத்திரிகை மேன் மேலும் வளர வாழ்த்தி அமைகின்றோம்.

சுபம் சாந்தி
குருபணியில் செ.மோகனதாஸ்,
சந்நிதியான் ஆச்சிரமம், செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு.

## மக்கள் பணிதொடர்க, வளர்க!



உதயன் உபபணிமனை நெல்லியடி மக்கள் வங்கிக்கு முன்பாக அமையும் என்ற செய்தி அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி. பொதுவாக செய்திகள் உடனுக்குடன் பரிமாற்றம் செய்ய வேண்டிய காலகட்டத்தில் நாம் வாழ்கின்றோம். இதனை உதயன் நிறுவனத்தினர் பல சோதனைகள் மத்தியிலும் பூர்த்தி செய்து வருகின்றார்கள். அவர்களின் மக்கள் பணி தொடர்க, வளர்க!

என்றும் இறைபணியில்
அன்னையின் அடியவன் சித்ருபானந்தா.

# இவர்கள் வரவேற்கிறார்கள்

யாழ். குடாநாட்டின் வளர்ச்சியும், வளமும், பெருமையும் பெற்ற பிரதேசம் வடமராட்சி. தனக்கென பல தனித்துவங்களைக் கொண்ட பகுதி இது. கல்விமான்கள், துறைசார் வல்லுநர்களை அன்றும் இன்றும் தன்னகத்தே கொண்டு மிளிரும் நிலப்பரப்பு இது.

இப்பிரதேசத்தில் கல்வி அறிவும் எழுத்தறிவும் என்றுமே மேலோங்கி நிற்பது கண்கூடு. அதனால் வாசிப்புப் பழக்கம் இங்கு மேலோங்கி நிற்கிறது என்பது விவாதத்துக்கு உரியதோ ஆராய்ச்சிக்கு உரியதோ அல்ல.

இத்தகு சிறப்புகளைக் கொண்ட வடமராட்சிப் பிரதேச மக்களின் மிகப் பெரும் அபிமானத்துக்கும் விருப்பத்துக்கும் உரிய பத்திரிகை உதயன். கடந்த 24 வருடங்களாக இப்பிரதேச மக்களின் செல்லப்பிள்ளையாக அவர்களுடன் நெருக்கமாக ஒட்டி உறவாடுபவனும் உதயனே.

பொழுது விடிந்ததும் உதயனில் முழித்தால் மட்டுமே அன்றைய தினம் தமக்கு வெளிச்சமுள்ள நாளாக அமையும் என்று கருதுவோரே மிக மிகப் பெரும்பாலான வடமராட்சி மக்கள். பாடசாலை மாணவர் தொடக்கம் உயர்நிலைப் பதவிகளில் இருப்பவர்கள் வரை உதயனை முதலில் கையில் எடுத்த பின்னரே தமது கருமத்தினைத் தொடங்குகின்றனர்.

உதயன் உபபணிமனை ஒன்று முன்னர் இயங்கிய போது வாசகர்கள், வாடிக்கையாளர்கள் தமது தேவைகளை இலகுவாகவும் விரைவாகவும் பூர்த்தி செய்ய முடிந்தது.

கால வர்த்தமானங்களாலும் பல்வேறு காரணங்களாலும் ஏற்பட்ட மாற்றங்களால், அசாதாரண சூழ்நிலைகளால் இயல்புநிலை, தேய்ந்தும் ஒழிந்தும் போனதால் உதயன் வாசகர்கள், வாடிக்கையாளர்கள் சில காலமாக பல சிரமங்களுக்கு ஆளாகினர்.

அவற்றைப் போக்கும் விதத்தில் மீண்டும் உதயன் உப பணிமனை நெல்லியடியில் இன்று திறந்து வைக்கப்படுவதை வடமராட்சி மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர்.

வடமராட்சி மண்ணில் மீண்டும் உதயன் உபபணிமனை ஆரம்பிக்கப்படுவது இங்குள்ள மக்கள் எல்லோருக்கும் வரப்பிரசாதமாகும்; மகிழ்ச்சி தருவதாகும். உதயனின் மக்கள் பணி வளர்க தொடர்க என்று வடமராட்சி வாழ் மக்கள் சார்பில் வாழ்த்துகிறோம்.

★ வ.கந்தசாமி, பிரியங்கா புத்தகசாலை, உடுப்பிட்டி சந்தி.
★ சபா ரவீந்திரன் (J.P.U.M) சட்டத்தரணி, தலைவர் தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில் தர்ம பரிபாலன சபை, தும்பளை கிழக்கு, சனசமூக நிலையம்.
★ ஆ.குலநாதன் இணைப்பாளர், வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் (VOGT) கரவெட்டி.
★ க.அரியரெட்ணம், பழைய பொலிஸ் நிலைய வீதி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை.

## பணியைப் பாராட்டுவோம்



'உதயன்' பத்திரிகை நிறுவனம் தனது உப பணிமனையை எமது நெல்லியடி பிரதேசத்தில் ஆரம்பிப்பதனையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். பல சவால்களுக்கு முகம் கொடுத்து நடுநிலமை தவறாமல் தொடர்ந்தும் தமிழ் சமூகத்திற்கு இப்பத்திரிகை செய்துவரும் பணியைப் பாராட்டி இயேசுக் கிறிஸ்துவின் அருளாசி கூறி நிற்கிறோம்.

அருட்பணி எமில் போல்,
பங்குத்தந்தை,
புனித அந்தோனியார் ஆலயம்,
கரவெட்டி.

## உதயன் உப பணிமனை தொடர்ந்து இயங்கட்டும்



வடமராட்சி மண்ணில் காலடி பதிக்கும் உதயன் உப பணிமனையின் சேவை சிறக்க வாழ்த்துக்களும் ஆசிகளும் பல கோடி!

உதய வேளையிலே வாசகர்களின் இல்லமெங்கும் உதயம் தரும் உதயன் பத்திரிகை உப அலுவலகம் வடமராட்சி மண்ணிலே ஆரம்பிக்கப்படுவது அதுவும் வெள்ளி விழாவை அண்மிக்கும் ஆண்டிலே ஆரம்பிப்பது பெருமகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இந்த உப பண்மனையை ஆரம்பிப்பதன் மூலம் வடமராட்சி வாழ் மக்கள் யாழ். நகர் செல்லாது வடமராட்சியிலேயே தமது தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கின்ற நிலையை ஏற்படுத்திக் கொடுத்த உதயன் பத்திரிகை நிர்வாகத்தினர் பாராட்டுவதற்குரியவர்கள்.

அதிகாலை எழுந்ததும் அனைவரது கைகளிலும் தவழுவது உதயன் பத்திரிகையாகும். இவ்வாறு மக்களுக்கு அளப்பரிய சேவை செய்து தினந்தோறும் உதயன் பத்திரிகையை ஈன்றெடுத்துக் கொடுக்கும் உதயன் பத்திரிகை நிறுவன நிர்வாகத்தினர், உத்தியோகத்தர் அனைவருக்கும்நெல்லியடியில் உப பணிமனை ஆரம்பிக்கப்படும் இவ்வேளையில் எனது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு, இப்பணிமனை தொடர்ந்து இயங்கி சிறந்த சேவையை வழங்க வேண்டும் என வல்லை நகரின் காவல் தெய்வமாக விளங்கும் முத்துமாரித் தாயை பிரார்த்தித்து நல்லாசிகளையும் கூறி நிற்கிறேன்.

''அம்மாவின் அருளாசி அடியேனின் நல்லாசி''
சிவாகம சித்தாந்த ஞானதேசிகபானு''
பிரதிஷ்டாலங்கார சித்தாந்த ஸாகரம் '' பிரதிஷ்டா சிரோமணி''

சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P,
சிவாச்சாரிய பீடாதிபதி, அகில உலக சைவக் குருமார் சம்மேளனம். (பிரதம குரு,வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்)

## வடமராட்சி மக்களுக்கு வரப்பிரசாதம்



உதயன் நாளேட்டின் உப பணிமனை ஒன்று நெல்லியடி கரவெட்டிப் பிரதேசத்தில் அமைவது வடமராட்சி மக்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம். இதுகாலவரை பல மைல்கள் தூரம் பல நெருக்கடிகளைத் தாண்டிச் சென்று செய்திகளைக் கொடுத்த மக்கள் மிகவிரைவாகவும் இலகுவாகவும் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வாய்ப்புக் கிட்டியுள்ளது. இப்பணிமனை பல்லாண்டு காலம் மக்களுக்கு நீதியான சேவையைச் செய்ய வாழ்த்துவதோடு, உதயன் இது போன்ற கிளைகளை நாட்டின் பல இடங்களிலும் திறக்க இறை ஆசியை வேண்டி வணங்குகின்றேன்.

திருஅருள்ஜோதி ஆ.வடிவேலு,
தவிசாளர், மத்தியஸ்த சபை -249
வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.

# இவர்கள் நன்றி சொல்கிறார்கள்

கால் நூற்றாண்டாகத் தமிழ் வாசகர்களின் மனதைக் கவர்ந்த நாளிதழாக வலம் வருபவன் 'உதயன்' உயிர் இழப்புகள் உடைமையிழப்புகள், மிரட்டல்கள், நெருக்குதல்கள் எனப் பல்வேறு இடர்களையும் எதிர்கொண்டு தன்னுடைய மக்கள் பணியை உதயன் அடக்கமாக, ஆற்றி வருகின்றான்.

பத்திரிகைத் துறையில் தமிழ் மக்கள் மத்தியில் முதல்வனாக உயர்ந்து நிற்கும் உதயனின் மீது பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் ஈடுபாடு கொண்டிருப்பது ஆச்சரியமான விடயமல்ல. அத்தகைய வாசகர்களில் நானும் ஒருவன் எனினும் ஏனைய பிரதேசங்களை விடவும் எமது வடமராட்சிப் பகுதியில் உதயன் நாளிதழைப் பெறுவதில் இடைப்பட்ட காலத்தில் சில சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அத்துடன் உதயனில் விளம்பரங்களைப் பிரசுரிப்பதற்கு வடமராட்சியில் இருந்து யாழ்ப்பாணம் வரை செல்ல வேண்டிய நிர்ப்பந்தமும் இருந்தது. அப்படியிருந்துங்கூட என்னதான் சிரமம் ஏற்பட்டாலும் உதயனைத் தேடிப்பிடித்து வாங்கி வாசிப்பதிலும், நீண்ட தொலைவினைக் கடந்தாயினும் உதயன் பணிமனைக்குச் சென்று விளம்பரங்களைக் கொடுத்துப் பிரசுரிப்பதிலும் வடமராட்சிப் பகுதிமக்கள் பின்னின்றதில்லை. இந்நிலையில் வடமராட்சிப் பகுதி மக்கள் படுகின்ற இந்தச் சிரமங்களைச் சரிவர இனங்கண்டு கொண்ட உதயன் நிறுவனத்தினர் அவற்றை நிவர்த்திக்கும் வகையில் இன்று நெல்லியடியில் தமது உப பணிமனையைத் திறப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். உதயன் வடமராட்சி எங்கும் மீண்டும் கதிர் வீச உள்ளான். வெள்ளி விழா ஆண்டில் கால்பதிக்கக் காத்திருக்கும் உதயனின் நெல்லியடி உப அலுவலகம் வடமராட்சி வாசகர்களுக்குப் பெரும் பேறாக அமைந்துள்ளது.மக்களின் சிரமங்களைக் களைவதற்காக மேற்கொண்ட செயலால் என்றென்றைக்கும் மக்களின் நன்றிக்குரியவனாக உதயன் ஆகியுள்ளான் என்று கூறுவதே சாலப் பொருத்தமாக அமையும்.

பா.பாலசுந்தரம்-நவிண்டில், க.சண்முகநாதன்-புலோலி,
நு.விநோதன்-கரவெட்டி, வே.ஆறுமுகம்-தும்பளை.

இருபத்தி நான்காம் ஆண்டு நிறைவில் வடமராட்சி மக்களின் வேலைப் பழுவைக் குறைக்க நெல்லியடியில் கிளை பரப்பும் உதயனை வாழ்த்தி நிற்கின்றோம்.

கிருஷ்ணா
பல்பொருள் வாணிபம்,
கொழும்பு-யாழ். பத்திரிகை விற்பனையாளர்,
தொண்டைமானாறு வீதி,உடுப்பிட்டி.

உதயன் இருபத்தி ஐந்தாம் ஆண்டில் காலடி வைப்பதுடன் வடமராட்சி மக்களின் மனதையும் கவர்ந்து கொள்ள உப பணிமனையினை நெல்லியடியில் திறந்து வைப்பதை வழ்த்துகின்றோம்.

விநாயகா ஹாட்வெயர்,
எம்மிடம் மின்சார உபகரணங்கள்,
இரும்பு வகை பெயின்ற் வகைகளை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
வல்வெட்டித்துறை வீதி,
உடுப்பிட்டி.
தொ.பே.இல. 0776105914

நாளேட்டின் நாயகனே! தமிழ் மக்கள் வாழ்வில் அதிகாலை வேளையில் உதிக்கின்ற கதிரவனை ஒத்த உதயனே! மீண்டும் வடமராட்சி மண்ணில் கால் பதிக்க வருவதை வரவேற்று வாழ்த்துகின்றோம்.

த லாண் மார்க் ஸ்ரேசனறி,
பிரதான வீதி, பருத்தித்துறை.

★ பாடசாலை உபகரணங்கள்
★ அழகு சாதனப் பொருள்கள்
★ அன்பளிப்புப் பொருள்கள்
★ காகிதாதிகள்
★ புத்தம் புதிய டிஜிட்டல் இயந்திரத்தின் போட்டோப் பிரதி, பொதிகள் சேவை (குறைந்த கட்டணத்தில்) கொழும்பு-வெளிநாடு.

0778332890
THE LAND MARK
STATIONERS
215 MAIN STREET
POINT - PEDRO.

வெள்ளி விழா ஆண்டில் உலாவரத் தயாராகும் உதயன் நிறுவனம் வடமராட்சி மக்களின் வசதி கருதித் தன்னுடைய உப பணிமனையை நெல்லியடியில் திறந்து வைப்பதை வாழ்த்தி வரவேற்கின்றோம்.

உரிமையாளர்
திருமதி ச.குகனேந்திரா.

கலா வாணிபம்,
3ம் சந்தி, கெருடாவில்,
தெற்கு, கெருடாவில்.

தனது இருபத்தைந்தாவது ஆண்டில் காலடி வைக்கும் தருணத்தில், தனது பிராந்திய அலுவலகத்தை நெல்லியடியில் திறந்து சேவையாற்றவுள்ள உதயனை வடமராட்சி மக்கள் சார்பில் ஆசிகள் கூறுகின்றோம்.

தாசன் வீடியோ சென்ரர்,
யாழ். பிரதான வீதி, பருத்தித்துறை.
எம்மிடம் போட்டோப் பிரதி சேவை, வீடியோப் பிரதி, சீடி வகைகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவாலை ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவு புதிய கட்டட திறப்பு விழாச் சிறப்பு மலர் (15.11.2009)

## இளவாலை மக்களின் நீண்டநாள் கனவு

இளவாலைப் பிரதேச மக்களின் நீண்டநாள் கனவாக இருந்த இந்த ஆரம்பச் சுகாதார பராமரிப்பு நிலையம் அதற்கு என ஒரு இடம் பெறப்படாத நிலையில் தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வந்துள்ளது. எனினும் இப்பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமகன் ஒருவரின் அன்பளிப்பில் பெறப்பட்ட காணியில் தனது சேவையை நாளை ஆரம்பிப்பதையிட்டுப் பெருமை அடைகிறேன். இந்த நிலையம் இப்பிரதேச மக்களின் சுகாதார சேவையில் முக்கிய பங்கினை வகிக்கும் என நான் நம்புகிறேன்.

இந்த ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் மூலம் பெறக்கூடிய சேவையை முழுமையாக இப்பிரதேச மக்கள் பெற்று நன்மைய டைய எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

இ.இரவீந்திரன்
செயலாளர்,
சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு,வடமாகாணம்.

## நீடித்து நிலைத்து நின்று சேவையாற்ற வாழ்த்துக்கள்



இளவாலை ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு நிலையத்திற்கான புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பதையிட்டு யாழ்.மாவட்ட சுகாதாரத் திணைக்களம் பெருமையடைகிறது. நீண்டகாலமாக வாடகை வீட்டில் இயங்கி வந்த இந்த வைத்தியசாலை இன்று சொந்தக்காணியில், சொந்தக் கட்டடத்தில் தலைநிமிர்ந்து நிற்பது மகிழ்ச்சியாக இருக்கிறது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல வைத்தியசாலைகளுக்கும் சொந்தக்காணியில் சொந்தக்கட்டடம் அமைக்க வேண்டும் என்று நாம் குறித்த இலக்கு இளவாலையுடன் பூரணமாவதை எண்ணி மனநிறைவு கொள்கிறோம்.

இந்த வைத்தியசாலையை அமைக்கக் காணியை எமக்கு மனமுவந்து அன்பளிப்புச் செய்த நல்லுள்ளங்களுக்கு எமது நன்றிகள். இக்காணியில் வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தின் PSDG நிதியிலிருந்து இக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிதியை வழங்கிய மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கும், மாகாண சுகாதாரப் பணிப்பாளருக்கும் எமது நன்றிகள்.

இந்த வைத்தியசாலையின் மேம்பாட்டிற்காகப் பாடுபட்டுவரும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினருக்கு எமது நன்றிகளும் பாராட்டுகளும். நாளை திறந்து வைக்கப்படும் இந்த வைத்தியசாலை நீண்டகாலம் நிலைத்து நின்று இப்பிரதேச மக்களுக்குச் சேவையாற்ற எனது வாழ்த்துக்களும் நல்லாசிகளும்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

## சிறப்பான சேவை கிடைக்கட்டும்

இளவாலை ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையக் கட்டடத் திறப்பு விழாவுக்கு வாழ்த்துரை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பல பிரதேசங்களையும் உள்ளடக்கிய மக்களுக்கு சேவையாற்றிக் கொண்டிருப்பதும், இந்த வைத்தியசாலைக்கென அபிவிருத்திச்சபை ஒன்று இயங்கிக் கொண்டிருப்பதும், பாராட்டப்பட வேண்டியதாகும். நாளை புதிய நிரந்தர கட்டடத்துள் பிரவேசிக்கும் இந்த வைத்தியசாலை பல்வேறு துறைகளிலும் விரிவாக்கம் பெற்று இப்பிரதேச மக்களுக்கு சிறப் பான சேவையை வழங்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

சு.முரளீதரன்
பிரதேச செயலாளர், வலிகாமம் வடக்கு,
தெல்லிப்பழை.

## என்றும் இறையருள் பெருகட்டும்



"மருத்துவன் நோய் அற்றவர்க்கன்று நோயுற்றவர்க்கே தேவை" என்று நமது ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து திருவாய் மொழிந்துள்ளார். பழம்பெரும் சிறப்பையும், பன்நெடுங்கால வரலாற்றையும், அதிக சனத்தொகையையும் கொண்டது இக்கிராமம்.

ஒரு நிரந்தரக் கட்டடத்தைப் பெற்றுக் கொள்ள வழிசமைத்த இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

அந்தஸ்த்து, இனம், மதம், மொழி என்பவற்றைக் கடந்து வியாபித்து நிற்கும் சேவையே வைத்தியசேவை. எனவே மருத்துவர்க்கெல்லாம் மருத்துவரான இயேசுக் கிறிஸ்துவின் அருளோடும், ஆசியோடும் இங்கு மருத்துவ சேவை சிறப்புற இடம்பெற இறையருள் வேண்டுவதுடன் இம்மருத்துவமனை மென்மேலும் மக்களுக்குத் தேவையான நவீன வசதிகளுடன் வளர்ச்சியடைந்து சேவையாற்ற வேண்டுமெனவும் ஆசி கூறுகிறேன்.

அருட்பணி A.P.தேவசகாயம் அடிகள்
பங்குத்தந்தையும், குருமுதல்வரும்,
இளவாலை மறைக்கோட்டம், இளவாலை.

## இன்றைய சூழலில் அவசிய தேவையாகும்



இளவாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஆரம்ப மருத்துவப்பிரிவு கட்டடத் திறப்புவிழாவிற்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

காலத்தின் தேவை அறிந்து இந்த அரிய கைங்கரியத்தை மேற்கொண்ட இளவாலை வைத்தியசாலை அபிவிருத்திச்சபை உறுப் பினர்களுக்கும், தனக்குரிய காணியை வைத் தியசாலைக்காக மனமுவந்து வழங்கிய டாக்டர் சற்குண நாதன் அவர்களுக்கும் இன்னும் பல வழிகளில் நன்கொடை கள் வழங்கிய நல்ல உள்ளங்களுக்கும் இறையருள் கிடைக்கப் பிரார்த்திக் கின்றேன்.தற்போது நாம் வாழ்கின்ற சூழ்நிலையில் மிகப்பிரமாண்டமான கோயில்களைக் கட்டி எழுப்புவதை விட ஆதுலர் சாலைகள், வைத் தியசாலைகள், பாடசாலைகள் என்பனவே அவசியம் தேவைப் படுகின்றது. எமது மக்களின் நல்வாழ்வை கருத்திற்கொண்டு செயற் கரிய இந்தச் செயற்பாட்டை நிறைவேற்றிய அனைவரையும் நான் மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

சாந்தி நாவுக்கரசன், பணிப்பாளர்,
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு-4



நிகழும் மங்களகரமான சர்வதாரி வருடம் கார்த்திகை மாதம் 15 ஆம் திகதி நாளை (15.11.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு புதிதாக அமைக்கப்பட்ட ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு பிரிவு வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்படும்.

**பிரதம விருந்தினர்**
உயர்திரு. இ.இரவீந்திரன்
(செயலாளர் , சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வடமாகாணம்)

**சிறப்பு விருந்தினர்கள்**
வைத்திய கலாநிதி A.E.ஞானசோதி
(மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாணம்)
வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்
(பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)

**கௌரவ விருந்தினர்கள்**
வைத்திய கலாநிதி த.பேரானந்தராஜா
(பொது வைத்திய நிபுணர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)
வைத்திய கலாநிதி க.இராதையான்
(சுகாதார வைத்திய அதிகாரி, தெல்லிப்பழை)
வைத்திய கலாநிதி D.ஜெயக்குமாரன்
(சுகாதார வைத்திய அதிகாரி, மானிப்பாய்)
எந்திரி க.குகநேசன்
(பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்)
திரு.சு.முரளிதரன்
(பிரதேச செயலாளர், தெல்லிப்பழை)
திரு.ம.ஜெகூ
(பிரதேச செயலாளர், சண்டிலிப்பாய்)

### நிகழ்ச்சி நிரல்

1. இளவாலை நாவலடி வைரவர் ஆலயத்தில் பூசை வழிபாடு இடம்பெற்று அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்கள் ஆலயத்தில் இருந்து வைத்தியசாலைக்கு ஊர்வலமாக அழைத்து வருதல்.
2. மங்கள விளக்கேற்றல்
3. பெயர்ப்பலகை திரைநீக்கம்
4. நினைவுக்கல் திரைநீக்கம்
5. கட்டடத்தை நாடாவெட்டித் திறந்து வைத்தல்
6. காணி அன்பளிப்பு செய்தவரின் உருவப்படம் திரை நீக்கம், மாலை அணிவித்தல்
7. முதல் நோயாளியைப் பார்வையிடல்
8. கூட்டம் ஆரம்பமாகும்.

★ மௌன இறைவணக்கம்
★ வரவேற்புரை
★ மதத் தலைவர்களின் ஆசியுரை
★ தலைமை உரை
★ கௌரவ விருந்தினர் உரை
★ காணி அன்பளிப்புச் செய்தவருக்கு ஞாபகார்த்தக் கேடயம் வழங்கிக் கௌரவித்தல்
★ சிறப்பு விருந்தினர்கள், ஒப்பந்தகாரர், பிரதம பொறியியலாளர் (கட்டடத் திணைக்களம்) ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வு
★ சிறப்பு விருந்தினர் உரை
★ பிரதம விருந்தினரைக் கௌரவித்தல்
★ பிரதம விருந்தினர் உரை
★ நன்றியுரை

இந்த வைத்தியசாலை கடந்த 8 ஆம் திகதி (08.11.2009) ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கத் திட்டமிடப்பட்ட போதிலும் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டு நாளை (15.11.2009) ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட உள்ளது.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

***வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர்.***

## மகிழ்ச்சியும் மன நிறைவும் அடைகிறேன்



இளவாலை வாழ் மக்களுக்குச் சொந்தக்காணியில் ஒரு நிரந்தர வைத்தியசாலை நிறுவப்பட வேண்டும் என்ற நீண்டகாலக்கனவு நாளை நனவாகியுள்ளதை யிட்டு மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைகிறேன். 1996ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவு வசதிகள் குறைந்த தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்த நிலையில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினதும் எனதும் இடையறாத முயற்சி யினால் இளவாலையைச் சேர்ந்த லண்டனில் வசிக்கும் Dr.வை.சற்குணநாயகம் அவர்கள் தமது தந்தையார் ச.வைத்தியநாதன் அவர்களின் ஞாபகார்த்தமாக தமது 6 பரப்புக் காணியை நன்கொடையாக வழங்க முன்வந்தார். மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியத்தின் நிதியுதவியுடன் குறுகிய காலத்தில் நிறைந்த வளங்களோடு வசதிகள் கூடிய கட்டடம் நிறுவப்பட்டு நாளை திறந்து வைக்கப்படவுள்ளது. இதன் மூலம் வினைத்திறன் கூடிய மருத்துவசேவைகளை மக்களுக்கு மேலும் வழங்கப் புதியதொரு உதயமாக அமையும் என எதிர்பார்க்கிறோம். இவ்வேளையிலே எம்மோடு இப்பணியில் இணைந்து உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லாம்வல்ல இறைவனின் ஆசி என்றென்றும் கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

Dr.சி.கணேசலிங்கம், பொறுப்பு வைத்திய அதிகாரி,
ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு பிரிவு, இளவாலை.
தலைவர் வைத்தியசாலை அபிவிருத்திச்சபை.

## ஆரம்ப சேவைகளைப் பூரணமாக அளிக்கும்

இளவாலையிலும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களிலும் வசிக்கும் மக்களின் தேவைக் கேற்ப சுகாதார சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் பாரி பொறுப்பு வடமாகாண சுகாதாரத் திணைக்களத்திடம் உள்ளது. இதற்கமைய நவீன வடிவமைப்பில் கட்டியெழுப்பிய மத்தி மருந்தகம் இம்மக்களின் ஆரம்ப சுகாதார சேவைகளைப் பூரணமாக அளிக்கும் என்பதில் எவ்வித மாற்றமுமில்லை. அதன் பலாபலன் களை முற்றுமுழுதாக அனுபவித்து நலமுடன் வாழ வாழ்த்துகிறேன்.

வைத்திய கலாநிதி அ.எ.ஞானஜோதி
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாணம்.

## சேவை மனப்பாங்கு பல்கிப் பெருகட்டும்

இளவாலைப் பகுதியையும் அதன் அயற் பிரதேசங்களையும் வதிவிடமாகக் கொண்ட மக்களுக்கான வைத்திய வசதியை வழங்குவதில் பெரும் வரப்பிரசாதமாகப் புதிதாக நிர் மாணிக்கப்பட்ட ஆரம்ப மருத்துவப் பராமரிப்பு பிரிவுக் கட்டடமானது இப்பகுதி மக்களுக்கான வைத்தியசேவையை வழங்குவதிலும் இப்பிரதேச மக்கள் தமக்குரிய வைத்திய வசதியைப் பெற்றுக்கொள்வதிலும், நீண்ட காலமாகக் காணப்பட்ட நிரந்தரக் கட்டடமில்லாக் குறைபாட்டினை நீக்குவதையிட்டுப் பெருமகிழ் வடைகின்றேன்.

மேலும் இத்தகைய சேவை மனப்பாங்கு நம் பிரதேச மக்கள் மத்தியில் பல்கிப் பெருகி ஆக்கபூர்வமான சேவைகள் பலவும் முன்னெடுத்துச் செல்லப்பட இறையருள் வேண்டுகின்றேன்.

பிரதேச செயலர்,
வலி.தென்மேற்கு,
சண்டிலிப்பாய்.

## மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம்



இளவாலைக் கிராமத்தின் கண்ணே மக்களுக்கு சேவை செய்யும்முகமாக இந்த வைத்தியசாலை அமைவதையிட்டு நாம் பெருமகிழ்வு கொள்கிறோம். 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என நினைந்து செய்யும் இச்சேவை காலத்தால் அழியாதது. நோயினால் கிடந்து அல்லலுறும் மக்களுக்கு இவ்வைத்தியசாலை ஒரு வரப்பிரசாதம் ஆகும். இறைவனே வைத்தியநாதராக வந்து மக்கள் பிணி தீர்த்தது போல இவ்வைத்தியசாலையும் மக்கள் மனமறிந்து நோய் தீர்த்துச் சேவையாற்ற வேண்டும்.

விநாயகப்பெருமான் அருளை வேண்டி எனது ஆசிகளைக் கூறிக்கொள்கிறேன்.

சிவஸ்ரீ இராமபாலச்சந்திரக்குருக்கள்
இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகர் கோயில்
(ஆதீனகுரு).

## இளவாலை ஆரம்ப மருத்துவப் பிரிவு மேலும் அபிவிருத்தி காண உழைப்போம்



ஒரு ஊருக்குப் பாடசாலையும் வைத்தியசாலையும் இரு கண்கள் போன்றவை. பாடசாலை மனிதின் அறியாமையை நீக்கி அறிவு தந்து வாழவைக்கின்றது. வைத்தியசாலை உடலின் நோய்களை நீக்கிச் சுகமாக வாழவைக்கின் றது.

எங்கள் இளவாலை ஊரில் அறிவுபுகட்டும் பாடசாலைகள் பல இருக்கின்றன.

நோய்தீர்க்கும் டிஸ்பென்சரி ஒன்று இதுவரை காலமும் சொந்த இடமின்றி வெவ்வேறு இடங்களில் போதிய வசதிகளின்றி இயங்கி வந்த நிலைமாறி தற்போது சகல வசதிகளுமுடைய ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவாக மலர்ந்துள்ளமை மகிழ்ச்சிக் குரியது.

எங்கள் இளவாலை மண்ணின் மைந்தரும் வடமாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளருமான திரு.இ.ரவீந்திரன் அவர் களது வழிகாட்டலாலும் உதவியினாலும் தான் இந்த வைத்திய நிலையம் இங்கு மலர்ந்துள்ளது. அவரது சேவையை நாம் நன்றியுடன் போற்றுகின்றோம்.

இளவாலை மக்களின் நீண்டகால அத்தியாவசிய தேவை ஒன்று நாளை நிறைவாகியிருப்பதையிட்டு நாம் ஒவ்வொருவரும் மனநிறைவு கொள்வோம்.

இவ்வைத்திய நிலையத்தின் அபிவிருத்திக்கு நாம் ஒவ்வொருவரும் தொடர்ந்தும் உழைப்போம்.

கலாபூஷணம், சைவப்புலவர்
சு.செல்லத்துரை
(ஓய்வுநிலை அதிபர்)

## சேவைகளை மக்கள்பெற்றுப் பயனடையவேண்டும்




1986ஆம் ஆண்டில் இளவாலைப் பிரதேசத்தில் ஒரு வைத்தியசாலைஅமைவதற்கு அரசினால் நிதி ஒதுக்கப்பட்டிருந்தும் காணி ஒன்றினை பெற அமரர் அருட்திரு. அன்ரன் இராஜநாயகம் அடிகளாரின் முயற்சி பயனளிக்காவிடினும் டாக்டர் வை.சற்குணநாயகம் குடும்பத்தினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் சி.கணேசலிங்கம் அவர்களது அயராத முயற்சியாலும் அடிகளாரின் கனவு நாளை நனவாகின்றமையிட்டு மன மகிழ்வு அடைகின்றேன்.

இவ் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினருக்கு இப்பிரதேச மக்கள் வழங்கும் பேராதரவை தொடர்ந்தும் வழங்கி பலதரமுயர்வுகளுடன் இந்த வைத்தியசாலையின் சேவையை மக்கள் பெற்று பயனடைய வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

கு.சிவலிங்கம்,
தலைவர்,
மத்தியஸ்தர்கள் சபை
தெல்லிப்பழை.

(சி/562292) (255)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.நகரில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையம் ஒன்றில் நேற்று மண்ணெண்ணெய்ப் பெறுவதற்காக நீண்ட வரிசையில் காத்திருந்த மக்களைப் படங்களில் காணலாம். (படங்கள்: நந்தன்)

# மழைநீரைக் கடலுக்கு அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபடாது அதைச் சேமித்து நீர்வளம் பேணுங்கள்

## யாழ். மாநகர மேயர் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.14

நகரின் வீதிகளை வெட்டி மழைநீரைக் கடலுக்கு அனுப்பும் நடவடிக்கைகளில் எவரும் ஈடுபட வேண்டாம் என்று யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா நகர மக்களைக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

எமது புவியியல் அமைப்புக்கு ஏற்ப நிலத்தடி நீரைச் சேமிக்க வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

மழை காலம் ஆரம்பமாகும் இந்தச் சந்தர்ப்பத்தில் மழைநீரைச் சேமித்துக் காக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உண்டு.

நகரில் இரண்டு தினங்கள் மட்டுமே மழை நீர் தேங்கி நிற்கும். அவ்வாறு தேங்கி நிற்கும் நீரை கடலுக்கு அனுப்பி விரயமாக்காது சேமித்து வைக்கக்கூடியதாக மக்கள் உதவ வேண்டும்.

இந்தியாவில் மழை நீரைச் சேமிப்பதில் அக்கறை காண்பிக்கிறார்கள்.

நகரின் நீர்வளத்தைப் பாதுகாக்கக் கூடியதாக அதனைச் சேமித்துக்கொள்ளுங்கள்.

நீரைச் சேமிப்பது தொடர்பான ஆலோசனைகளை மாநகரசபையுடன் தொடர்பு கொண்டு அறிந்துகொள்ள முடியும்.

வீதிகளை வெட்டிச் சேதப்படுத்துவதன் மூலம் விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. மழை நீரைச் சேமிக்கவும் விபத்துக்களைத் தவிர்க்கத்தக்கதாகவும் பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்று கேட்டுக்கொண்டார். (203-111)

# கல்லுண்டாய் இந்து மயானப் பகுதியில் கடல் நீர் உட்புகும் அபாயம்

## மண் அகழப்படுகின்றமையே காரணம்

நவாலி,நவ.14

ஆனைக்கோட்டை, கல்லுண்டாய் இந்து மயானப் பகுதிச் சுற்றாடலில் மண் அகழப்படுவதால் கடல் நீர் வயல்கள், குடிமனைகள் ஆகியவற்றுள் உட்புகும் அபரிதம் ஏற்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக உழவு இயந்திரங்கள்மூலம் மண் எடுத்துச் செல்லப்படுவதால் மயானத்திற்குச் செல்லும் வீதியும் சிதைந்து சீர்கெட்ட நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த பொது அமைப்பின் பிரதிநிதிகளும் மக்களும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர், யாழ்.அரச அதிபர் ஆகியோருக்கு மகஜர்களை அனுப்பி வைத்துள்ளனர். (203-100)



நாவலர் வீதியிலுள்ள புகையிரத நிலைய வீதியில் குப்பை, கூழங்கள் அளவுக்கதிகமாகக் கொட்டப்படுவதால் போக்குவரத்துக்குச் சிரமமாக உள்ளது என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் அப்பகுதியில் போக்குவரத்துச் செய்யும்போது துர்நாற்றம் வீசுவதனால் பொதுமக்கள் பெரும் அசௌரியங்களை எதிர்நோக்குவதாகவும் கூறப்படுகின்றது. (படம்: அனு)

# கியூடெக்- கரித்தாஸ் நிறுவனத்தால் வாழ்வாதாரக் கடனாக 12 லட்சம் ரூபா

யாழ்ப்பாணம், நவ.14

கியூடெக்- கரித்தாஸ் நிறுவனத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள நான்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் கச்சாய் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் ஊடாக வாழ்வாதார சுழற்சிமுறைக் கடனாக 12 லட்சம் ரூபாவினை வழங்கவுள்ளனர்.

கெற்பேலி, வரணி இயற்றாலை, நாவற்காடு ஆகிய மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு தலா மூன்று லட்சம் ரூபா வீதமும் கச்சாய் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு இரண்டு லட்சம் ரூபாவும் கச்சாய் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒரு லட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

கச்சாய், கெற்பேலி ஆகிய மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கான கடன் தொகை வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கச்சாய் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கியூடெக்- கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட்பணி ஏ.ஜே.ஜெயக்குமார் கலந்து கொள்வார். (203-202)

# சண்டிலிப்பாய்ப் பிரதேசத்தில் உதவிப்பணம் பெறுவோருக்கு

நவாலி,நவ.14

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவதற்கு விண்ணப்பம் செய்த இடம்பெயர்ந்தவர்களைத் தத்தமது பிரிவு கிராம சேவையாளர்களுடன் தொடர்புகொண்டு பணம் பெறும் அட்டையினைப் பெற்றுக் கொள்ளுமாறு சமூகசேவை உத்தியோகத்தர் வி. அருந்தவராசா கேட்டுள்ளார். (203-100)

# மீளக்குடியமர்ந்தோருக்கான கொடுப்பனவு கிடைக்காதோர் விண்ணப்பிக்கவும்

வவுனியா நலன்புரி முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டு கோப்பாய் மத்தி கிராம சேவகர் பகுதியில் மீளக்குடியமர்ந்தோரில் மீளக்குடியமர்வுக்கான கொடுப்பனவினை இதுவரை பெறாதவர்கள் உடனடியாக விண்ணப்பிக்குமாறு கோப்பாய் மத்தி கிராம சேவகர் எஸ்.பாலசுந்தரம் தெரிவித்துள்ளார். (203-15)

# கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயப் பகுதி மக்கள் குழாய் மூலம் குடிதண்ணீரைப்பெற வசதிகள்

நல்லூர், நவ.14

யாழ். கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய பகுதிக்கு குழாய் மூலம் விநியோகிக்கப்படும் குடிதண்ணீர் விநியோகச் சேவை சீரமைக்கப்பட்டுள்ளதாக யாழ். நகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.

திருநெல்வேலியில் இருந்துவரும் குழாய் நீர் விநியோகம் போதிய அழுத்தமின்மையால் இந்தப் பகுதிக்கு கிடைக்காது போனதாகக் கூறப்பட்டது.

இதனால் இப்பகுதி மக்கள் உவர்த்தன்மை கொண்ட தண்ணீரையே குடிக்கப் பயன்படுத்துவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

சுத்தமான தண்ணீரைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகத் திருநெல்வேலியில் இருந்து வரும் குழாய் நீரைப் போதிய அளவு இப்பகுதி மக்கள் பெற்றுக்கொள்ள ஆவன செய்யுமாறும் கோரப்பட்டது.

இதனையடுத்துக் குழாய் நீரை இப்பகுதி மக்களும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இப்பகுதி மக்கள் குடிதண்ணீர் பெற வசதி செய்யப்பட்டுள்ளதாக மேஜர் மேலும் கூறினார். (203-111)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# மீளக்குடியேறிய மாணவர் இணையும் பாடசாலைகளில் தளபாட வசதிகளுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது

வடமராட்சி,நவ.14

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு மீளக்குடியேறிய மாணவர்கள் குடாநாட்டுப் பாடசாலைகளில் இணைத்துக் கொள்ளப்படுவதையடுத்து பாடசாலைகளில் தளபாடப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

மீளக்குடியேறிய மாணவர்கள் தொடர்ந்தும் குடாநாட்டுப் பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாக வடமராட்சி கரையோரப் பாடசாலைகளில் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் இணைந்து கொண்டுள்ளனர்.

இணைந்து கொண்ட மாணவர்களுக்குச் சீருடைகள், இலவசப் பாடப்புத்தகங்கள் இன்னமும் வழங்கப்படவில்லை.

ஒரு சில பாடசாலைகளில் கல்வி வலயங்களில் கையிருப்பில் இருந்த சீருடைத் துணிகள் ஒரு தொகுதி மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய மாணவர்களுக்கு சீருடைத் துணிகள், இலவசப் பாடப்புத்தகங்களை வழங்க வலயக்கல்வி அலுவலகங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

எனினும், குடாநாட்டுப் பாடசாலைகளில் தளபாடப் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக இருந்து வருகிறது.

வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.செல்வராசா, நலன்புரி நிலையங்களிலிருந்த மாணவர்கள் புதிதாகப் பாடசாலைகளில் இணைத்துக் கொண்டதால் ஏற்பட்டுள்ள தளபாடப் பற்றாக் குறையைப் போக்கித்தருமாறு பருத்தித்துறையில் நடைபெற்ற பொதுவைபவம் ஒன்றில் வைத்து சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்தார்.

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுபட்டுள்ள மாணவர்களுக்கு ஏற்கனவே மன உளைச்சல் ஏற்பட்டுள்ளதால் இவர்களைத் தரையில் இருத்தி மரநிழலில் நிற்கவைத்துக் கற்பிப்பது நல்லதல்ல எனவும் அவர்கள் சுமுகமாக வசதியாக இருந்து கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள தளபாடங்கள் அவசியமும் அவசரமானதுமான தேவையாக இருக்கிறது எனவும் அவர் தனது கோரிக்கையில் அமைச்சரிடம் சுட்டிக்காட்டினார். (203-236)

# இராணுவப் பதிவுகள் மேற்கொள்ளாதோருக்கு

கோப்பாய் மத்தி கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டு மீளக்குடியமர்ந்தவர்களுக்கான இராணுவப் பதிவு விவரம் மீள் பரிசீலனை இடம்பெறுகின்றது.

மீளக்குடியமர்ந்தோர் தத்தமது குடும்ப விவரத்தின் போட்டோப் பிரதி இரண்டு, அடையாளஅட்டைஇலக்கம் ஆகியவற்றை நீல நிற கோவையில் இணைத்து எடுத்து வருமாறு கோப்பாய் மத்தி கிராம சேவையாளர் தெரிவித்துள்ளார். (203-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குடாநாட்டுக்கு அண்மையில் விஜயம் செய்திருந்த பிரதிக் கல்விஅமைச்சர் தலைமையிலானகுழு வட்டு. இந்து நவோதயப் பாடசாலைக்கு விஜயம் செய்திருந்தபோது எடுக்கப்பட்ட படங்கள். பிரதிக் கல்விஅமைச்சர் எம்.சச்சிதானந்தன் தேசியக் கொடி ஏற்றுவதையும் கணனி உபகரணங்களை பாடசாலை அதிபரிடம் கையளிப்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். கல்வி அமைச்சின் ஆலோசகர் நா.தணிகாசலம்பிள்ளை உரையாற்றுவதையும் மாணவர்களில் ஒரு தொகுதியினரையும் ஏனைய இரண்டு படங்களிலும் காணலாம். *(படங்கள்: விக்ரோறி)*


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?
இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

## சித்தாரா பொன்னாங்காணித் தைலம்

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்.

*Manufactured By:*
**Sithara Products**
*Puttalam, Road, Chilaw.*
*(Reg.No: 6382)AR/PR/No.228*

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா,
இல.288,ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567
(சி/562082)


## நினைவு கூர்தலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



தோற்றம் 13 . 12 . 1940
மறைவு 13 . 10 . 2009

## திருமதி துரைராசா இராசமணி

அன்பு வழி காட்டி ஆதரவு தந்து
இனிய மொழிபேசி இங்கிதமாய் வாழவைத்து
தன்பணி முடிவுறுமுன்னர்-எம்மையெல்லாம்
ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு
இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தாயாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (14.11.2009) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன்கோயிலடி, புத்தூர் மேற்கு, புத்தூர். (90919) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### பிரான்சிஸ் லெனாட்

யாழ்ப்பாணம் நியூலங்கா ரேடர்ஸ் பிறைவட் லிமிட்டட் ஸ்தாபகரும், WALKER & GRIEG Co.LTD முன்னாள் உத்தியோகத்தருமான பிரான்சிஸ்லெனாட் (12.11.2009) வியாழக்கிழமை வத்தளையில் காலமானார்.

அன்னார் றூபி பிலோமினாவின் அன்புக் கணவரும், ஸ்ரீபன், கீதா, றெஜினா (மஞ்சு- கனடா), பத்மா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிரோமி (சாந்தி கம்), ராஜநாயகம், ஷேக்ஸ்பியர், ஸ்ரான்லி ஆகியோரின் மாமனும், ஸ்ரெபனி, ஷெறூபினி, ஷோ்வின், டெனிஷியஸ், ஜோயல், ஜெறிஷா, ஜெறமி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜயரட்ண மலர்ச்சாலையில் நேற்று (13.11.2009) வெள்ளிக்கிழமை இரவு 7 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்பு அவரின் இல்லமான 12/1, சேர்ச் வீதி, நாயகந்தை, வத்தளைக்கு எடுத்துச்செல்லப்பட்டு, இன்று (14.11.2009) சனிக்கிழமை பி.ப. 4.15 மணியளவில் நல்லடக்கத்துக்காக தூய மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*12/1, சேர்ச் வீதி,*
*நாயகந்தை, வத்தளை*
*0777222238, 011-2935366* (சி/563278)

தகவல்:
லயன். ஸ்ரீபன் லெனாட்
(மகன்)

## மணமகள் தேவை

M.Sc. முடித்து Mechanical Engineer ஆக இருக்கின்ற Canadian PR உள்ள சைவ சமயம், 29 வயது, ஏழுச்செவ்வாய், பூசநட்சத்திரம், பாவம் 30 உடைய மணமகனுக்கு வைத்தியத்துறையில் படித்துக் கொண்டிருக்கும் அல்லது படிப்பை முடித்துக் கொண்ட மணமகள் தேவை.
தொடர்பு:.0713163508 (90672)

## காணி விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு, பழைய வீதி வீரபத்திரர் கோயிலடியில் 6¾ பரப்புக் காணியும், கோப்பாய் தெற்கு மாதாகோயிலடியில் 5 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0213737832
0718474269
(90770)

## கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA பேட்டுக்குஞ்சுகள் இன்று 14.11.2009 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.
ராஜீவ் கால்நடைத் தீவன விற்பனை நிலையம்,
ஆனைக்கோட்டைச் சந்தி.
T.P 0776090926 (90907)

## நாய்க்குட்டி விற்பனை

நல்ல இன Boxer பூச்சி நீக்கப்பட்ட 53 நாள் குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 222-6052, 077-6622313 (90927)

## வீடு விற்பனைக்கு

மானிப்பாய், மெமோறியல் வீதியில் அமைந்துள்ள 4½ பரப்புக் காணியும் புது வீடும் விற்பனைக்குண்டு. அத்துடன், 3 பரப்பு வெறும் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0717353524 (90856)

## விற்பனைக்கு

கட்டடங்கள் கட்டுவதற்குரிய தரமான நாலு இஞ்சி (4") கொங்கிறீற் கற்கள், தூண்கள் என்பன விற்பனைக்குண்டு
தொடர்பு: 0774163146, 0263268222 (90912)

## மாருதிக்கார் விற்பனைக்குண்டு

தொடர்பு:-
N.நிரஞ்சன்,
விசுவத்தனை வீதி, பண்ணாகம், சுழிபுரம்.
(ஞாயிறு மட்டும் சந்திக்கலாம்) (90879)

## காணி விற்பனைக்கு

நாவலர் வீதியில் றெயில்வே வீதிக்கு அண்மையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0779749343 (சி/562286)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
(90711) 19, முருகேசர் லேன், நல்லூர்.

### அனுமதிப்பத்திரமின்றி மோ.சைக்கிள் செலுத்திய இருவருக்கு அபராதம்

வாகன வரிப் பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் கடந்த புதனன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழக்குகளை விசாரித்த நீதிவான் இருவருக்கும் தலா 2 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா 2 மாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தர[illegible]


அரச அங்கீகாரம் பெற்ற வரதன் சாரதிப் பயிற்சிப் பாடசாலை

## VARATHAN LEARNERS இன் விசேட கழிவுக்கட்டணம்

வன்னி நலன்புரி நிலையங்களிலிருந்து யாழ். குடாநாட்டிற்கு மீள்குடியேற வந்திருக்கும் மக்களுக்காக விசேட கழிவுக் கட்டணத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் (லைசென்ஸ்) பெற்றுத் தரப்படும். முகாம்களிலிருந்து வந்ததற்கான அத்தாட்சிப்படுத்தி அவர்களின் கிராம சேவையாளரிடமிருந்து கடிதம் கொண்டு வரவேண்டும்.

விவரங்களுக்கு: வரதன் லேணேர்ஸ்
133,K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
பஸ்நிலையம் முன் யாழ். கச்சேரிவீதி, நல்லூர் வீதி.
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி. (90857)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கண் மலர 12 . 06 . 1935
கண் நெகிழ 16 . 10 . 2009

## திருமதி பாக்கியம் சிவராஜசிங்கம்

"மாதம் ஒன்று சென்றது அம்மா ஆறவில்லை எம் துயரம்
அன்புடன் எமைக்காத்து அறிவுரைகள் பலகூறி
பண்புடன் எமை வளர்த்துப் பாரினில் உயரவைத்தீர்!
ஆயிரம் உறவுகள் இருந்தும் என்ன
அம்மா உங்கள் அன்பைப்போல் வருமா?
கண்ணீரில் நாம் தோய எமைப் பிரிந்தெங்கு சென்றீர்?
எந்நாளும் உங்கள் நினைவை இதயத்தில் சுமந்திருப்போம்"

கடந்த (16.10.2009) வெள்ளிக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் சிவ பதமடைந்த எங்கள் குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14.11.2009) சனிக்கிழமை வில்லூன்றித் தீர்த்தக் கரையிலும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் 16.11.2009 திங்கட்கிழமை மு.ப.11 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மாகியப்புலம், ஏழாலை வடக்கு, ஏழாலை.
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்கள், பெறாமக்கள்.
(90926)


## CSC COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2000 CERTIFIED INSTITUTION

நவம்பர் மாதத்திற்கான புதிய பிரிவுகள்

| 16 Nov 09 | 18 Nov 09 | 21 Nov 09 |
|---|---|---|
| திங்கள் | புதன் | சனி |

அனைத்து டிப்ளோமா பாடநெறிகளும் ஆரம்பம்

ADCHN — Advanced Diploma in HARDWARE & NETWORKING — 3 Months

Beginners Course — 3 Months
MS Office Application
Desktop Publishing
Web Design & Development

Diploma in PC Professional — 5 Months

Diploma in Digital Video Production

3 Months — Adv. Diploma In Digital Pre-Press

இலங்கையில் Tally ஒரிஜினல் சான்றிதழ் எம்மிடமிருந்து மட்டுமே!
Don't Settle for Less
2 in 1 Offer
Tally 9
VAT | P/L A/C | Balance Sheet | Payroll | Inventory | Audit | ERP Concept | POS | Excise

ASIAN - CSC COMPUTER EDUCATION

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677
நெல்லியடி கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-3734088, 077-3122198


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை
# புதிய கட்டடங்களின் திறப்பு விழா
# சிறப்பு மலர் – 14.11.2009

## எல்லோருக்கும் பயனுள்ளதாக அமையும்

தெய்வீக பணிக்கு நிகரானது வைத்தியதுறை சார்ந்த பணி. ஒருவனுக்கு துன்பம் நோயினாலும் ஏற்படுகிறது. அத்துயரில் அவன் வேதனை உறுகின்றபோது அவன் நாடும் இடம் நம்பிக்கையுடன் வைத்தியசாலை. அவனின் ஜீவனுக்கு ஆதாரம் கொடுப்பதும் வைத்தியசாலையும், வைத்தியர்களும். தென்மராட்சி மக்களின் துயர்தீர்க்க இன்று பூரணமான ஆதாரசாலை அமைவது அனைவருக்கும் மகிழ்வையும் மனநிறைவையும் தரும். வெளிநோயாளர் பிரிவு கட்டடம், மருத்துவக் களஞ்சியம், நோயாளர் தங்கு விடுதிகள் புதிதாக வசதிகளும் நிறைவுகளும் உடையதாக அமைந்து இன்று திறப்புவிழா காணுகின்றது. இப்பணியின் நிறைவு மூலம் தென்மராட்சி மக்களின் ஓரளவு வைத்திய சேவை நிறைவு பெறுகின்றது. இப்பணிகள், இது போன்ற வைத்தியசாலை சார்ந்த சேவைகள், நிறைவேற வேண்டும் என்ற சிந்தனையாலும், செயலாலும் அயராது உழைக்கும் மாவட்ட வைத்திய அதிகாரிக்கும், உத்தியோகத்தர்களுக்கும், ஊழியர்களுக்கும் நல்லாசிகள் தெரிவிப்பதுடன் குறிப்பாக இப்பணிக்கு தம் முழுச்சக்தியையும் பயனுள்ளதாக பயன்படுத்தி திறப்புவிழா மூலம் மகிழ்வு காணும் வைத்தியசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் சாவகச்சேரி சார்ந்த மக்கள் நன்றியுடையவர்கள் ஆக இருக்க வேண்டும். இவர்கள் பணிக்கு இறை ஆசிகள் கிடைக்கப் பிரார்த்தனைகள்.

"எல்லோரும் இன்புற்றிருக்க பிரழர்த்தனைகள்"

து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்

## இப்பகுதிக்கு உரிய பணி வழங்க வாழ்த்துகின்றேன்

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை இன்றையதினம் திறந்து வைப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

மருத்துவம் என்பது ஒவ்வொரு கிராமங்கள் தோறும் பரவலாக உரிய அனைத்து மக்களுக்கும் கிடைக்கவேண்டும் என்பது எனது திட்டங்களில் ஒன்றாகும். இன்றும் கூட எமது குடாநாட்டில் பல பகுதிகளில் நோயாளர்கள் உரிய சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்கள் காணப்படுகின்றன. இந்த நிலையை கூடிய விரைவில் மாற்றியமைப்பது எனது திட்டங்களில் முக்கியமானதாகும்.

இந்த நிலையில் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை இப்பகுதி மக்களுக்கு உரிய பணிகளை வழங்கும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. அந்த வகையில் இப்பகுதி மக்களும் இந்த வைத்தியசாலையின் மூலம் சிறந்த பயன்களைப் பெறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இந்த மகத்தான பணியில் ஈடுபட்டு உழைத்த அனைவருக்கும் எனது பாராட்டும் நன்றியும் உரித்தாகட்டும்.

கே. என். டக்ளஸ் தேவானந்தா
சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்

## மக்கள் நிலையான சுகாதார வசதி பெறுவர்

Necord இன் உதவியுடன் 35 மில்லியன் ரூபா செலவில் சாவகச்சேரி தள வைத்தியசாலையில் நவீன நிர்வாக புதிய கட்டடம் ஒன்றும் வெளிநோயாளர் பிரிவும் அதன் இதர சேவைகளையும் உள்ளடக்கி வடிவமைத்து நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதனால் அதன் சுற்றயல் கிராமங்களில் வசிக்கும் மக்கள் நிலையான, மேன்மையான சுகாதார வசதிகளைப் பெற்று சகலரும் என்றும் நலமுடன் வாழ்ந்து இன்புற்றிருக்க எனது இனிய நல்வாழ்த்துக்கள்.

வைத்திய கலாநிதி அ.எ. ஞானபோதி
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, வடமாகாணம்.

## முழுமையான சேவையை ஆற்றவேண்டும்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் புதிய வெளிநோயாளர் பிரிவு திறக்கப்படுவதையொட்டி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். 1996 ஆம் ஆண்டு இவ்வெளி நோயாளர் பிரிவுக்கான அடிக்கல் நாட்டப்பட்டிருந்த போதும் நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண சூழ்நிலை காரணமாக இதனைப் பூர்த்தி செய்வதற்கு இத்தனை காலம் தாமதம் ஏற்பட்டுள்ளது. மிகவும் கஸ்ரமான சூழ்நிலையில் தமது சுகாதார சேவைகளை பெற்றுவந்த 60 ஆயிரத்திற்கு மேற்பட்ட பிரதேச மக்கள், இப்புதிய வெளிநோயாளர் பிரிவு திறக்கப்படுவதன் மூலம் இலகுவாகவும் விரைவாகவும் அவர்களுக்கான வைத்திய சேவையை பெற்றுக்கொள்ளக் கூடியநிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. சுகாதார சேவையைப் பொறுத்தளவில் இப்பிரதேச மக்களுக்கு பெருநன்மையான விடயமாகவே இதனைக் கருதலாம். இவ் வெளிநோயாளர் பிரிவில் இப்பிரதேச மக்களுக்கு மட்டுமல்லாது இதனை அண்டிய பிரதேச மக்களுக்கும் தனது முழுமையான சேவையை ஆற்ற வேண்டும் எனக்கேட்டுக்கொள்வதுடன், அதற்கான வல்லமைகளையும் வசதிகளையும் வழங்க வேண்டும் என ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இ.இரவீந்திரன், செயலாளர்,
சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வடமாகாணம்.

## சிறந்த சேவையைத் தொடர்ந்து வழங்கட்டும்

சாவகச்சேரி வைத்தியசாலை மீள் நிர்மாணம் பெற்று புதுப்பொலிவுடன் மீண்டும் புதிய கட்டடத் தொகுதிகளுடன் திறந்து வைக்கப்படுகின்றது. நோயாளர் சேவைக்கென நிர்வாக அலகிற்கான கட்டடம், நோயாளர் விடுதி, மருந்துக்களஞ்சியம் என்பவை அனைவரினதும் தளராத கூட்டுமுயற்சியின் காரணமாக மீளப்புதுப்பிக்கப்பட்டுள்ளன. இடர்படும் தென்மராட்சி வாழ் மக்களுக்கும் ஏனைய மக்களுக்கும் சேவையை வழங்கும் இவ்வைத்தியசாலை மேன்மேலும் தனது வைத்திய சேவையினை விரிவுபடுத்தி தேவையான பௌதிக வளங்களையும் பெற்று, நிறைந்த சேவையினைத் தொடர்ந்து வழங்க வேண்டுமென வாழ்த்தி இறையாசி வேண்டுகின்றேன்.

டாக்டர். இ. பரமேஸ்வரன்
சுகாதார வைத்திய அதிகாரி, சாவகச்சேரி.

## மனிதநேய வைத்தியசாலையாக மிளிர வேண்டும்

கட்டடங்கள் பாவனைக்கு வரும்பொழுது எமது பிரதேச மக்களும் வசதிகளுடன் சேர்ந்த வைத்திய சேவையை பெறவுள்ளார்கள் என்பது எமக்கெல்லாம் மகிழ்ச்சியான விடயமாகும். இதற்கு காரணமாக இருந்த அதிகாரிகளுக்கும் மற்றைய சேவையாளர்களுக்கும் இத்தருணத்தில் நன்றியை பிரதேச மக்கள் சார்பாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஏனைய கட்டுமானங்களும் வைத்தியசாலை வசதிகளும் எமது வைத்தியசாலைக்கு விரைவில் கிடைக்க வேண்டும் என்பதுடன் இவ்வைத்தியசாலை சகல வசதிகளும் கொண்ட மனிதநேய ஆதார வைத்தியசாலையாக உயர வேண்டும் என்ற மக்களின் விருப்பத்தையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

பேராசிரியர் க.கந்தசாமி
தலைவர், தென்மராட்சி நலச்சேவைகள் சங்கம்.



## போற்றப்பட வேண்டிய உன்னத முயற்சி

யாழ். மாவட்டத்தில் கடந்த காலங்களில் நிலவிய சூழ்நிலைகள் காரணமாக பல்வேறு துறைகளும் பாதிப்புற்றிருந்தன. இத்துறைகளில் சுகாதாரத்துறை மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. பலவைத்தியசாலைகள் பெருமளவில் சேதமடைந்தன. வைத்திய அதிகாரிகள், மருத்துவப் பணியாளர்கள் பற்றாக் குறையும் மிக அதிகமாக இருந்தது. இருப்பினும் அக்காலப் பகுதியில் சேவையாற்றிய சுகாதார வைத்தியத் துறையினர் சளைக்காமலும், களைக்காமலும் தமது உச்ச சேவையை எமது மக்களுக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது. காலத்தின் தேவைக்காக அவர்களது சேவைக்கு எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தென்மராட்சிப் பகுதியில் ஏற்பட்ட சூழ்நிலையால் மிகவும் பாதிக்கப்பட்ட வைத்தியசாலைக் கட்டடங்களை மீளவும் புனரமைக்கவும் புதிய கட்டடங்களை அமைக்கவும் எமது அதிகாரிகள் அயராது சகல வழிகளிலும் முயற்சிகளை மேற்கொண்டு திறம்பட செயற்பட்டு ஒப்பேற்றியுள்ளமையானது போற்றப்பட வேண்டிய உன்னத முயற்சியாகும். இக் கட்டடங்களின் அமைப்பிற்காக நிதி வளங்களை ஏற்படுத்தி புனரமைப்பினை திறம்பட நிறைவேற்றவும் பல வழிகளிலும் உழைத்த மாகாண சுகாதார சேவைகள் செயலாளர், பணிப்பாளர், அதிகாரிகள், யாழ் பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் மற்றும் இப் புனரமைப்பிற்கு பூரண ஒத்தாசை வழங்கிய எமது யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் அவர்களையும் இவ்வேளையில் நன்றியறிதலுடன் பாராட்டுகின்றேன். எமது தென்மராட்சி மக்களுக்கு கிடைத்த இவ்வசதிகளைக் கொண்டு இவ் வைத்தியசாலை மக்களுக்கு தொடர்ந்தும் நற்பணியாற்ற வாழ்த்துகிறேன்.

ஆ. சிவசுவாமி, பிரதம செயலாளர்.

## அபிவிருத்திப் பாதையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக் கட்டடம், மருந்துக் களஞ்சியம் மற்றும் நோயாளர் விடுதி என்பன திறந்து வைக்கப்படுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

2005 ஆம் ஆண்டு NECORD திட்டத்தின் கீழ் மீள ஆரம்பிக்கப்பட்டு 2006 இல் மீள தடைப்பட்டது. பின்னர் இப்பணிகள் 2008 இல் மீள ஆரம்பிக்கப்பட்டு 35 மில்லியன் ரூபா செலவில் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்தில் வெளிநோயாளர் பிரிவு, சிகிச்சை நிலையங்கள், அவசர சிகிச்சைப் பிரிவு, புதிய எக்ஸ்ரே கதிர் பிரிவு மற்றும் நிர்வாக அலகுகள் இயங்கவுள்ளன.

வடமாகாண சுகாதார அமைச்சின் PSDG நிதி மூலம் 10 மில்லியன் ரூபா செலவில் மருந்துக் களஞ்சியம் அமைக்கப்பட்டுள்ளது. அதே போன்று அவுஸ்திரேலிய மருத்துவ கழகத்தின் நிதியுதவியுடன் 5 மில்லியன் ரூபா செலவில் நோயாளர் விடுதியும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் சில மாதங்களுக்கு முன் உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவியுடன் இன்னுமோர் நோயாளர் விடுதி ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. இவற்றைவிட யப்பானிய FIDR நிறுவனத்தின் உதவியுடன் 2005 இல் ஆரம்பிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்ட சிறுவர் விடுதி நிர்மாணப் பணிகள் அடுத்த வருட ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தியாக்கப்படும். இவ் வைத்தியசாலைக்கு தேவையான ஏனைய கட்டடங்களையும் அமைப்பதற்கு பல நிதி நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறோம்.

தென்மராட்சி பிரதேசத்தில் மருத்துவ சேவைகளின் மையமாக விளங்குகின்ற இவ்வைத்தியசாலை புதுப்பொலிவுடன் இயங்க ஆரம்பிப்பதையிட்டு பெருமை அடைகின்றோம். அடுத்த சில வருடங்களுக்குள் இவ்வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகள் அனைத்தையும் நிறைவேற்ற முடியும் எனத் திடமாக நம்புகின்றோம்.

வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

## தரமான சேவைகள் மக்களுக்குக் கிட்டும்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் புதிய நிர்வாகக் கட்டடத் தொகுதி, மருந்துக்களஞ்சியம், நோயாளர்விடுதி ஆகியன திறக்கப்படுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். நீண்டகாலமாக பூர்த்தியடையாது இருந்த கட்டடத்தொகுதி தற்பொழுது அனைவரதும் பெரு முயற்சியால் நல்ல நிலையில் பூர்த்தியடைந்து திறக்கப்படுகின்றது. தென்மராட்சி வாழ் அனைத்து மக்களுக்கும் இது ஒரு பெரும் வரப்பிரசாதமாகும். இனிவரும் காலங்களில் தென்மராட்சி வாழ் பிரதேச மக்கள் தரமான, நிறைந்த சுகாதார சேவைகளை இலகுவில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

க.தயாளன், மாவட்ட வைத்திய அதிகாரி
ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி.

## சகலரையும் பாராட்டுகின்றோம்

எமது பிரதேச மக்களின் நீண்டகால வைத்திய தேவைகள் பல. அவற்றுள் இன்று மூன்று கட்டடங்கள் கட்டிமுடிக்கப்பட்டு திறப்புவிழா நடைபெறுகின்றது.

★ வெளிநோயாளர் பிரிவுக்கட்டடம் [NECORD FUND]
★ மருந்துக் களஞ்சியம் [PSDG FUND]
★ நோயாளர் தங்குவிடுதி
[AUSTRALION MEDICAL AID FOUNDATION FUND]

இம்மூன்று கட்டடங்களையும் எமது பிரதேச மக்களின் அவசிய தேவைகருதி திறந்துவைப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இப்பாரிய வேலைத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிய சகலரையும் பாராட்டுகின்றோம்.

மு. நாகேந்திரராசா,
தலைவர், வைத்தியசாலை அபிவிருத்திச் சபை.

## இறைவனின் நல்லாசி கிடைக்க வேண்டும்

தென்மராட்சி மக்களின் அத்தியாவசிய தேவைகளின் ஒன்றான வைத்திய சேவைக்கு முன்னுரிமை அளித்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் சகல வசதியும் கொண்ட வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவின் கட்டடத் திறப்புவிழாவிற்கு ஆசி வழங்குவதில் பெருநிறைவுடன் மனமகிழ்வு அடைகின்றேன்.

கிளிநொச்சி மாவட்ட பளைப்பிரதேசத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரைக்கும் இடைப்பட்ட பெருநிலப்பரப்பில் வாழும் மக்களுக்கு மிக பயனுள்ளதாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை இயங்கி வந்ததை நன்கறிவேன். பல்வேறுபட்ட யுத்த சூழ்நிலையில் சேதமடைந்த இவ் வைத்தியசாலையைப் புனரமைக்க ஆர்வம் கொண்ட அத்தனை பெருமக்களையும் தனித்தனியாக பாராட்டி இறைவனின் நல்லாசி அவர்களுக்கு கிடைக்க வேண்டும். எனப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்தும் இவ் வைத்தியசாலை நற்பணியாற்றி நற்சேவை புரிந்து பிணி தீர்க்க இறையாசி கிடைக்கப் பிரார்த்தித்து நல்லாசி வழங்குகிறேன்.

வண. கே.ஜே. டபிள்யு. தேவசகாயம்
தென் இந்தியத் திருச்சபை,
யாழ். திருமண்டலம், சாவகச்சேரி திருச்சபை.

## தென்மராட்சி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

தென்மராட்சியின் மிக முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாய் விளங்கும் சாவகச்சேரியில், இன்று ஆரம்பித்து வைக்கப்படும் ஆதார வைத்தியசாலை தென்மராட்சி மக்களுக்கோர் வரப்பிரசாதமாகும்.

கடந்த கால அசாதாரண சூழ் நிலைகளால் பெரிதும்பாதிக்கப்பட்ட இவ்வாதார வைத்தியசாலை, நிகொட் நிறுவனத்தின் பேருதவியுடனும், பெருநிதியுடனும் இன்று வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவு, நோயாளர் விடுதி என்று சகல வசதிகளுடனும் இருமாடிக்கட்டடமாய் எழிலுற எழுந்து நிற்கின்றது.

தமது பிரதேசத்திலேயே தமக்கான அடிப்படை வைத்திய வசதிகள் அனைத்தையும் வழங்கக் காத்திருக்கும் இவ்வாதார வைத்தியசாலையின் ஆரம்ப வைபவம் தென்மராட்சி மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சிகரமான நிகழ்வாகும். போதிய இடவசதி, போக்குவரத்திற்கு உகந்த சூழல், அமைதியான அமைவிடம் என்று மக்களின் தேவைக் கேற்றவாறு அமைக்கப்பட்டுள்ள இவ்வாதார வைத்தியசாலை நவீன வசதிகளுடன் வளர்ந்து, அதன் சேவைகள் எல்லா மக்களையும் இலகுவில் சென்றடைய இந்நாளில் மனமுவந்து வாழ்த்துகிறேன்.

க.கணேஷ்
அரசாங்க அதிபர் /மாவட்டச் செயலர்
யாழ். மாவட்டம்.

## மக்கள் நிறைவான பயன்பெற வாழ்த்துக்கள்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கென அழகுற அமைக்கப்பட்ட புதிய கட்டடத் தொகுதிகள் இன்று திறந்து வைக்கப்படும் நிகழ்வினை வாழ்த்துவதில் பெருமகிழ்வெய்துகின்றேன்.

இதனால் இப்பிரதேச மக்கள் தமது வைத்தியத் தேவைக்காக யாழ்ப்பாணம் செல்லும் நிலை குறைவடைவதுடன் தமக்கு வேண்டிய வைத்தியத் தேவைகளை காலதாமதமின்றி உடனுக்குடன் பெற்றுக் கொள்ளவும் வழிசெய்யப்பட்டுள்ளது. மேலும், நோயினால் பாதிப்படைவதும் குறைவதோடு நேரம், பிரயாணச் செலவு என்பனவும் மீதமடைகிறது.

"நோய்நாடி நோய் முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க இப்பிரதேச மக்களின் தேவைகளை அறிந்து பெருமனதுடன் இவ்வைத்திய அதிகாரிகள் சேவை ஆற்றுவார்கள் என நம்புகின்றேன்.

இக்கட்டடங்கள் அமைவதற்கு காரணகர்த்தாக்களாக விளங்கிய அனைவரும் நன்றிக்குரியவர்கள். இத்திறப்பு விழா நிகழ்வுகள் இனிதே சிறப்புடன் நடைபெறவும் இவ்வைத்தியசாலை மூலம் மக்கள் நிறைந்த பயன்பெறவும் என் நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செ.ஸ்ரீநிவாசன்
பிரதேச செயலர், தென்மராட்சி, சாவகச்சேரி.

## பணிசிறக்க வாழ்த்துக்கள்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை புதுப்பொலிவு பெறுவது கண்டு எனது மனம் இறும்பூதெய்துகின்றது.

மனித சக்திக்கு அப்பாற்பட்ட சில நிகழ்வுகளால் சாவகச்சேரி வைத்தியசாலை பெருமளவாக பாதிப்படைந்திருந்தது. இருண்ட இரண்டாயிரமாம் ஆண்டு இடப்பெயர்வின் பொழுது சாவகச்சேரி வைத்தியசாலை அநாதையாக பொலிவிழந்து காணப்பட்டது. இவையெல்லாம் நேற்றைய நிகழ்வுகளாக என் கண்முன்னே நிழலாடுகிறது. மீளக்குடியமர்வு ஏற்பட்டதைத் தொடர்ந்து வைத்தியசாலை சிறிது சிறிதாக வளர ஆரம்பித்தது. நடவடிக்கைகளில் பலத்த தடங்கல்கள் ஏற்பட்ட போதிலும் பல நல் மனிதர்களின் அயராத முயற்சிகளினால் குறித்த வைத்தியசாலை இன்று புதுப்பொலிவு பெற்றுள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையினர் மற்றும் ஆதார வைத்தியசாலையின் பொறுப்புமிக்க வைத்தியர்கள், சுகாதாரத் திணைக்களத்தினர் ஆகியோரது நன் முயற்சிகளால் சாவகச்சேரி பிரதேசம் வசதிகளுடன் கூடிய வைத்தியசாலையைப் பெறுவது மகிழ்வான விடயமாகும்.

மேலும் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியும், அபிவிருத்திகள் செய்யப்பட வேண்டியும் உள்ள நிலையில் அனைவரும் அதற்காக உழைக்க வேண்டுமென கோரிக்கொண்டு ஆதார வைத்தியசாலையினர், அபிவிருத்திச் சபையினர் ஆகிய உங்களின் பணிகள் சிறக்க எல்லாம் வல்ல உலக நாயகனை வேண்டி வாழ்த்தி அமைகின்றேன்.

அ.பிரேம்சங்கர்
மாவட்ட நீதிபதி, சாவகச்சேரி.

## சேவைகள் மென்மேலும் தொடர்க

இன்று சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலை வசதிகளுடன் அமைக்கப்பட்ட புதியகட்டடத்தில் இயங்க ஆரம்பிப்பது ஒரு மகிழ்ச்சியான நிகழ்வே. இக்கட்டடம் உருவாக அயராது உழைத்த அனைவரையும் பாராட்டி இவ்வைத்தியசாலையின் சேவை மென்மேலும் தொடர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ப. பாலேந்திரா,
தலைவர்,
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

அனுசரணையாளர்கள்

கதிரவன் இரும்பகம்
22, டச்சு வீதி, சாவகச்சேரி.

இந்திரன் ஜுவலர்ஸ்
இல. 10, நவீன சந்தை,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாவட்ட வலம் - யாழ்ப்பாணம்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## தமிழ்மொழியும் இலக்கியமும் - I 22-T-I

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

✱ பின்வரும் வாக்கியங்களிலே தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

01. ''தோயும் திரைகள் அலைப்பத் தோடார் கமலப்பள்ளி'' இங்கு கமலம் என்பதன் ஒத்தகருத்துள்ள சொல்
1) பொய்கை. 2) தாமரை. 3) அன்னம். 4) குளம்.

02. ''நிரந்தெழுந்து வேயின் திரண்ட தோள் வேல் கண்ணாய்'' இங்கு வேய் என்பதன் ஒத்த கருத்துள்ள சொல்,
1) மூங்கில். 2) தோள். 2) வேல். 4) வலிமை.

03. வள்ளன்மையாலேயே புகழ்பெற்றவன் பாரி மன்னன் ஆவான். இங்கு வள்ளன்மை என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல்,
1) ஊராண்மை. 2) பேராண்மை. 3) தாளாண்மை. 4) இவறன்ன.

04. வெயிலில் நின்றவனுக்குத்தான் நிழலின் அருமை தெரியும் என்பார்கள். அருமை என்பதன் எதிர்க்கருத்துச்சொல்,
1) சிறுமை. 2) பெருமை. 3) இனிமை. 4) எளிமை.

05. பாரி மன்னனுடன் கபிலர் கெழுதகைமை பூண்டிருந்தார். ''கெழுதகைமை'' என்பது,
1) பகைமை. 2) கூட்டுறவு.
3) நெருங்கிய நட்பு. 4) ஒற்றுமை.

✱ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

06. ஒரு நூலில் தவறவிடப்பட்ட விடயங்கள் அந்நூலின் பிற்பகுதியில் சேர்க்கப்படுவது,
1) அநுபந்தம். 2) அணிவுரை. 3) பதவுரை. 4) பின்இணைப்பு

07. அறிஞர் பலர் கூடி ஒரு விடயம் பற்றி வாதிடும் களம்,
1) சொற்போர். 2) பட்டிமன்றம். 3) அரங்கேற்றம். 4) ஆய்வகம்.

08. மியூசியம் (Museum) என்பதற்கு வழங்கப்படும் தமிழ்ச்சொல்,
1) பண்டசாலை. 2) ஆதுலர்சாலை.
3) அருங்காட்சியகம். 4) களஞ்சியம்.

09. சிங்கத்தின் இளமைப் பெயர்,
1) குட்டி. 2) குருளை. 3) பிள்ளை. 4) போதகம்.

10. பாம்பு சீறும் வண்டு,
1) ரீங்காரம் செய்யும். 2) கதறும்.
3) அலறும். 4) இரையும்.

11. கந்தம், நாற்றம், விரை என்பன குறிக்கும் சொல்,
1) மணம். 2) துர்மணம். 3) வாசனை. 4) அழகு.

12. வண்ணந்தீட்டி அழகு செய்யாத உயிர்த்தன்மையுள்ள ஓவியம்,
1) புகைப்படம். 2) வெற்றோவியம்.
3) உயிரோவியம். 4) புனையா ஓவியம்.

13. நகருக்கு வெளியே மக்கள் வாழும் இடம்
1) நகர்ப்புறம். 2) புறஞ்சேரி.
3) பாசறை. 4) பர்ணசாலை.

14. மிளகாய்க்கு விதை போல, ஆமணக்குக்கு,
1) பருப்பு. 2) கொட்டை. 3) முத்து. 4) வித்து.

15. மாடுகள் பாதுகாப்பாகக் கட்டிவிடப்படும் இடம்,
1) பந்தி. 2) பட்டி. 3) தொழுவம். 4) குடிசை.

✱ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

16. மேலெழுந்த வாரியாகக் கற்றல் என்னும் பொருள் தரும் மரபுத்தொடர்,
1) நுனிப்புல் மேய்தல். 2) தலையால் நடத்தல்.
3) துறை போதல். 4) கடைத்தேறுதல்.

17. விகடகவி பொடிவைத்துப் பேசுவதிலே சமர்த்தன். இங்கு பொடிவைத்துப் பேசுதல் என்ற மரபுத்தொடரின் கருத்து,
1) தந்திரமாகப் பேசுதல். 2) நகைச்சுவையாகப் பேசுதல்.
3) நறுக்காகப் பேசுதல். 4) சுற்றி வளைத்துப் பேசுதல்.

18. ஒரு காரியத்தை நன்கு பயிற்சி செய்த பின்னரே பகிரங்கமாகச் செய்து காட்டல் வேண்டும் என்னும் கருத்தினை விளக்கும் பழமொழி,
1) ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு.
2) அறையிலாடியன்றோ அம்பலத்திலாட வேண்டும்.
3) ஆடத்தெரியாதவள் கூடம் கோணலென்றாளாம்.
4) பதறாத காரியம் சிதறாது.

19. பயனற்றது என்னும் பொருள் தவிர்ந்த வேறு பொருளைத்தரும் உவமைத்தொடர்,
1) செவிடன் காதில் ஊதிய சங்கு போல.
2) காட்டில் எறித்த நிலாப்போல.
3) கார்த்திகைப் பிறை கண்டதுபோல.
4) ஆற்றிலே கரைத்த புளிபோல.

20. நண்பர்கள் கூடிக்குலாவி இருந்தனர். இங்கு ''கூடிக்குலாவுதல்'' என்ற இணைமொழியின் கருத்து,
1) பிரிந்திருத்தல். 2) பரிகசித்தல்.
3) சேர்ந்து மகிழ்தல். 4) பகைத்திருத்தல்.

✱ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

21. மெல்லின எழுத்துக்களை மட்டும் கொண்ட ஒரு சொல்,
1) கணம். 2) மணம். 3) வனம். 4) பணம்.

22. பின்வருவனவற்றுள் ஆக்கப்பெயராக வருவது,
1) அறிவு. 2) சொந்தம். 3) மருத்துவம். 4) மொழி.

23. ''இன்சொல் பேசுதல் சான்றோர்க்கு அணியாம்'' இன்சொல் என்பது,
1) உவமைத் தொகை. 2) பண்புத்தொகை.
3) வினைத்தொகை. 4) வேற்றுமைத்தொகை.

24. சாரைப்பாம்பு சரசரத்து ஓடியது. இங்கு சாரைப்பாம்பு என்பது,
1) காரணப் பெயர். 2) இடுகுறிப்பெயர்.
3) வினையாலணையும் பெயர்.
4) இரு பெயரொட்டுப் பண்புத்தொகை.

25. ஜனாதிபதி வருகையின் பொருட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. இங்கு பொருட்டு என்பது,
1) இரண்டாம் வேற்றுமை. 2) மூன்றாம் வேற்றுமை.
3) நான்காம் வேற்றுமை. 4) ஐந்தாம் வேற்றுமை.

26. பின்வருவனவற்றில் இயல்புப் புணர்ச்சியாக வருவது,
1) மரவேர். 2) பலாப்பழம். 3) பல்லழகு. 4) ஆணழகன்.

27. ''கடிநகர் விரைந்தனர்'' இங்கு ''கடி'' என்பது,
1) பெயர்ச்சொல். 2) வினைச்சொல். 3) இடைச்சொல். 4) உரிச்சொல்.

28. படிக்கவோ வந்தாய். இங்கு இடம்பெறும் ஓகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்,
1) ஒழியிசைப் பொருள். 2) தேற்றப்பொருள்.
3) எதிர்மறைப் பொருள். 4) பிரிநிலைப் பொருள்.

29. ''பாடிப் பறந்த குயில்'' இங்கு பாடி, பறந்த என்பன....
1) பெயரெச்சம், வினையெச்சம். 2) வினையெச்சம், பெயரெச்சம்.
3) பெயர்ச்சொல், வினைச்சொல். 4) வினைச்சொல், பெயர்ச்சொல்.

30. ''வானக்கடலில் வெள்ளி ஓடம் ஒன்று கண்டேன்'' இங்கு வானக்கடல் என்பது,
1) உவமைத் தொடர். 2) உருவகத்தொடர்.
3) எதுகை அணி. 4) மோனை அணி.

✱ பின்வரும் வினாக்களிலுள்ள வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.

31. அவன் பரீட்சையில் தவறியமைக்குக் காரணம்,
1) அவன் நீண்ட நாள் பாடசாலைக்கு வராதிருந்தபடியால்.
2) அவன் நீண்ட நாள் பாடசாலைக்கு வராதிருந்தான்.
3) அவன் நீண்ட நாள் பாடசாலைக்கு வராதிருந்தமையினாலாகும்.
4) அவன் நீண்ட நாள் பாடசாலைக்கு வராதிருந்தமையாகும்.

32. மருந்தைக் குடித்ததனாலன்றோ,
1) நோய் குணப்படும். 2) நோய் குணப்பட முடியும்.
3) நோய் குணப்பட்டது. 4) நோய் குணப்படுவது.

33. பாதையைக் கடந்த மாணவர் கூட்டம் ஆபத்தில்,
1) சிக்கிக்கொண்டன. 2) சிக்கிக் கொண்டது.
3) சிக்கினர். 4) சிக்கின.

34. சுயநலமும் தற்பெருமையும்.
1) நன்மை பயப்பனவன்று. 2) நன்மை பயப்பனவல்ல.
3) நன்மை பயப்பதன்று. 4) நன்மை பயப்பதல்ல.

35. நாடு முழுவதிலும் வரட்சி நிலவக் காரணம்,
1) மழை பெய்யாமையால்.
2) மழை பெய்யவில்லையாதலால்.
3) மழை பெய்யாததால். 4) மழை பெய்யாமையாகும்.

✱ பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

36. ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபற்றி முதலிடம் பெறுபவர்களுக்கு .................. வழங்கப்படும்.
1) வெள்ளிப்பதக்கம். 2) வெண்கலப்பதக்கம்.
3) வெற்றிக்கேடயம். 4) தங்கப்பதக்கம்.

37. கல்லிலேனும் செப்பேட்டிலேனும் பொறிக்கப்படும் ஒருவருடைய புகழ் .................. எனப்படும்.
1) நிறைமொழி. 2) மெய்க்கீர்த்தி. 3) மெய்ப்பாடு. 4) பதிப்புரை.

38. சில நாடுகளில் தனி ஒருவர் வைத்திருக்கக்கூடிய சொத்துக்களின் அளவுக்கு .................. விதிக்கப்பட்டுள்ளது.
1) உன்னத நிலை. 2) உச்ச வரம்பு.
3) உச்ச நிலை. 4) உச்சக்கட்டம்.

மறுபக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மொழியும் இலக்கியமும் - I தொடர்ச்சி.....

39. ஒரு தன்னிகரில்லாத் தலைவனது வாழ்க்கையை அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் பயப்பப்பாடுவது,
1) காப்பியம். 2) சிற்றிலக்கியம். 3) சுயசரிதை. 4) சரித்திரம்.

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றி காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தி ஒன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகவும் பொருத்தமான வைப்பு முறையை தெரிவுசெய்க.
அ - ஏனெனில், இத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருள்கள் அக்கிராமங்களிலேதான் காணப்படுகின்றன.
ஆ - தலைமுறை தலைமுறையாக நடைபெற்றுவரும் இத்தொழில்களிலே அவர்கள் தக்க திறமையும் பெற்றிருக்கின்றனர்.
இ - ஓய்வான நேரங்களில் பற்பல குடிசைக் கைத்தொழில்களில் ஈடுபடும் மக்களைக் கிராமங்களிலேதான் காணலாம்.
ஈ - ஆகவேதான் அவர்களது ஆக்கப்பொருள்கள் கவர்ச்சியானவையாகவும் நீண்டகாலப் பாவனைக்கு ஏற்றவையாகவும் காணப்படுகின்றன.
உ - இத்தொழில்கள் அவர்களுக்குப் பொழுதுபோக்காக மட்டுமன்றிப் பொருளாதார நிறைவுக்கும் உதவுகின்றன.
1) இ, உ, ஈ, அ, ஆ 2) இ, அ, உ, ஆ, ஈ
3) ஆ, அ, உ, இ, ஈ 4) உ, ஆ, இ, அ, ஈ

## தமிழ்மொழியும் இலக்கியமும் - II 22-T-II

01. சுருக்கமான விடை தருக.
01) பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
என்றந்தப் பேதை யுரைத்தாள்
இந்த வசை எனக்கெய்திடலாமோ?
02) " ஆறிலும் சாவு நூறிலும் சாவு" இவ்வாக்கியத் தொடரின் எழுவாய், பயனிலை என்பவற்றைக் குறிப்பிடுக.
03) " சேரியில் சேர்ந்துவிட்ட வைணவத் தொண்டரை வைணவர்கள் கூடி ஆசாரம் கெட்டவர் எனக் குற்றம் சாட்டினர்." இங்கு 'சேரி' என்பதன் பொருள் யாது?
04) "பாமர மக்கள் நாட்டார் பாடல்களைப் பாடினர்" இவ்வாக்கியத்தைச் செயற்பாட்டு வாக்கியமாக மாற்றி எழுதுக.
05) வினைச் சொல்லின் சிறப்பியல்பு யாது?
06) " பணி" என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.
07) நான்காம் வேற்றுமை உருபுக்குப் பதிலாக பயன்படும் சொல்லுருபு கள் யாவை?
08) மின்னியல் கடித வகைகள் இரண்டு தருக.
09) சுவரொட்டிக்கும் துண்டுப்பிரசுரத்துக்கும் இடையிலான வேறுபாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.
10) "நேர்முகவர்ணனை" நடைபெறும் நிகழ்வுகள் இரண்டினைத் தருக.

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான தலைப்பு இடுக.
1) யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து எமது நாடு புதிய சகாப்தத்தை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கும்போது இளைஞர், யுவதிகளோ தங்களுக்குரிய வழி எதுவென தெரியாமல் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறான கட்டுப்பாடற்ற இளைஞர் சிலர் பெற்றோரையோ, பெரியவர்களையோ, ஆசிரியர்களையோ மதிக்காதவர்களாக இருக்கின்றனர். இவர்கள் விடும் தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்த முற்படுகின்றபோது அவற்றை உதாசீனம் செய்வதோடு பெரியவர்களுடன் முரண்படுவதையும் அவதானிக்க முடிகிறது. இளைஞர்கள் தொழில்வாய்ப்புக்கள் அல்லது ஒழுங்கான வழிப்படுத்தல்கள் இன்றி இருக்கின்ற ஒரு நாட்டில் அல்லது சமூகத்தில் குற்றச்செயல்கள் அதிகமாக இடம்பெறுவதற்கு வாய்ப்புள்ளது. இவற்றைக் கருத்திற்கொண்டு இன்றைய இளைஞர், யுவதிகளை வழிப்படுத்தும் வகையில் அமைந்த விவரணக் கட்டுரை ஒன்றை வரைக.
2) மாணவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவுத் திட்டம் பற்றிச் சாதகமான கருத்து உள்ள ஒருவருக்கும், பாதகமான கருத்துள்ள ஒருவருக்குமிடையே நடைபெறும் உரையாடல்.
3) சனப்பெருக்கம் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு தடையாக இருக்கும். (சனத்தொகைக் கட்டுப்பாடுகள் கிரமமாக மேற்கொள்ளப்படுகின்றன.)
4) உடைந்த தளபாட இருக்கை பற்றிக் கற்பனைக் கட்டுரை எழுதுக.

03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40- 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. ( சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக.)

சிறந்த சிறுகதையில் நல்ல கதையம்சம் இருக்கவேண்டும். அது ஏதாவது ஒரு நிகழ்ச்சியை மட்டுமே விபரிப்பதாக இருக்க வேண்டும். ஒரு மூச்சில் படித்து முடித்துவிடக்கூடியதாக அதை அமைக்க வேண்டும். அது தனக்கென ஒரு தனிப் பண்பைக் கொண்டிருக்கவேண்டும். படிப்போர் மனதில் ஆழப்பதிந்து கிளுகிளுப்பை ஏற்படுத்த வேண்டும். ஆரம்பத்திலிருந்து முடிவு வரையில் தொய்வின்றி ஒரே சீராகச் செல்லவேண்டும்.

சிறுகதை என்பது இலக்கியத்தில் ஒருபகுதி. இலக்கியத்தின் ஒரு வடிவம். இலக்கியம் என்பது ஒரு கலை. கலையைப் படைப்பது படைப்புத்திறன். படைப்புத்திறனை ஒருவன் இன்னொருவனுக்குக் கற்பிக்க முடியாது. ஒருவனிடமிருந்து இன்னொருவன் கற்றுக்கொள்ளவும் முடியாது. அப்படிக் கற்பிக்க முடியாததும் கற்றுக்கொள்ள முடியாமலும் இருப்பதுதான் படைப்புத்திறன். படைப்புத்திறனை கற்பிக்க முடியாதா? இது என்ன புதிர் என்று சிலர் ஆச்சரியப்படலாம். ஆம்; அதைக் கற்பிக்க முடியாதுதான். விருத்தப்பாவை இயற்றுவது எப்படி என்று ஒருவன் மற்றொருவனுக்குக் கற்பிக்கலாம். கற்றுக்கொண்டவன் விருத்தப்பாவை இயற்றிவிடலாம். ஆனால் அந்த விருத்தப்பா ஒரு கலைப் படைப்பாக, ஒரு சிறந்த கவிதையாக அமைவது இயற்றியவரின் திறமையைப் பொறுத்த விடயம். உலகில் எல்லா நாடுகளிலும் கோடிக் கணக்கானவர்கள் இலக்கிய இலக்கணங்களைக் கற்றிருக்கிறார்கள். ஷேக்ஸ்பியர், காளிதாசர், தாந்தே என்று ஒரு சிலரைத்தான் மகாகவிகள் என்கின்றோம். அந்த மகாகவிகள் மற்றவர்களிடம் இலக்கணத்தையும், இலக்கியத்தையும் அதன் நயங்களையும் தான் கற்றுக்கொண்டார்களேயொழிய படைப்புத்திறனைக் கற்கவில்லை. (10 புள்ளிகள்)

04. பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.
அந்தி மாலை நீங்கிய பின்னர்
வந்து தோன்றிய மலர்கதிர் மண்டிலம்
சான்றோர் தங்கண் எய்திய குற்றம்
தோன்று வழி விளங்குந் தோற்றம் போல
மாசறு விசும்பின் மறுநிறங் கிளரளு
ஆசற விளங்கிய அந்தீந் தண்கதிர்
வெள்ளி வெண்குடத்துப் பால் சொரிவதுபோல்
கள்ளவிழ்பூம்பொழில் இடையிடைச் சொரிய.

1) இப்பாடலில் இடம்பெறும் காட்சி எது?
2) இங்கு வெளிப்பட்டுத் தோன்றியது எது?
3) மாசு, விசும்பு என்ற சொற்களின் பொருளைக் கூறுக.
4) இப்பாடலில் இடம்பெறும் அணியினை விளக்குக.
(10 புள்ளிகள்)

05. "டெங்குக்காய்ச்சல் அபாயகரமானது" அண்மைக்காலங்களில் டெங்குக்காய்ச்சலினால் இலங்கையில் பலர் மரணமடைந்துள்ளனர். " டெங்கு காய்ச்சல் பரவாதிருப்பதற்கு மக்கள் கைக்கொள்ள வேண்டிய நடைமுறைகளை விளக்கி ஒரு துண்டுப் பிரசுரம்.

(15 புள்ளிகள்)

## தமிழ்மொழியும் இலக்கியமும் - III 22-T-III

* எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
01. சுருக்கமான விடை தருக.
01) பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம் நயனுடை யான்கட் படின்
அ. ஒப்புரவுசெய்யும் நேர்மையாளனிடம் சேரும் செல்வம் எதைப் போன்றது?
ஆ. இக்குறட்பாவில் இடம்பெறும் அணி எது?
02) மாக்கடுங்கோன் நன்னலம் காணக்
கதவம் துளை தொட்டார்க்கு ........ இங்கு மாக்கடுங்கோன் யார்?
03) இரவு நீடுவதைக் குறித்து தலைவி இரங்குவதாகப் பாடிய கவிஞர் யார்?
04) குத்துக்கட்டை மேலேறி......... என்ற நாட்டார் பாடல் எப்பிரதேசத்துக்கு உரியது?
05) "முன்னோர்க்கு" கவிதை இடம்பெறும் நூல் எது? அதனை இயற்றியவர் யார்?
06) "கலம்பகம்" என்றால் என்ன?
07) கவிச்சக்கரவர்த்தி கம்பர் இயற்றிய நூல்கள் எவை?
08) "மகாலட்சுமி போல இருக்கீங்கம்மா!ஒங்களுக்கு ஒண்ணும் கொறவு வராது." இக்கூற்று யாரால்? யாருக்கு? கூறப்பட்டது.
09) பார்வைகள் என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்?
10) "நல்ல மரமும் நச்சு மரமும்" என்ற கட்டுரை இடம்பெறும் நூல் எது? அதன் ஆசிரியர் யார்? (20 புள்ளிகள்)

02. பின்வரும் செய்யுட்பகுதிகள் உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்புக்களை விளக்கி எழுதுக.
1) நிலவாய் விளங்குதலா னீள்வான் படிந்து
சிலபோ துலாவுதலாற் சென்று - தலைமேல்
உதித்து வரலா லுயர்மா மலையை
மதிக்கு நிகராக வழுத்து.

2) மல்லல் மறுகில் மடநா குடனாகச்
செல்லும் மழவிடை போற் செம்மாந்து - மெல்லியலாள்
பொன்மாலை பெற்றதோ ளோடும் புறப்பட்டான்
நன்மாலை வேலான் நளன்.

3) திருவழுந்தூர்ப் புலவர் எந்தவகையில் பார்த்தாலும் ஆழம்காண முடியாத பெருங்கடலாக இருக்கிறார். ஒரேயொரு பாடலைத்தான் பாடினார். அதன் கற்பனை என்னையும் கவர்ந்தது. புவனமுழுதுடையானின் உள்ளத்தையும் ஆட்கொண்டது. அந்த ஒரே பாடலில் ஒரேயொரு சொல், அந்த ஒரு சொல் மூன்று தலைமுறைகளாக சோழசாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் வீற்றிருந்த ஒட்டக்கூத்தரின் கவிச்சக்கரவர்த்தி பதவியையே அசைத்துவிட்டது. ஆனால், கம்பர் யார்? கம்பரின் உள்ளம் எப்படிப்பட்டது? அவர் என்ன எண்ணுவார்? எதைச் சொல்லுவார்? இதெல்லாம் அறிய முடியாத மாயமாக இருக்கிறது.

4) பாரதியாரின் கவிநயத்தை ஒரு சிறு வியாசத்தினுள் விளக்கிக்காட்டுதல் இயலாது. இயற்கையிலும் அழகையும், பசுமையையும், இனிமையை ஒழுங்கு திரட்டிப் பாடலாக்கி நமக்கு தந்திருக்கிறார். முத்துச்சுடர் போன்ற வெண்ணிலா பத்துப் பன்னிரண்டு தென்னை மரமும் கீற்று இளநீரும், காதில் விழும் குயிலோசையும் கலந்திட ஒரு பத்தினிப் பெண்ணும், பராசக்தியின் காணும் இருந்தால் இவ்வையகத்தை தன்னுடைய பாட்டுத்திறமையாற் பாடி கூடும் என்னும் பொருளை அமைத்து காண வேண்டும் என்ற தொடக்கத்து ஒரு பாடல் எழுதியுள்ளார்.

03. "நளவெண்பா" சுயம்வர காண்டத்தை ஆதாரம் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
1) தமயந்தி வர்ணிக்கப்படுமாற்றிலுள்ள சிறப்பு யாது?
2) சுயம்வரமண்டலத்தில் தமயந்தி நளன் அறிந்துகொண்ட விதம்.
அல்லது
தனிப்பாடல்களில் இரவு நீடுவதைக் குறித்து தலைவி எவ்வாறு இரங்குகிறாள்?

04. "நல்லமுரமும் நச்சுமரமும்" என்ற கட்டுரையின் அறிவுடையார் கைப்பட்ட செல்வத்தையும், பேதையர் கைப்பட்ட செல்வத்தையும் ஒப்புநோக்கியிருக்குமாற்றை விளக்குக.
அல்லது
"விடியுமா" என்ற சிறுகதையில் வரும் முக்கிய பாத்திரங்களையும் அவற்றின் குண இயல்புகளையும் விளக்குக.

* இல. 5-7 வரையான வினாக்களில் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுக.
05. அ. மானங்குலங்கல்வி....... (நல்வழி)
ஆ. பாலோடளாய நீர் ................. (நாலடியார்)
1) இப்பாடல்களில் உள்ள நீதிக்கருத்துக்களை விளக்குக.
2) இந்த நீதிக்கருத்துக்கள் எடுத்துக் கூறப்படுமாற்றினை சிறப்புக்களை ஆராய்க.

06. "கவிச்சக்கரவர்த்தி" என்ற நாடகத்தில் "கம்பர்" ஒட்டக்கூத்தர் இருவரினதும் குணவியல்புகளை விளக்குக.

07. "பாரதியார் கவிநயம்" என்ற கட்டுரையை ஆதாரமாகக்கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
1) பாரதியார் வசனக் கவிதை முன்னோடி.
2) இயற்கை அழகுக் காட்சிகளை வர்ணிப்பதில் பாரதி நிகரற்றவர்.

-நிறைவுற்றது-

ஆசிரியர்:- N.கணேசமூர்த்தி,
யாழ்/கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி, காரைநகர்.
தொ.பே.இல: 021-5100467

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அறிவித்தல்

## யாழ்.மாவட்டச் செயலகம், சகல பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் என்பவற்றுக்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்-2010

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திற்கும், சகல பிரதேச செயலகங்களுக்கும்/ உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்கும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருள்கள், சேவைகளை வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள்/ ஒப்பந்தகாரர்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பவற்றிடமிருந்து 2010ஆம் ஆண்டுக்கான பொருள்கள் சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப் படிவங்களை மாவட்டச் செயலக களஞ்சிய நலன்புரிக் கிளை, சகல பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் 16.11.2009 தொடக்கம் 15.12.2009 வரை அலுவலக நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைக் கடித உறையின் (9''x4'') இடது பக்க மேல் மூலையில் ''வழங்கல்கள்/ சேவைகள் பதிவு செய்தல்-2010'' எனக் குறிப்பிட்டு ''அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்'', என்னும் முகவரிக்குத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ 24.12.2009 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பவேண்டும்.

### வழங்கல்கள்

01. காகிதாதிகள், எழுதுபொருள்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள்
02. தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/உருக்கு)
03. கணனிகள், கணனியுடன் தொடர்புடைய ஏனைய இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள்/ போட்டோக் கொப்பி இயந்திரங்கள்/ தொலைபேசிகள்/ தொலைநகல்கள்/ தட்டச்சு இயந்திரங்கள்/ இவற்றுடன் தொடர்புடைய ரோனர்கள், றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலகத் தளபாடங்கள்
04. இயந்திரக் கருவிகளும் அதன் உதிரிப்பாகங்களும்
05. ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணி வகைகள்
06. மின்சாரப் பொருள்களும், அதன் உதிரிப்பாகங்களும் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருள்களும்
07. கட்டட, இரும்புப் பொருள்கள், பெயின்ற், வாணிஸ் மற்றும் சகல ஹாட்வெயர் (மணல், கல் உட்பட) பொருள்களும்
08. தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பங்கள், மொப்பர்கள்
09. கார்பிக், விம், பினோல், சவர்க்காரம், மாபிள் அசிட், எயார் பிரஷ்னர்கள் (Air Fresher)
10. நீர் இறைக்கும் மோட்டர்கள், அதன் உதிரிப்பாகங்கள் மற்றும் துணை உறுப்புகள்
11. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்- டயர், டியூப்புகள் மற்றும் பற்றரிகள்
12. பைப்புகள், பைப் இணைப்புகள் அவற்றுடன் தொடர்புடைய பொருள்கள்
13. பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ் உற்பத்திப் பொருள்கள்- கதிரை மேசை போன்ற பொருள்கள்
14. பால்மா வகைகளும் பிளாஸ்ரிக் குவளை வகைகளும் (Nescafe Premix & Disposal Cups, Ect.)
15. கட்டட மற்றும் வாகன வளி பதனாக்கி (A/C)
16. தோல் வகை உற்பத்திப் பொருள்கள்
17. விளையாட்டுப் பொருள்களும் அதனுடன் தொடர்புடைய பொருள்களும்

### சேவைகள்/ திருத்தங்கள்

01. கட்டட நிர்மாணம் மற்றும் கட்டட வேலைகள் மற்றும் சேவைகள் (Services)
02. மோட்டார் வாகனங்கள் திருத்த வேலை/ சுத்திகரிப்பு வேலைகள், பற்றரி திருத்த வேலைகள் (Services)
03. அச்சிடுதல், றப்பர் ஸ்ராம்புகள், திகதி ஸ்ராம்புகள்
04. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் திருத்த வேலைகளும் பராமரிப்புகளும் (கணனிகள், கல்குலேற்றர்கள்/ றோணியோ இயந்திரங்கள்/ போட்டோக் கொப்பி இயந்திரங்கள்/ தொலைநகல்கள்/ தட்டச்சு இயந்திரங்கள் போன்றன)
05. குளிர்சாதனப் பெட்டிகள், எயர்கொண்டிசனர்கள் திருத்த வேலைகளும் பராமரிப்புகளும்
06. மர, உருக்குத் தளபாடத் திருத்த வேலைகள்
07. பெயர்ப் பலகைகள் வரைதலும் பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள் (3D உட்பட) செய்தலும்
08. உள்ளகத் தொலைபேசித் திருத்த வேலைகளும் பராமரிப்புகளும் (Services)
09. மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தலும் மீள் முறுக்குதலும் (Winding)
10. மின்சார வயரிங் வேலைகள், கணனி வலைப்பின்னல் வேலைகள் மற்றும் சேவைகள்
11. நீர் வழங்கும் குழாய்கள் பொருத்துதல் மற்றும் திருத்துதல்.

### பதிவு தொடர்பானவை

மாவட்டச் செயலகத்தில் பொருள்கள் சேவைகள் தொடர்பாகப் பதிவுகளை மேற்கொள்பவர்களிடம் இருந்தே 2010ஆம் ஆண்டுக்கான பொருள்கள் சேவைகளுக்கான கூறுவிலைகள் பெறப்படும் என்பதால் மாவட்டச் செயலகங்களுக்கோ, சகல பிரதேச செயலகங்களுக்கோ, உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்கோ, மாவட்டச் செயலகத்துடன் இணைந்த திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கோ பொருள்கள் சேவைகள் வழங்க விருப்பமுடையவர்கள் மாவட்டச் செயலகத்தில்/ பிரதேச செயலகத்தில்/ உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் விண்ணப்பத்தினைப் பெற்றுப் பதிவுகள் மேற்கொள்வதற்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை மாவட்டச் செயலகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

**க.கணேஷ்,**
**மாவட்டச் செயலரும்,**
**அரசாங்க அதிபரும்,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(சி/562235)

## துணுக்காய்ப் பகுதியில் இதுவரை 6,000 மக்கள் மீளக் குடியேற்றப்பட்டதாக அரச அதிபர் தகவல்

கொழும்பு, நவ.13

மனிக்பாம் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்ப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களை மீள்குடியேற்றும் பணிகள் இறுதிக்கட்டத்தை நெருங்கியிருப்பதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்திருக்கின்றார்.

இதுவரையில் இந்தப் பகுதியில் 6 000 பேர் மீண்டும் குடியமர்த்தப்பட்டிருக்கின்றனர் என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, துணுக்காய்ப்பிரதேசத்தில்மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் போக்குவரத்து, விவசாயம், கல்வி ஆகிய துறைகளில் வசதிகளை மேம்படுத்துவதற்காக துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்திருக்கின்றார்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் துணுக்காய்ப் பிரதேசத்தின் விவசாய அபிவிருத்திக்கென 14 மில்லியன் ரூபாவும், இந்தப் பகுதியில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள 19 பாடசாலைகளைப் புனரமைத்து வசதிகளை மேம் படுத்துவதற்காக 39 மில்லியன் ரூபாவும் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அவர்மேலும் கூறினார்.

(அ-7)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



தோற்றம்: 19.04.1975

மறைவு: 14.05.2009

**வெள்ளையன் கீதகுமார்**

(சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்)

எம் வாழ்க்கையை வசந்தமாக்கி - எமை
ஊர்போற்ற வாழ வைத்த அன்புத் தெய்வமே!
இப்போ எமையெல்லாம் தவிக்கவிட்டு - நீ
மட்டும் எங்கு சென்றாய்?
தாங்க முடியவில்லையே எம்மால்...

சண்டிலிப்பாய் வடக்கு. (சி/562220) குடும்பத்தினர்.

## நினைவஞ்சலி

10 ஆம் வருட 31 ஆம் நாள்



தோற்றம்: 29 * 06 * 1920 — தோற்றம்: 26 * 04 * 1926

மறைவு: 17.07.1999 — மறைவு: 15.10.2009

**அமரர் அப்பாக்குட்டி செல்வராசா — திருமதி பொன்னம்மா செல்வராசா**

குப்பிழான் மண்ணில் பிறந்து கற்கரை விநாயகர் துணையுடன் வாழ்ந்து சிவபதம் அடைந்தனர். அவர்களின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஞா.பா.ச.வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

தகவல்: அ.சிவபாக்கியம் (மகள்), ஐ.அரசபிள்ளை (மருமகன்)
பேரப்பிள்ளைகள்: அ.கமலதாசன் (கனடா) அ.கல்யாணி, அ.அரவிந்தன் மற்றும் க.சைலா (கனடா), பூட்டப்பிள்ளை-க.யவிசா

## 100 ஆவது பிறந்தநாள் நினைவஞ்சலி — 99 ஆவது பிறந்தநாள் நினைவஞ்சலி



**அருட்திரு. E.D.இராசரத்தினம்**

தோற்றம்: 14.11.1909
மறைவு: 28.03.1993

**திருமதி நேசமணி இராசரத்தினம்**

தோற்றம்: 08.11.1910
மறைவு: 07.02.1998

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்.

இமையாணன், உடுப்பிட்டி. (90861)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2025ஆம் ஆண்டளவில் நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை 380 கோடியை எட்டுமென அச்சம்

உலக நீரிழிவு தினமானது ஒவ்வாரு வருடமும் கார்த்திகை மாதம் 14 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டு வருகின்றது. நீரிழிவு நோய்க்குப் பயன்படுத்தும் இன்சுலின் மருந்தினை சார்ள்ஸ் பெயிஸ்ட் (Charles Best) என்பவருடன் இணைந்து 1921 ஆம் ஆண்டு கண்டு பிடித்தவரான பிறட்றிக் பான்ரிங் (Fredrick Banting) என்பவரின் பிறந்ததின நினைவாக இந்நாள் கொண்டாடப்பட்டு வருகின்றது. இத்தினத்தில், சர்வதேச ரீதியில் ஏறத்தாள 150 நாடுகளில் உள்ள மக்கள் ஒன்றிணைந்து இந்நோய் சம்பந்தமான விழிப்புணர்வினை ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்நோயினால் பரந்தளவில் ஏற்படும் தாக்கத்தினைக் கருத்தில் கொண்டு, உலக நீரிழிவு தினமானது சர்வதேச நீரிழிவு சம்மேளத்தினாலும் மற்றும் உலக சுகாதார நிறுவனத்தினாலும் 1991ஆம் ஆண்டு முதன்முறையாக அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது. தொடர்ந்து, ஐக்கிய நாடுகள் சபையினால் 2006ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 61/225 தீர்மானத்திற்கமைவாக இத்தினம் ஐக்கிய நாடுகள் சபையினால் அனுசரிக்கும் ஒரு தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது

இத்தினத்திற்கான தொனிப்பொருள் "நீரிழிவு சம்பந்தமான அறிவும் பாதுகாப்பும்" எனக் கருதப்படுகின்றது. மற்றும், இலச்சனையிலுள்ள வட்டம் "வாழ்வும் நலமும்" என்கின்ற பொருளுடனும், நீல நிறமானது சகல நாடுகளையும் இணைக்கும் ஆகாயத்தையும் ஐ.நா. சபையின் கொடியின் வர்ணத்தையும் குறிக்கின்றது. இதைவிட, நீல நிற வட்டமானது நீரிழிவு என்கின்ற கொடிய நோயினை எதிர்த்து உலகளாவிய ரீதியில் மக்கள் ஒருங்கிணைந்து போராடுவதையும் குறிக்கின்றது.

இத்தினத்தில் உலகளாவிய ரீதியில் பல நாடுகளிலிலுமுள்ள 500இற்கும் மேற்பட்ட முக்கிய பிரசித்தி வாய்ந்த இடங்கள் நீல நிறமான ஒளிப்பிளம்பாகக் காட்சியளிக்கவிருக்கின்றன. இதுவரை ஏறத்தாள 40 நாடுகள் இவ்வாறான விசேட ஒழுங்கிற்கு உடன்பட்டுள்ளன. இவ்வாறான நாடுகளின் பட்டியலில் ஆர்ஜென்ரீனா நாடு ஏறத்தாள 100 முக்கியமான இடங்களிலும், ஜப்பான் 86 இடங்களிலும், பிறேசில் 64 இடங்களுமாக முன்னணியில் இருக்கின்றன.

இதற்கு முன்னோடியாக, இன்சுலின் மருந்தின் பிறப்பிடமான கனடா நாட்டின் மொன்றியல் நாட்டில் இவ்வருடத்தின் முற்பகுதியில் நடைபெற்ற உலக நீரிழிவு மகாநாட்டின் தொடர்ச்சியாக முதலாவது நீல நிற ஒளிப் பிளம்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

**லயன் செ.ஞானராஜா**
மாவட்ட இணைப்பாளர்,
சர்வதேச லயன்ஸ் கழகங்கள்,
-மாவட்டம் 306 B1.

**உலக நீரிழிவு தினத்தில் சர்வதேச லயன்ஸ் கழகங்களின் ஈடுபாடு**

சர்வதேச லயன்ஸ் கழகங்கள் பல முக்கியமான நிகழ்வுகளை அனுசரித்து வருகின்றன. அந்தவகையில் உலக நீரிழிவு தினமும் முக்கியமானதொரு நிகழ்வாகும். இத்தினத்தில் உலகளாவிய ரீதியில் ஏறத்தாள 13 லட்சத்திற்கு மேற்பட்ட அங்கத்தவர்களுடனும் இயங்கும் 45,000 இற்கு மேற்பட்ட லயன்ஸ் கழகங்கள் நீரிழிவு சம்பந்தமான பல செயற்றிட்டங்களை நடத்தி மக்களுக்கு விழிப்புணர்வினையும், நோய் சார்ந்த உதவிகளையும் செய்து வருகின்றன. உலக சுகாதார நிறுவனத்தின் கணிப்பின்படி ஏறத்தாள 246 கோடி மக்கள் இந்த நோயின் தாக்கத்திற்குட்பட்டிருப்பதாகவும் 2025 ஆண்டளவில் இத் தொகையானது 380 கோடியினை எட்டக் கூடுமெனவும் அஞ்சப்படுகின்றது.

நீரிழிவு நோயின் தாக்கம் தொடர்ச்சியாக 15 வருடங்களுக்கு இருப்பவர்களில் ஏறத்தாள 2 வீதமானோருக்கு கண்பார்வை இழப்பும், 10 வீதமானோருக்கு பாரதூரமான கண்பார்வைக் குறைவும் ஏற்படுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. நீரிழிவு நோயுடன் இரத்த அழுத்தம் மற்றும் புகைப்பிடிக்கும் பழக்கமுள்ளவர்களுக்கு கண் பார்வைத்தாக்கம் ஏற்படும் ஆபத்து அதிகமாகக் காணப்படும். லயன்ஸ் கழகங்கள் "பார்வைக்கு முதலிடம்" என தங்களுடைய செயற்றிட்டங்களை முன்னுரிமைப்படுத்தி வைத்துள்ள நிலையில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பார்வைக் குறைபாடு சம்பந்தமான ஆபத்து இருப்பதனால் லயன்ஸ் கழகங்கள் உலக நீரிழிவு தினத்தில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தியுள்ளனர். நீரிழிவுடன் இணைந்த் பார்வை இழப்பினை புதிதாக இனங்காணும் நீரிழிவு நோயாளிகளிடமிருந்து குறைக்கும் நோக்குடன், 1984ஆம் ஆண்டு பங்குனி மாதம் முதல் தொடக்கம் லயன்ஸ் கழகங்கள் நீரிழிவு விழிப்புணர்ச்சியினை ஒரு நீண்டகால செயற்றிட்டமாக நடைமுறைப்படுத்தி வருகின்றன. இதன் பிரகாரம், நீரிழிவு சம்பந்தமான அறிவுரைகள், தடுப்புமுறைகள், ஆராய்ச்சிகள் என்கின்ற செயற்றிட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். நீரிழிவு நோயாளர்கள் வருடாந்தம் தங்களுடைய கண்களைப் பரிசோதிப்பதும் அவசியமாகும்.

கடந்த ஜூலை மாதம் அமெரிக்க நாட்டின் மினியோபோல்ஸ் நகரில் நடத்தப்பட்ட 92 ஆவது சர்வதேச லயன்ஸ் கழகங்களின் வருடாந்த மகாநாட்டில் "நீரிழிவுடன் கலந்த பார்வை சம்பந்தமான நோய்கள்" என்கின்ற மிகவும் முக்கியமானதொரு பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டு லயன்ஸ் கழகங்கள் எவ்வாறு நீரிழிவு சம்பந்தமான செயற்றிட்டங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளலாமென ஆராயப்பட்டது. மற்றும் முக்கியமாக லயன்ஸ் கழகங்களால் நடத்தப்படும் நீரிழிவு சம்பந்தமான சகல மருத்துவ முகாம்களும் அந்தந்த நாட்டு சட்ட திட்டங்களுக்கு அமைவாக இருக்க வேண்டுமெனவும் மற்றும் கட்டாயமாக சுகாதாரப் பராமரிப்பு சார்ந்தவர்களின் கண்காணிப்புடனும் நடத்தப்பட வேண்டுமெனவும் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டது.

இவற்றிற்கு மேலாக, சர்வதேச லயன்ஸ் கழகமானது அமெரிக்காவிலுள்ள "Diabetes Education & Camping Association" என்கின்ற அமைப்புடன் இணைந்து நீரிழிவு சம்பந்தமான செயற்பாடுகளில் ஈடுபடும் நிறுவனங்களின் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் உதவிகளையும் செய்து வருகின்றது. ஆதாரம் (www.lionsclubs.org).

சர்வதேச லயன்ஸ் கழகங்கள் - மாவட்டம் 306 B1 இன் தற்போதைய ஆளுநரான லயன். லக்ஸ்மன் விஜேசிங்க MJF அவர்கள் நடப்பு வருடத்திற்குரிய தன்னுடைய ஐந்து அம்ச செயற்றிட்டத்தில் நீரிழிவு விழிப்புணர்வினையும் ஒரு முக்கியமான செயற்றிட்டமாகக் கொண்டுள்ளார். இதற்கமைவாக, சகல லயன்ஸ் கழகங்களும் உலக நீரிழிவு தினத்தில் பல விதமான சேவைத்திட்டங்களை மேற்கொள்ளும்.

**பாகற்காயின் மகிமை**

சித்த மருத்துவமுறையில் நீரிழிவு நோயினைக் குணப்படுத்தும் தன்மை நாம் வழமையாகப் கறியில் சேர்க்கும் பாகற்காயில் பெருமளவில் காணப்படுகின்றது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, பாகற்காயின் கைபோகிளிசெமிக் [Hypogly cemic] அல்லது தாவர இன்சுலின் எனப்படும் பதார்த்தம் காணப்படுவதாகவும், இது சலத்திலும் மற்றும் இரத்தத்திலும் சீனி அளவினைக் குறைக்கும் தன்மையினைக் கொண்டதாக இருக்கின்றது. ஆகவே, நீரிழிவு நோய் காணப்படுபவர்கள் தங்களுடைய நாளாந்த உணவில் பாகற்காயினைச் சேர்த்துக்கொள்ளலாம். பாகற்காயினை பிழிந்து சாறாக காலை வேளையில் வெறும் வயிற்றில் அருந்தலாம். பாகற்காயின் விதைகளையும் பொடி செய்து உணவுடன் கலந்தும் சாப்பிடலாம். அநேகமான நீரிழிவு நோயாளர்கள் வழமையாக குறைவாகச் சாப்பிடுவதால் சத்துக் குறைவுள்ளவர்களாகக் காணப்படுவர். பாகற்காய், A,B1, B2, C என்கின்ற விற்றமின் வகைளையும் இரும்புச்சத்தையும் கொண்டுள்ளது. இவ்வாறான மருத்துவக் குணங்களைக் கொண்ட பாகற்காயினை நீரிழிவு நோயாளர்கள் தங்களுடைய நோயின் தாக்கத்திற்கமைவாக ஒரு சித்த மருத்துவரின் ஆலோசனையின் படி மேற்கொண்டால் நீரிழிவு நோயினைக் கட்டுப்படுத்த முடியும். ஆதாரம்- http:// flaboursofindia.tripod. com/ bittergourd.html.

## பரிசளிப்பு விழாவும் நாடக விழாவும்

யாழ்ப்பாணம்,நவ.14

வடமராட்சி கல்வி வலய சமூக ஒருமைப்பாட்டுப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழாவும், நாடக விழாவும் இன்று சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஷ்பலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் ந.தெய்வேந்திரராஜா கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி கே.அம்பலவாணர் கலந்துகொள்வார்.

வலய மட்டத்தில் நடத்தப்பட்ட திருக்குறள் மனனப் போட்டி, சித்திரப் போட்டிகளில் முன்னிலைகளைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படும்.

(203-236)

## மக்கள் முகம்



றோயல் இரசாயன கழகம் (பட்டய இரசாயனவியலாளர் சங்கம்) இலங்கைப்பகுதித் தலைவர் எஸ். பேராசிரியன், இங்கிலாந்து றோயல் இரசாயன கழகத்தில் தலைமையக அழைப்பை ஏற்று நவம்பர் மாதம் 20-23ஆம் திகதி நடைபெறவிருக்கும் இரசாயனிகள் ஒன்று கூடலில் கலந்து கொள்வதற்காக அடுத்தவாரம் லண்டன் பயணமாகின்றார்.

16 நாடுகளிலுள்ள றோயல் இரசாயனக் கழகத் தலைவர்கள் இக் கருத்தரங்கில் ஒன்றுகூடி, இரசாயனவியலாளர்களின் தரத்தை எவ்வாறு மேம்படுத்தலாம், கல்லூரிகளில் இரசாயனவியலை மாணவர்கள் ஆர்வமுடன் கற்றுக்கொள்ள எவ்வகை நடவடிக்கைகள் எடுக்கலாம், இரச்ாயனவியலில் ஆய்வுகளின் போக்கு என்ன என்பன போன்ற பல விடயங்கள் ஆராயப்படும். இக்கருத்தரங்கில் பேராசிரியன் கலந்து கொண்டு இலங்கையில் இரசாயனவியலாளர்கள் எதிர்நோக்கும் சவால்கள் பற்றி எடுத்துரைக்கவுள்ளார்.

எஸ். பேராசிரியன் ஒரு பட்டய இரசாயனவியலாளர். இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தில் பிரசாரக்குழு அங்கத்தவராக இருந்து பாடசாலைகளில் விஞ்ஞானதின வைபவங்களை ஒழுங்கு செய்து நடத்தி ஒருகிறார்.

விஞ்ஞானத்தை பாமர மக்களிடையே பரப்புவதற்கு அயராது உழைத்து வரும் இவர், விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் வெளியிடும் 'ஷிஞ்ஞான முரசு' எனும் சஞ்சிகைக்கு ஆசிரியராகப் பணிபுரிகிறார். வீரகேசரி, தினக்குரல், உதயன் ஆகிய பத்திரிகைகளில் அறிவியல் கட்டுரை எழுதிவரும் முன்னணி எழுத்தாளருமாவார்.

* * * * *



யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, விதானையார் வீதியைச் சேர்ந்த அன்டன் நிக்ஸன் பேபி நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால் அகில இலங்கை சமாதான நீதிவானாக அண்மையில் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலயத்தில் தனது ஆரம்ப கல்வியைக் கற்றுள்ள இவர், நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையினதும் பழைய மாணவரும் ஆவார்.

சிறந்த சமூக சேவையாளராக விளங்கும் இவர் 25 வருட காலமாக அரசியல் பணிகளில் ஈடுபட்டுவருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

* * * * *

கல்விப்பணி செய்பவர்களுக்கு காலநேரம், வயது, இடம், பிரதேசம், நாடு, எல்லாம் ஒரு பொருட்டல்ல என சேவை செய்யும் சிலருள் ஸ்ரீரங்கநாதனும் ஒருவராவார். அந்தணராக இருந்தாலும் மொழி, மதம், பிரதேசம் கடந்து கல்விப்பணி செய்தவர் ஸ்ரீரங்கநாதன். கடந்த 31.07.2009 இல் 60 வயது எனும் அரச கடமை எல்லையில் ஓய்வு பெற்றாலும் அதற்கப்பாலும் கல்விப்பணியில் கிளைபரப்பி நிற்பவர் அவர்.

ஆசிரியர் சதாசிவஐயர் ஸ்ரீரங்கநாதன் மேலைக் கரம்பனில் உதித்தவர். கரம்பன் சண்முகநாத மகா வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி கற்று தொடர்ந்து வேலணை மத்திய மகாவித்தியாலயம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் உயர் கல்வியை முடித்து 1972 ஆம் ஆண்டு ஆசிரிய நியமனம் பெற்று பொலநறுவ அல்ஹிலால் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் தனது கல்விப் பணியை ஆரம்பித்தார். பின்னர் பலாலி ஆசிரியர் கல்லூரியில் விஞ்ஞானப் பயிற்சி பெற்று பயிற்றப்பட்ட ஆசிரியராகி தமது சொந்தக் கிராமப் பாடசாலையான கரம்பன் சண்முகநாத வித்தி யாலயத்தில் கடமையாற்றி வந்தார். 1985 ஆம் ஆண்டு ஆசிரிய ஆலோசகர் நியமனம் பெற்றபோது முதலில் தீவகத்தில் கடமையாற்றிப் பின்னர் மேல் மாகாணத்திற்கு இடமாற்றம் பெற்று வந்து ஹொறணவலயத்தில் தொடர்ந்தும் ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றி 30.07.2009 இல் ஓய்வுபெற்றார். இவர் நீண்டகால ஆசிரிய ஆலோசக சேவையாளர் ஆவார். மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் கல்வியை மட்டும் வளர்ப்பதில் நின்று விடாது, தனது கல்வியறிவையும் தொடர்ந்து பெருக்கும் நோக்கில் இடைக்காலத்தில் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம், நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம் ஆகியன கற்று கலைப்பட்டதாரியாகித் தொடர்ந்து பட்டப்பின் கல்வி டிப்ளோமா என்று தனது கல்வியைத் தொடர்ந்து தனது 59 ஆவது வயதில் MATE (International) எனப்படும். Master of Arts in Education (International) எனும் முதுமாணிப்பட்டத்தையும் பெற்று ஓர் ஆசிரியர் இறுதிவரை கல்வியில் தொடர வேண்டும் என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்தவர்.

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தில் செயற்குழு உறுப்பினராக நீண்ட காலம் செயற்பட்டவர். இந்நிலையத்தின் 'Junior Club' பொறுப்பாளராக செயற்பட்டு அதன் சார்பாக 1990களில் யாழ். மத்திய கல்லூரியில் இவரால் ஒழுங்கு செய்யப்பட்ட " விஞ்ஞானக் கண்காட்சியை' யாரும் மறக்க முடியாது. தீவகக் கல்விக் கோட்டத்தில் "அறிவு" என்ற விஞ்ஞானப் பத்திரிகையை மிக இக்கட்டான காலகட்டத்தில் வெளியிடுவதில் முன்னின்று உழைத்தவர். யுத்த சூழ்நிலையால் சூழப்பட்டிருந்த கரம்பன் சண்முகநாத மகாவித்தியாலயத்தை 1996 ஆம் ஆண்டு மீண்டும் கரம்பனில் இயங்க வைத்தார்.

கொழும்பிற்கு இடமாற்றம் பெற்றுப் பின்பு ஆசிரிய ஆலோசகராகி தேசிய கல்வி நிறுவனத்தில் விஞ்ஞான பாட வளவாளராக இன்றும் திகழ்கிறார்.

1972 இல் நியமனம் பெற்ற காலம் முதல் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் (etu) அங்கத்தவராகவும் செயற்பட்டவர். தமது கிராமமான கரம்பனில் காவலூர் எஸ். சபாரத்தினம் ஆசிரியர் தலைமையில் " காவலூர் இலக்கியவட்டம்" ஆரம்பிப்பதில் முன்னின்று உழைத்து இலக்கியப் பணிகளிலும் ஈடுபட்டவர். யாழ். நகரில் அந்தணர்களின் மேம்பாட்டிற்கான "நியந்திரி" என்ற அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவராக இருந்து அந்தண சமூக மேம்பாட்டிற்கான செயற்பாடுகளிலும் தனது பங்களிப்பை வழங்குவதில் அவர் பின்னிற்கவில்லை. இவரது பணி இதன்பின்னும் மேலும் பல வழிகளில் தொடர ஆண்டவன் அருள் புரியவேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

ந. சதாசிவ ஐயர், உதவிப்பதிவாளர் நாயகம்.

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,நவ.14

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த 4 ஆம் திகதி இடம்பெற்றது.

இதில் தலைவராக பாடசாலை அதிபர் தி.சத்தியபாலன், செயலாளராக பொ.தயாபரன், பொருளாளராக திருமதி சு.சிவசிறி மற்றும் உபதலைவராக திருமதி கெள. பரந்தாமன், உபசெயலாளராக றோ.சிவபுத்திரன் ஆகியோரும் செயற்குழு உறுப்பினர்கள் 11 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (-9)

## புத்தகசாலை

### திருக்கேதீஸ்வரப் பதிகங்களும் ஆய்வுரையும்



சிவபெருமானின் திவ்ய கருணைக்குப் பாத்திரமான நாயன்மார்களான திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் இருவரும் ஈழநாட்டுத் திருத்தலமான திருக்கேதீஸ்வரப் பெருமானைக் குறித்துப் பதிகங்கள் பாடியிருக்கின்றனர்.

அந்த அருமையான தீந்தமிழ்ப் பனுவல் தேவாரங்களுக்கு ஆய்வுரை எழுதி வெளியிட்டிருக்கின்றார் சைவப்புலவர் அம்பலவாணர் சிறீஸ்கந்தராசா (எம்.ஏ.) அவர்கள். நல்ல முயற்சி; பாராட்டப்பட வேண்டியது. நூலின் முன்னுரையிலேயே ஆலயம் பற்றிய ஆய்வு மிக விரிவாக எடுத்தியம்பப்பட்டுள்ளது. மேலும் நாயன்மார் என்ன நிலையிலிருந்து திருவாய்மலர்ந்தார்களோ அந்தக் காட்சி மனத்திரையிலே விழ மனக்கண் பார்த்துப் பரவசப்படத்தக்கவாறு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

திருக்கேதீஸ்வர ஆலய ராஜகோபுரத்துடன் கூடிய மூவர்ண அட்டை அழகாகக் காட்சி தர, பின்பக்கம் நாயன்மார்கள் நால்வரும் அருட்பொலிவோடு இருக்கும் பாங்கு நெஞ்சைத் தொடுகிறது. மலிவான விலையில் வெளிவந்திருக்கும் இந்நூல் மாணவ உலகுக்கு ஒரு வரப்பிரசாதமெனில் மிகையாகாது. [illegible] வாசிக்க வேண்டிய தரமான நூல் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை

## நாளைய பணி நயப்புவிழாவை முன்னிட்ட சிறப்புமலர்

### இறைபக்தியும் தர்ம நோக்கமும் கொண்டவர்



கலாநிதி ச.நா. தணிகாசலம்பிள்ளையின் சேவையைப் பாராட்டி விழா எடுப்பதனையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

எல்லோருடனும் இனிமையாகப் பழகும் சுபாவமும், எடுத்த விடயத்தைச் செவ்வனே ஆற்றும் அறிவுத்திறனும் உடையவர். எல்லோருடைய அன்பையும் பெற்றவர். ஆசிரியராக, அதிபராக, கல்விப் பணிப்பாளராக, கல்வி நிர்வாக உத்தியோகத்தராகப் பணியாற்றி ஒய்வு பெறும் தணிகாசலம்பிள்ளையை வாழ்த்திப் பாராட்டுகின்றோம். வாழும் காலத்தில் செய்கின்ற உதவி அனைவருடைய மனதையும் சந்தோஷப்படுத்துகின்றது. இறைபக்தியும் தரும நோக்கமும் கொண்டு கல்விப்பணி மூலமாக பலருடைய வாழ்விற்கு வழிகாட்டியாக விளங்கியவர். இவருடைய பணியைப் பாராட்டி 'தணிகை' எனும் மலர் வருகின்றது. திரு. தணிகாசலம் பிள்ளை இன்றுபோல் என்றும் சிறப்புடன் வாழ இறைவன் அருள் புரிவாராக!

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.

### அர்ப்பணிப்புடன் சேவை செய்த நல்லாசான்



கலாநிதி நாகமுத்து தணிகாசலம்பிள்ளை அவர்களின் பணிநயப்பு வைபவத்தை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆசிரியராக, அதிபராக, கல்விப்பணிப்பாளராக, கல்வி ஆலோசகராகக் கல்வித்துறையில் நீண்ட காலம் சிறப்பாகச் சேவையாற்றி பாரியதொரு மாணவப் பரம்பரையை உருவாக்கிய நல்லாசானான தணிகாசலம்பிள்ளை அவர்களின் அர்ப்பணிப்பான சேவையை உணர்ந்து கல்வியமைச்சு ஆலோசகர் பதவியையும் வழங்கியுள்ளது.

தற்போது மாண்புமிகு ஜனாதிபதி அவர்களின் 'வடக்கின் வசந்தம்' செயற்றிட்டத்தின் கீழ் அவர் ஆற்றிவரும் பணி பாராட்டப்பட வேண்டியதாகும். வன்னி புலம்பெயர் முகாம்களில் உள்ள 70 ஆயிரம் மாணவர்களின் நலனில் கல்வி அமைச்சு காட்டி வரும் அக்கறைக்கு செயல் வடிவம் கொடுப்பதில் கலாநிதி தணிகாசலம்பிள்ளை அவர்கள் அளப்பரிய பணியினை ஆற்றி வருகின்றார். முகாம்களிலுள்ள ஐந்தாம் தர புலமைப் பரிசில், க.பொ.த சாதாரண தர, உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கு விசேட வகுப்புக்களை நடத்திட கொழும்பிலிருந்து நிபுணத்துவமிக்க ஆசிரியர்களை ஒழுங்கு செய்து அழைத்துச் சென்றுள்ளார்.

இத்தகைய கல்விப் பணிகளை ஆற்றிவரும் அன்னாரை மேலும் பல்லாண்டு கல்வியுலகிற்கு நற்பணியாற்றிட வாழ்த்துகின்றேன்.

எம். சச்சிதானந்தன் [நா.உ]
பிரதிக் கல்வியமைச்சர்.

### அறிவும் அனுபவமும் கொண்டவர்



கல்வி, எங்கள் சமூகத்தின் பெரும் சொத்து. கல்வியினாலேயே எங்களின் சமூக அசைவும் மேம்பாடும் உறுதி பெறுகின்றன.

நீண்டதொரு பாரம்பரியத்தைக் கொண்ட எங்களது கல்வி வளர்ச்சியில் பங்காளிகளான அனைவரும் போற்றுதற்குரியவர்.

இந்த வகையில் தன் ஆசிரிய, கல்வி நிர்வாகப் பணிகளின் வழி சமூகக் கணிப்பினைப் பெறும் கலாநிதி தணிகாசலம்பிள்ளை அவர்களின் சேவை நலன் பாராட்டும் 'தணிகை' இதழுக்கான வாழ்த்தினைத் தருவதில் பெருமகிழ்சியடைகின்றேன்.

'கல்வியில் சமத்துவம்' எனும் உயர் இலக்கினை எய்துவதற்கான பாதையில் வடமாநில கிராமிய பாடசாலைகளின் மேம்பாடு தொடர்பான தணிகாசலம்பிள்ளை அவர்களின் கலாநிதிப் பட்ட ஆய்வின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

எங்கள் பல்கலைக்கழகத்து கல்வியல்துறை வருகை விரிவுரையாளராகவும் பட்டப்படிப்புகள் பீட அங்கத்தவராகவும் கலாநிதி தணிகாசலம்பிள்ளை அவர்களின் பணி விரிந்துள்ளது.

கல்வி அமைச்சின் முதுநிலை ஆலோசகராக தற்போது பணியாற்றும் கலாநிதி தணிகாசலம்பிள்ளை அவர்களின் அறிவும் அனுபவமும் மேன்மேலும் பயன் கனிகளை சமூகத்துக்காக்கிட என் அன்பு வாழ்த்துக்கள்.

பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன்
துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

### முத்திரை பதித்த கல்வியியல் கலாநிதி



கல்விச் சேவையில் நீண்ட பங்களிப்புடன் அனுபவ முதிர்ச்சியுடன் முத்திரை பதித்த கல்வியியல் கலாநிதியும் இலங்கை கல்வி நிர்வாக சேவை முதலாம் வகுப்பில் பதவி உயர்வு பெற்று இளைப்பாறியபின் முதுநிலை கல்வி ஆலோசகராகக் கல்வி அமைச்சில் கடமையாற்றும் நா.தணிகாசலம்பிள்ளையைக் கௌரவிக்கும் பணிநயப்பு விழாவிற்கு இச்செய்தி அனுப்புவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தணிகாசலம்பிள்ளைக்கும் எனக்கும் இடையிலான உறவு பல்கலைக்கழக மட்டத்திலாகும். கல்வித்துறையில் வருகை விரிவுரையாளராகவும் கல்வியியல் ஆய்வு மாணவராகவும் அவர் எனது மேற்பார்வையில் செயற்பட்ட காலத்தில் அவருடைய திறன்களை அவதானிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. எடுத்துக் கொண்ட முயற்சியில் தளராத ஈடுபாடும் நுண்ணிய நோக்கமும் அவர் ஈட்டிய வெற்றிக்கு கால்கோள்களாக அமைந்தன.

கலாநிதிப் பட்டத்துக்கான அவர் சமர்ப்பித்த கட்டுரையும் மேற்குறிப்பிட்ட அம்சங்களில் வெளிப்பட்டவையாகும்.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தான் ஆற்றிய தொண்டின் வழியில் தணிகாசலம்பிள்ளை உயர்ச்சியைக் கண்டுள்ளார். அதில் அவர் பெற்ற படிப்படியான ஏற்றங்கள் யாவும் பொருத்தமானவையாகும்.

கலாநிதி தணிகாசலம்பிள்ளையின் போக்கும் இனிய சுபாவமும் எவரையும் தன்பால் ஈர்க்கவல்லன. அத்தகைய அவரது ஆளுமை சமூக வாழ்வில் அவருக்குப் பெருமையான இடத்தைக் கொடுத்துள்ளது. அவர் தன்னை அண்டி வருவோரின் நலன்களைக் கருத்திற்கொண்டு மனித உறவுகளை மேலும் நெருக்கமாகவும் சீர்மையாகவும் சிறக்கச் செய்யும் நெறியில் பலன் கண்டுள்ளார். அவரைப் பாராட்டி எடுக்கப்படும் இந்த விழா கலாநிதி தணிகாசலம்பிள்ளைக்குச் சமூகம் செலுத்தும் காணிக்கையாகும்.

இந்த விழா சிறக்கவும் விழாவின் நாயகன் மேலும் பெருமைகள் பெற்றுப் பொலிவுடன் வாழ வாழ்த்துகின்றேன்.

வ.ஆறுமுகம்,
வாழ்நாள் பேராசிரியர், யாழ்.பல்கலைக்கழகம்.



கலாநிதி
ச.நா.தணிகாசலம்பிள்ளை
(கல்வி அமைச்சின் ஆலோசகர்)

### விடாமுயற்சியும் உழைப்பும் உடைய பண்பாளன்

கலாநிதி நாகமுத்து தணிகாசலம்பிள்ளையின் பணிநயப்பு விழாவை அவரது நண்பர்களும் அன்பர்களும் கொண்டாடுவது குறித்து மிகுந்த மனத்திருப்தியடைகின்றேன்.



தணிகாசலம்பிள்ளையை அவர் பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு மாணவனாக இருந்த காலம் முதல் எனக்குத் தெரியும்.

பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களது கூத்து மீட்பு இயக்கத்தின் சிகரமாக அமைந்தமை அவர் நாட்டுக்கூத்து முறை நாடகங்களை அரங்கேற்றியமையாகும். நாட்டுக் கூத்து மீட்பின் பொழுது, அதாவது அதனையோர் அரங்க நிகழ்ச்சியாகத் தயாரிக்கும் பொழுது நாங்கள் முதல் நிலைப்படுத்திய முக்கிய அம்சம் கூத்தில் வரும் ஆட்டங்களை வெறுமனே ஆட்டங்களாக மாத்திரம் அல்லாது அவ்வப் பாத்திரங்களின் நடிப்பசைவின் வெளிப்பாடாகக் கொணர முனைந்தமையாகும்.

பேராசிரியர். சி. மௌனகுரு, பேராசிரியர் அ. சண்முகதாஸ் மாணவ நிலையிலே பங்கு கொண்ட அந்நாடகத்திலே அருச்சுனன் பாத்திரத்தை ஏற்று தணிகாசலம்பிள்ளையும் பங்குகொண்டார். வட்டுக் கோட்டையில் பிறந்த அவர் அங்குள்ள ஆட்டக் கூத்துப் பாரம்பரியத்தை ஏற்கனவே நன்கு தெரிந்திருந்தது காரணமாக இவரது நடிப்பு கர்ணன் போரில் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்தது.

அதன் பின்னர் தணிகாசலம்பிள்ளையுடன் எனக்கிருந்த தொடர்பானது அவர் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியில் ஈடுபட்டிருந்த பொழுது அவருடைய பாரம்பரிய தொழிற் பயிற்சி முறையில் உய்த்துணரத்தக்க கல்வி முறைகள் ஆய்வேட்டுக்கு நானும் ஒரு துணை மேற்பார்வையாளராக இருந்தமையாகும். அவர் முதுதத்துவமாணிக்கு [M.Phil.] வரும் பொழுது முறைசாராக் கல்வியில் நாட்டுக்கூத்து பெறும் இடம் பற்றி ஆராய்ந்தார். சற்று அசாதாரணமான இத்தலைப்பினுள் இவர் நுண்ணிதாகவே ஆராய்ந்தார். அதற்கு மேல் அவர் கலாநிதிப்பட்ட ஆய்வை மேற்கொண்டார். கலாநிதிப்பட்ட ஆய்வினை மேற்கொள்ளும் பொழுது தமது ஆய்வு விடயம் பற்றி என்னோடு நிறைய உரையாடியுள்ளார். இலங்கையின் வட பிரதேச கிராமப் பாடசாலைகளின் மேம்பாடு தொடர்பான பிரச்சினைகள் என்ற தலைப்பில் அவர் தமது ஆய்வினை மேற்கொண்டார்.

ஆசிரியராக, அதிபராக, கல்வியியலாளராக, பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளராக விளங்கிய தணிகாசலம்பிள்ளை கல்வியியற்றுறையிலே கணிக்கப்படத் தக்க ஒருவராக மேற்கிளம்பினார். இன்று அவர் கல்வியமைச்சின் முதுநிலை கல்வி ஆலோசகராகக் கடமையாற்றுகிறார். இவருடைய வளர்ச்சிகண்டு பெரிதும் மகிழ்ச்சியுறுகின்றேன். தணிகாசலம்பிள்ளையிலே நான் கண்ட இருமுக்கிய பண்புகள் விடாமுயற்சியும் உழைப்புமாகும்.

தணிகாசலம்பிள்ளை நிறைந்த விடாமுயற்சி உணர்வு கொண்டவர். அவருடைய நிர்வாகத்திறன் பற்றி பலர் பேச நான் கேட்டிருக்கின்றேன். அவர் வன்னிப் பகுதிக் கல்விப் பணிப்பாளராக இருந்த போது அது நன்கு தெரியவந்தது என்றே கருதுகின்றேன்.

தணிகாசலம்பிள்ளையின் அறிவும் அனுபவமும் கல்வித்துறையிலுள்ளோர்க்கு மிகவும் பயனுள்ளது எனலாம். அவற்றை அவர் நூல் வடிவிலே பதிவுசெய்ய வேண்டும் என்பது என் அவாவாகும்.

மற்றவர்களின் தேவைகளுக்கு உதவும் அவரது பண்பு காரணமாக நான் அவருடன் நெருங்கிய தொடர்புடையவனாக இருந்தேன்.

தணிகாசலம்பிள்ளை சக கல்வியியலாளர்களுக்குப் பயன்படும் வகையில் தமது ஆக்கங்களை நூல்வடிவில் கொண்டுவர வேண்டும் என்பதை அழுத்திக்கூற விரும்புகின்றேன்.

தணிகாசலம்பிள்ளை மேலும் மேலும் சிறக்கவும், வேண்டும் பணிகளை ஆற்றவும் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

பணிநயப்பு விழாக் கொண்டாடும் இவருக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதை ஒரு கடமையாகவே கருதுகின்றேன்.

மிக்க அன்புடன்,
பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி.

### சமரச நோக்குக் கொண்ட தகைமையாளன்

திரு. நா. தணிகாசலம்பிள்ளை அவர்களை நான் நீண்ட காலமாக அறிந்துள்ளேன். அவர் அமெரிக்காவிலுள்ள BOWLING GREEN பல்கலைக்கழகத்தில் 1999 ஆம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தார். அப்பொழுதுதான் அவருடன் நெருங்கிப் பழகுவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. சில நாள்கள் அவருடைய அறையிலும் தங்கியுள்ளேன். பழகுவதற்கு இனிமையானவர். நகைச்சுவை உணர்வு நிரம்பப் பெற்றவர். பரந்த மனப்பான்மையுடையவர். எம்மதமும் சம்மதம் என்று வாழ்ந்து காட்டியவர். தமது மகனுக்குத் தணிகை பாலன் என்று பெயர் வைத்தமைக்கு பாசையூர் அந்தோனியாரின் அருளே காரணம் என்று தெரிவித்தார். சமரச நோக்குக் கொண்டாலும் சைவ சமய அனுஷ்டானங்களைத் தவறாது கடைப்பிடிப்பவர்.



BOWLING GREEN மாணவர்களும் மாணவிகளும் அவரைப் பாசத்துடன் Dr. தணி அல்லது TANI என்று அழைத்ததனைக் கேட்டிருக்கின்றேன். தணி அவர்களுக்கு விழா எடுப்பதும் மலர் வெளியிடுவதும் மிகவும் அவசியமானதாகும்.

காலம் பிந்திவிட்டாலும் இப்போது நடைபெறுவது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. "BETTER LATE THAN NEVER" என்பது ஆங்கிலப் பழமொழி.

தணி அவர்களும் குடும்பத்தினரும் சகல பாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ வேண்டும்.

பேராசிரியர் கலாநிதி எஸ். ஜெபநேசன்
முன்னாள் அத்தியட்சர்
தென்னிந்திய திருச்சபை.

### பாரம்பரியத்தை பாதுகாக்கும் அரும்பணியாளன்



கல்விப் புலத்தில் ஆசிரியராக தன் பணியைத் தொடங்கி இலங்கைக் கல்வி நிர்வாக சேவையில் பல பதவிகளில் பணியாற்றி, பல்வேறு கல்வி செயற்றிட்டங்களுக்கு நிபுணத்துவ ஆலோசகராகவும் பணியாற்றி, தொடர்ந்தும் கல்விசார் ஆய்வுகள், கல்விப் புலத்தவர்களுடனான தொடர்புகளைப் பேணித் தமிழ் பேசும் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு நிறை பணிசெய்துவரும் கலாநிதி ச.நா.தணிகாசலம்பிள்ளை அவர்களின் பணியினை மெச்சி "தணிகை" என்னும் மலர் முகிழ்வதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆசிரியராக அரும் பணிசெய்து அதன் பெயராகக் கல்விப் புலத்தில் படிப்படியாக உயர்வு பெற்று பல்துறை அனுபவங்கள் கொண்ட விற்பன்னர் கலாநிதி அவர்கள் வட்டுக்கோட்டையில் நாட்டுக்கூத்துப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் அரும் பணியாற்றி வருவதுடன் நாட்டுக்கூத்துப் பற்றிய ஆய்வினையும் மேற்கொண்டு பட்டம் பெற்றுள்ளார்.

இப் பெரியவருக்கு விழா எடுத்து பெருமைப்படுத்த வேண்டிய கடமையை விழாக்குழு உணர்ந்து முன்னெடுப்புச் செய்தமைக்காகப் பாராட்டுவதுடன் "தணிகை" மலர் சிறக்க எனது உளங்கனிந்த பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன்.

இ.இளங்கோவன், செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம், திருகோணமலை.

### Felicitation Message

**Dr. N.Thanihasalampillai**



I have pleasure in sending a message in connection with the function organized to commemorate Dr.N.Thanihasalampillai's Service to Education. He served the Ministry of Education for 43 years, as Principal, C.E.O, School Management Advisor, R.D.E, D.E, additional Provincial Director, N.E., Provincial Director of Education, Teacher Education and the Ministry of Education. Presently he is serving as a Senior Consultant. Ministry of Education for the last six years.

His services in my Ministry covers, sorting out problem faced by Tamil Teachers, Principals and Education Officers. In addition, he is serving as consultant for Rural School Development.

At present he is also serving Liaison Officer for Northern Province Educational Administrative Activities and attending to Urgent Relief Program for IDPs at this Ministry.

I wish him well

**A.D. SUSIL PREMAJAYANTHA,**
Minister of Education, Ministry of Education,
"Isurupaya" Battaramulla.

### Message from Mr. M. M.Munsoor,

Retd. Secretary to the Ministry of Education, Cultural affairs and Sports, North-East Province



I am much pleased in giving this message to the Souvenir

I came to know Dr. N.Thanigasalampillai in 1977 when I was serving as Ch.E.O. Jaffna. At that time he was Principal of Poonakari M.V. I made an official visit in my capacity as Ch.E.O. and I was much impressed by his performance of his duty. When he was serving as Principal of J/Kupulan Vigneswara M.V. I visited this School as Chief Guest at the sports meet. I found him efficient and I promoted him to the rank of C.E.O. Kilinochchi.

On his promotion to SLEAS III, I posted him as School Management Advisor to the Jaffna region. He was fully in charge of this establishment of district Management centre. Due to his sense of honesty and dedication and devotion to duty I posted him as an officer in charge of exam work - G.C.E. O/L and A/L.

Finally he rose to the enviable appointed as a consultant. Appointed as teacher at the start, his rise in the ladder of success is praiseworthy and noteworthy indeed. He became Principal, E.O., R.D.E, Provincial Director of Education and finally Consultant.

I wish him well.

**Former SE/PSE member,**
PPsc Chairman N.E. Province.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ மகத்துவம் கொண்ட கறிவேப்பிலை

இயற்கை எமக்குத் தந்த கொடை அளப்பரியது. நாம் நோய்வந்த பின்னர் ஆங்கிலவகை மருந்து மாத்திரைகளை நாடி அவஸ்தைப்படுவதை விட நம் முன்னோர் தந்த அருங்கொடையான மருத்துவ மகத்துவம் மிக்க மூலிகை, உணவுகளை எமது உணவில் சேர்த்து உணவுப் பழக்கங்களால் நோயின்றி உடலைப் பேணலாம். அந்தவகையில் இவ்வாரம் அன்றாடம் எமது உணவில் சேர்க்கும் கறிவேப்பிலையின் பயன்பாடுகளையும் சிறப்பியல்புகளையும் தருகின்றேன்.

நமது நாட்டுப் பெண்கள் சாம்பார், ரசம், கூட்டு வகைகளைச் சமைக்கும்போது வாசனைக்காக மட்டுமே கறிவேப்பிலையைச் சேர்ப்பதாக எண்ணுகின்றனர். நாமும் உணவு உண்ணும்போது கறிவேப்பிலையைத் தூர எறிந்துவிடுகிறோம்.

உணவு உண்ணும்போது அதனைத் தூர எறியாமல் பல்லால் அரைத்து உண்ணவேண்டும். கறிவேப்பிலையில் புரதம், கல்சியம், கந்தகம், குளோரின், ஆக்சாலிக்கமிலம், விட்டமின் 'அஇ' நிக்கோடினிக்கமிலம், யாமின் ஆகிய சத்துக்கள் நிறைய உண்டு.

கறிவேப்பிலை பசியைத் தூண்டும். உடலுக்கு சக்தியைக் கொடுக்கும். பித்தம், வாந்தி, மந்தம், பைத்தியம் ஆகிய நோய்களைக் குணமாக்கக் கூடியதாகும். குடலுக்கு பலத்தைக் கொடுக்கும்.

கறிவேப்பிலையைப் பசுமை மாறாமல் பச்சையாகப் பயன்படுத்தினால் சத்துக்களை முழுமையாக அடைய முடியும். தனியாகவோ கொத்தமல்லியுடன் கலந்தோ துவையல் அல்லது குழம்பு செய்து சாப்பிடலாம்.

கறிவேப்பிலையுடன் மிளகாய் வற்றல், உளுத்தம்பருப்பு, பெருங்காயம், தேவையான உப்பு, புளி சேர்த்து இடித்து தொக்கு செய்து உண்ணலாம்.

கறிவேப்பிலையை நிழலில் உலர்த்தி நல்லெண்ணெய் விட்டு வறுத்து தேவையான அளவு உப்பு, உளுத்தம்பருப்பு, எள்கலந்து, கறிவேப்பிலைப் பொடி செய்து இட்லி, தோசை உணவுக்கு உபயோகிக்கலாம்.

பச்சைக் காய்கறிகளில் பச்சடி செய்யும்போது கறிவேப்பிலையைப் பச்சையாகவே துண்டுகளாக்கி உடன் சேர்த்துச் சாப்பிடலாம்.



(J.P)
யாழ்.வீதி, யாழ்ப்பாணம்.

# சாவ வண்டியா? சேவை வண்டியா?




ஒரு பிரபல வைத்தியசாலையின் அம்புலன்ஸ் சேவைப் பிரிவு மதியம் 12 மணியிருக்கும், தொலைபேசி அழைப்பு அவசர ஓசையாக ஒலித்து அத்னை எடுத்துக் கேட்டபோது ''அண்ணை கிணற்றுக்குள்ள ஒருத்தர் விழுந்துட்டார். உடனே வாங்கோ. இடத்தையும் கூறியபடி சட்டென வைத்துவிட்டார்.

மறுபுறத்தில் மற்றொரு தொலைபேசி அழைப்பு 'அண்ணை ஒரு பிள்ளைக்கு நெஞ்சுக்குத்து ''சீரியஸ் உடன வாங்கோ...''

முதலில் கிணற்றுக்குள் விழுந்தவரை வைத்தியசாலைக்குக் காவி வருவதற்காக அம்புலன்ஸ் வண்டி விரைவாக சம்பவ இடத்திற்குச் சீறிக்கொண்டு சென்றது.

சம்பவ இடத்திற்குச் சென்றபோது கிணற்றடியைச் சுற்றி ஏராளமான சனக்கூட்டம். கிணற்றுக்குள் விழுந்தவரை மேலே தூக்கிக் கிடத்திவிட்டுப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

''அண்ணை பொடியைத் தூக்கி ஏத்துங்கோ'' அங்கு நின்ற ஒருவன் கூறினான்.


''என்ன ஆள் செத்துட்டாரா...?'' ஆச்சரியமாய்க் கேட்டான் அம்புலன் வண்டியின் சாரதி.

''ஓமண்ணை ஆள் செத்து 3 மணித்தியாலத்துக்கு மேலாச்சு...''

''அப்ப ஏன் எங்களுக்கு போன்'' பண்ணினீங்கள்'' கோபத்துடன் கேட்டார் சாரதி.

''ஓட்டோக்காரர், கார்க்காரர் ஒருத்தரும் ''பொடியை கொஸ்பிற்றலுக்குக் கொண்டுபோக வாறாங்கள் இல்லை'' அதுதான் உங்களுக்குப் போன் பண்ணினாங்கள்.

இதைக் கேட்டதும் அம்புலன்ஸ் வண்டியுடன் சென்ற சாரதிக்கும், உதவியாளருக்கும் தூக்கிவாரிப்போட்டது.




''அடப்பாவிகள்! அம்புலன்ஸ் வண்டியை பொடி தூக்கிற வண்டியாகப் பாவிக்க நினைக்கிறாங்கள்'' நெஞ்சுவலியால் வேதனைப்படுகிறவனையும் விட்டுட்டு இவங்களின்ட கதையைக் கேட்டு இஞ்ச வந்தம்'' என்று தம்மைத் தாமே நொந்துகொண்டனர்.

இப்படிப் பல சம்பவங்கள் நடக்கின்றன. அதில் ஒன்றுதான் இது.

சேவைகளை வழங்குபவர்கள் மட்டும் பொறுப்பாயிருந்து பிரயோசனமில்லை. அதனைப் பெற்றுக்கொள்ள நினைக்கின்றவர்களும் பொறுப்புடன் செயபட வேண்டும்.

யாழ்.சுகாதாரத் திணைக்களத்தால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டு 110 என்ற தொலைபேசி இலக்கத்தை அழுத்தி குடாநாட்டில் உள்ள மக்கள் எந்தப் பகுதியிலிருந்தும் அவசர மருத்துவ சேவையினைப் பெற்றுக்கொள்ளும்முகமாக அவசர அம்புலன்ஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்தகைய பொதுநோக்கோடு மக்களின் நன்மை கருதி ஆரம்பிக்கப்பட்டுள்ள இச்சேவையினை நம்மில் பலர் துஷ்பிரயோகம் செய்கிறார்கள்.

இவ்வாறான வசதிகள் செய்து கொடுக்கப்படாவிடத்து தமக்கான சேவைகள் இல்லையே என்று அலட்டிக் கொள்வது.

ஆனால் வழங்கப்பட்ட சேவையினைப் பெறுமதியாகப் பயன்படுத்த நம்மில் பலர் தவறிவிடுகிறார்கள். சேவையின் தேவையுணர்ந்து இனிமேலாவது செயற்படுவார்களா?

- கவிநேசன்.

# பார்த்தசாரதியும் பதினெட்டும்

1. பகவான் பார்த்தசாரதி முன்னின்று நடத்திய பாரதப்போர் நடந்தது பதினெட்டு நாள்கள்.
2. பாரதப்போரில் அழிந்த படைகளின் எண்ணிக்கை பதினெட்டு அக்கிரோணி சேனைகள்.
3. பார்த்தனுக்கு பார்த்தசாரதி சொன்ன பகவத்கீதையின் அத்தியாயங்கள் பதினெட்டு.
4. பொன்னாலையில் பகவானுக்கு பக்தர்களால் எடுக்கப்படும் திருவிழாக்கள் பதினெட்டு நாள்கள்.
5. ஐயப்பன் ஆலயத்தில் அமைந்திருக்கும் படிகள் பதினெட்டு.

**வ.சி.வரதராசா,** *பொன்னாலை.*







# பொன்மொழிகள்

* விவேகமே மனிதனை மிருகங்களிடத்தில் இருந்து பிரித்துக் காட்டுகிறது.
* சிறந்தவனாக விளங்கிட வேண்டுமெனில் சிந்தனை தன்னில் தூய்மைகள் வேண்டும்.
* சம்பாதிக்க வேண்டியவை கல்வி, செல்வம், புண்ணியம் ஆகியன.
* சோம்பலே தீமைக்கும் துன்பத்திற்கும் பிறப்பிடம்.

ச.டிலானி - A/L 2011 Arts,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

# உலகில்......

1. பாலைவனமே இல்லாத கண்டம்- ஐரோப்பா.
2. கடல் பாலைவனம் என்ற கடல் - சாக்கோசாக்கடல்.
3. மிக அதிகமொழிகளைக் கொண்ட நாடு - பாப்புவான்நியூகினி.
4. மிக நீண்ட எல்லையைக் கொண்ட நாடு - சீனா.
5. உலகில் அதிக நாடுகளைக் கடந்து செல்லும் நதி - டான்யூப்.
6. 2ஆம் உலகப் போரில் அதிக உயிர்ச்சேதம் ஏற்பட்ட நாடு - ரஷ்யா.
7. உலகில் முதன்முதல் விண்சென்ற விண்கலம் - கொலம்பியா (அமெரிக்கா).
8. நாடுகளே இல்லாத கண்டம் - அந்தாட்டிக்கா.
9. இருகண்டங்களின் நகரம் - இஸ்தான்புல் (துருக்கி).
10. [illegible] உலகில் முதலிடம் வகிக்கும் நாடு - [illegible]



தொகுப்பு: திருமதி இ.பத்மதேவா, மீசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அணி இந்தியாவில் விளையாடத் தடைகோரி வழக்கு

## மதுரை உயர்நீதிமன்றில் தாக்கல்

மதுரை, நவ. 14

இலங்கை அரசு மனித உரிமைகளை மீறி வருவதால், அந்நாட்டுக் கிரிக்கெட் அணி இந்தியாவில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொள்ளத் தடை விதிக்க வேண்டும் - என்று உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இதுதொடர்பாக மதுரையைச் சேர்ந்த சட்டத்தரணி ஏ.ஜோயல்பவுல் அன்ரனி தாக்கல் செய்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இந்தியாவில் வரும் 16 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் (டிசம்பர்) 27ஆம் திகதிவரை ஒரு நாள் கிரிக்கெட் போட்டி, டெஸ்ட் போட்டி, ருவெண்ரி - 20 போட்டிகள் நடக்க உள்ளன. இந்தப் போட்டிகளில் இலங்கை அணியும் கலந்து கொள்ளவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசு கடந்த 50 ஆண்டுகளாக இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறலில் ஈடுபட்டு வருகிறது. இதை இந்தியா மட்டுமல்ல பல நாடுகளும் கடுமையாகக் கண்டித்துள்ளன.

இருந்த போதிலும் இலங்கை அரசு மனித உரிமை மீறல் நடவடிக்கையை நிறுத்தவில்லை. போராளிகளை அழித்து வருகிறோம் என்ற போர்வையில் தடை செய்யப்பட்ட ஆயுதங்கள், குண்டுகளை பயன்படுத்தி லட்சக் கணக்கான தமிழர்களை இலங்கை அரசு கொன்று குவித்தது.

தமிழர்கள் கொல்லப்படுவதை எதிர்த்து தமிழ்நாட்டில் பல்வேறு தரப்பினர் ஆர்ப்பாட்டம், போராட்டம் நடத்தினர். தமிழர்கள் படும் துன்பத்தைத் தாங்கிக்கொள்ள முடியாத 20 பேர் உயிர் நீத்தனர். மத்திய அரசும் உயர்மட்டக் குழுவை அனுப்பி மனித உரிமை மீறல்களை தடுக்கக்கோரியது.

கடந்த 60 ஆண்டுகளில் 12 லட்சம் தமிழர்கள் இலங்கையில் கொல்லப்பட்டுள்ளனர். தற்போது தமிழர்கள் அந்த நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் தற்போது போர் முடிவுக்கு வந்த நிலையில் மூன்றரை லட்சம் தமிழர்கள் முள்வேலி முகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்தியா மற்றும் பல்வேறு நாடுகளின் கோரிக்கைகளை ஏற்க இலங்கை அரசு மறுத்து விட்டதால் இலங்கைக் கிரிக்கெட் அணியை இந்தியாவில் விளையாட அனுமதிப்பது மிகப்பெரிய அவமானமாகும்.

அதுபோன்று விளையாட அனுமதிப்பது, மனித உரிமை மீது நம்பிக்கை வைத்திருக்கும் ஒவ்வொரு மனிதரின் மனதையும் புண்படுத்தும் செயலாகும். எனவே இலங்கை கிரிக்கெட் அணி இந்தியாவில் விளையாட தடை விதிக்க வேண்டும் - என்றுள்ளது.

இந்த மனு இன்று விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த செப்ரெம்பர் மாதம் இலங்கையில் நடந்த கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி கலந்து கொள்ளக்கூடாது என்று உத்தரவிடக் கோரி ஏற்கனவே சட்டத்தரணி ஜோயல் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

வெளிவிவகாரக் கொள்கையில் நீதிமன்று தலையிட முடியாது என்று கூறி ஜோயல் தாக்கல் செய்த துணை மனுவை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தமை குறிப்பிடத்தக்கது.

# உலகத் தமிழ் மாநாட்டுடன் தமிழ் இணைய மாநாடும்

## தமிழக அரசு அறிவிப்பு



இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழாக ஒளிரும் தமிழ்மொழியை இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிகளுக் கும், தேவைகளுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் வளர்த்தெடுக்க வேண்டியதன் இன்றி யமையாமையைக் கருத்திற்கொண்டு, கோவையில் நடைபெறவுள்ள உலகத்தமிழ் செம்மொழி மாநாட்டின் ஒரு பகுதியாக தமிழ் இணைய மாநாட்டையும் நடத்த முதல்வர் கருணாநிதி அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை, நவ. 14

கோவையில் நடைபெறவுள்ள உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டின் ஒரு பகுதியாக தமிழ் இணைய மாநாடும் நடத்தப்படும் - என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

முதல்வர் கருணாநிதி, 2010 ஜுன் மாதம் 23 ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை கோவையில் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டை நடத்த அறிவுறுத்தியவாறு பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன.

கோவையில் மாநாடு நடைபெறவுள்ள 'கொடீசியா' வளாகத்தையும் அண்மையில் முதல்வர் கருணாநிதி நேரில் சென்று ஆய்வு செய்து தேர்ந்தெடுத்துள்ளார்.

இதற்கிணங்க, கோவையில் நடைபெறவுள்ள உலகத்தமிழ் செம்மொழி மாநாட்டின் ஒரு பகுதியாக தமிழ் இணைய மாநாட்டை உலகத் தமிழ் தகவல் தொழில் நுட்ப மன்றத்துடன் (உத்தமம்) இணைந்து நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதுதொடர்பாக நடைபெறும் கருத்தரங்கில் பல்வேறு நாடுகளிலும் உள்ள தமிழ் தகவல் தொழில்நுட்பத்துறை வல்லுநர்களும் கணினித் தமிழ் அறிஞர்களும் பங்கு பெறுவார்கள் - என்றுள்ளது.

# கச்சதீவு - தனுஷ்கோடிப் பகுதியிடையே மீன்பிடிக்க வந்தால் சுட்டுக்கொல்வோம்

## தமிழக மீனவரை மிரட்டியதாம் இலங்கைக் கடற்படை

இராமேஸ்வரம், நவ. 14

கச்சதீவு, தனுஷ்கோடி இடையே மீன் பிடிக்க வந்தால் சுட்டுக்கொன்று விடுவோம் என இலங்கைக் கடற்படையினர் மிரட்டினர் - என்று தமிழக மீனவர்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் மீனவர்கள் சார்பில் இராமேஸ்வரம் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.அந்த முறைப்பாட்டில் -

நாங்கள் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தோம். கச்சத்தீவுக்கும், தனுஷ்கோடிக்கும் இடையிலான பகுதியில் இருந்தபோது அங்கு ஆறு படகுகளில் இலங்கைக் கடற்படையினர் வந்தனர். இனிமேல் இங்கு மீன் பிடிக்கக் கூடாது என்று கூறி துப்பாக்கிகளைக் காட்டி மிரட்டினர். மீறி வந்தால் சுட்டுக் கொன்று விடுவோம் எனவும் எச்சரித்தனர்.

இதையடுத்து நாங்கள் அவசரமாக கரைக்குத் திரும்பினோம். அப்போது இரு படகுகள் மோதிக் கொண்டதில் அவை சேதமடைந்தன - என்று தெரிவித்தனர்.

இந்த நிலையில், மீனவர்களுக்கு எதிராக தொடர்ந்து இலங்கைக் கடற்படையினர் மேற்கொண்டு வரும் அக்கிரம நடவடிக்கைகளுக்கு முடிவு கட்டக் கோரி நவம்பர் 17 ஆம் திகதி இராமேஸ்வரத்திலிருந்து சென்னை நோக்கி பேரணி நடத்தப் போகின்றனர் என தமிழ்நாடு மீனவர் சங்கம் அறிவித்துள்ளது.

சென்னையில் முதல்வர் கருணாநிதியைச் சந்தித்து மீனவர்களுக்கு எதிரான இந்த அடக்குமுறைகளை தடுத்து நிறுத்த உடனடியாக இலங்கை அரசுடன் பேசுமாறு வலியுறுத்தப் போகிறோம் எனவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

# நாட்டுக்கு நான் செய்த பங்களிப்பை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்திலிருந்து தான் பதவி விலகுவதற்கான 16 காரணங்கள் அடங்கிய கடிதம் ஒன்றை முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தமது பதவி விலகல் கடிதத்துடன் இணைத்து வழங்கியுள்ளார்.

அவர் குறிப்பிட்டுள்ள 16 காரணங்களும் வருமாறு -

1. விடுதலைப்புலிகளுடனான போர் முடிவுற்ற பின்னர் அரசுக்கு எதிரான ஆட்சிக் கவிழ்ப்பில் சிறிலங்கா இராணுவம் ஈடுபடவுள்ளது என உங்களிடம் தெரிவிக்கப்பட்ட ஆதாரமற்ற கதைகளை நம்பி, என்னை இராணுவத் தளபதி பதவியிலிருந்து நீக்கினீர்கள். சிறிலங்கா இராணுவத்தின் 60 ஆம் ஆண்டு நிறைவு தினத்துக்கு முன்னர் நான் இராணுவத் தளபதி பதவியிலிருந்து நீக்கப்பட்டமை எனக்கு மிகுந்த மன உளைச்சலைத் தந்துள்ளது.

2. யாழ்.மாவட்ட தளபதியாக மூன்று வருடங்கள் பணியாற்றிய - திறமை வாய்ந்த - மேஜர் ஜெனரல் சந்திரசிறியை அடுத்த இராணுவத் தளபதியாக நியமிக்குமாறு நான் பிரேரித்தும்கூட, அந்தப் பிரேரணை நிராகரிக்கப்பட்டு, படைக் கட்டமைப்பில் எனது உத்தரவுக்கு மரியாதை அற்ற சூழ்நிலையைத் தாங்கள் ஏற்படுத்தினீர்கள்.

3. படைகளின் பிரதானி என்ற பாரிய பொறுப்பு வாய்ந்த பதவியை எனக்கு வழங்கியமை போன்று மக்கள் ஏமாற்றப்பட்டார்களே தவிர, அந்தப் பதவியில் எந்த அதிகாரமும் எனக்குத் தரப்படவில்லை. போர் முடிவுற்ற இரண்டு வாரங்களிலேயே இந்தப் பதவியை என்னிடம் திணிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலர் என்னை இராணுவத் தளபதி பதவியிலிருந்து விலகுமாறு அழுத்தம் தந்தார்.

### அதிகாரம் உள்ள பதவியைத்தர என் மீது நம்பிக்கை இல்லை

4. மேற்படி பதவி, எனக்கு முன்னர் இருந்த அதிகாரங்களை விட அதிகமான அதிகாரங்களை வழங்கும் என்று கூறி புதிய பதவிக்கான நியமனக்கடிதம் தரப்பட்டு அதில் எனது அதிகாரங்களும் தெரிவிக்கப்பட்டிருந்தன. ஆனால், பதவி எனக்குத் தரப்பட்ட பின்னர், அது தனியே படைகளின் பொறுப்புக்களை ஒழுங்கு செய்யும் எந்த அதிகாரமும் இல்லாத பதவி என்று தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு அதிகாரங்களை உடைய பதவியைத் தருவதற்கு உங்களுக்கு என் மீது நம்பிக்கை இருக்கவில்லை. அது எனக்குப் பாரிய மனத்தாக்கத்தை ஏற்படுத்தியது.

5. தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டமொன்றில் எல்லா படைத்தளபதிகளுக்கும் முன்னால், பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் பேசுகையில் - '' எல்லா அதிகாரங்களையும் படைகளின் பிரதானி என்ற பதவிக்கு வழங்குவது ஆபத்தானது'' - என்று கூறியமை, என்னை எல்லாப் படைத்தளபதிகளுக்கும் முன்னால் வைத்து அவமதித்தமை போல அமைந்தது.

6. விடுதலைப் புலிகளுடனான போர் முடிவடைந்த பின்னர் நடைபெற்ற முதலாவது தேசியப் பாதுகாப்புச் சபை கூட்டத்தில் நீங்கள் பேசுகையில் - இராணுவத்திற்கு இனி ஆள்சேர்ப்பு அவசியமில்லை என்று குறிப்பிட்டு - '' நாடு சக்தி வாய்ந்த இராணுவத்தின் பிடியில் உள்ளது என்று மக்கள் எண்ணுகிறார்கள்'' என்று ஒரு வார்த்தை கூறினீர்கள். இந்த விடயத்தை நான் உங்களிடமிருந்து எதிர்பார்க்கவே இல்லை. பல்லாயிரக்கணக்கான படையினரின் உயிரை காணிக்கையாக்கி மிகப்பெரிய இராணுவ வெற்றி ஒன்றை ஈட்டித் தந்த படையினரின் மீது நம்பிக்கையில்லாமல், நீங்கள் பேசிய இந்த விடயத்தை மிகவும் அருவருக்கத்தக்கதாகவே நான் உணர்ந்தேன்.

7. தற்போது இராணுவத் தளபதியாகப் பதவியேற்றுள்ளவர், எனது மனைவி பணி புரியும் இராணுவ அமைப்பில் வேலை செய்யும் கனிஷ்ட இராணுவ உத்தியோகத்தர்கள் முதல் போரின்போது முக்கிய பங்காற்றிய முக்கிய தளபதிகள்வரை அனைவரையும் தனது இஷ்டத்துக்கேற்ப இடமாற்றம் செய்துவருகிறார். அதனை தடுத்து நிறுத்தமுடியாத அதிகாரமற்றவராக என்னைக் காண்பிப்பதாகவும் இந்த நடவடிக்கை அமைந்துள்ளது.

### ஆட்சி கவிழ்ப்புக்கு திட்டம் எனக் கூறி இந்தியாவிடம் உதவி கோரியதேன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. [illegible] மிருக்க, நாட்டை பயங்கரவாதத்திலிருந்து மீட்டெடுத்த இராணுவத்தினரே ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு திட்டமிடுகிறார்கள் என்ற ஒரு வதந்தியை நம்பி, கடந்த ஒக்ரோபர் 15 ஆம் திகதி இந்திய அரசிடம் உதவிகோரிச் சென்று, அந்நாட்டு அரச படைகளும் இங்கு வந்து ஆட்சிக்கவிழ்ப்பிலிருந்து அரசைப் பாதுகாக்கத் தயாராகியிருந்தன எனத் தெரிவிக்கப்பட்டது. இது எமது இராணுவத்தினரின் நன்மதிப்பையும் அவர்களது தொழில் பக்தியையும் அவளமதிக்கும் செயலாகும்.

9. என்னால் உருவாக்கி வளர்த்தெடுக்கப்பட்ட படையணி என்ற காரணத்திற்காக இராணுவத்தின் சிங்க ரெஜிமெண்ட் அணி பாதுகாப்பு அமைச்சுக்கு பாதுகாப்பு வழங்கும் பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு வருடங்களாக இந்தப் பணியிலிருந்த சிங்க ரெஜிமெண்ட் அணியினரின் பணிகள் - நான் அண்மையில் அமெரிக்கா சென்றிருந்தவேளை - எனக்குத் தெரியாமல் மாற்றப்பட்டிருக்கின்றன. இது என் மீதும் படையினர் மீதும் உள்ள நம்பிக்கையீனத்தையே காண்பிக்கிறது.

10. சிங்க ரெஜிமெண்ட் படையணி நீக்கப்பட்டு பாதுகாப்பு அமைச்சின் பாதுகாப்புக்கு கஜபாகு படையணி வரவழைக்கப்பட்டுள்ளமை, இராணுவத்தின் படையணிகளுக்கு மத்தியில் விசுவாச ஏற்றத்தாழ்வு உண்டு என்று காண்பிப்பது போன்ற நடவடிக்கையாகும்.

11. நாட்டின் பெருவெற்றிக்கு நான் இவ்வளவு பெரிய பங்களிப்பை நல்கியிருந்தும் கூட, நான் ஒரு துரோகி என்று செய்தியாகவும் வதந்தியாகவும் அரசின் பக்கமுள்ள அரசியல்வாதிகளும் மற்றும் பலரும் கதைகளைப் பரப்பிவருகின்றனர்.

12. நான் அண்மையில் வெளிநாடு சென்றிருந்த காலப்பகுதியில் - ஏகபோக அதிகாரங்கள் உள்ள பதவியாக அரசால் வர்ணிக்கப்பட்ட - எனது படைகளின் பிரதானி என்ற இடத்துக்கு எவருமே பதில் அதிகாரியாக நியமிக்கப்படவில்லை. இதிலிருந்து இந்தப் பதவிக்கு அரசு எவ்வளவு முக்கியத்துவம் வழங்கியிருக்கிறது என்பது புலனாகிறது.

### இடம்பெயர்ந்தோர் குறித்து முறையான திட்டம் இல்லை

13. மிகவும் கட்டுக்கோப்புடனும் ஒழுக்கத்துடனும் நான் கட்டிவளர்த்த சிறிலங்கா இராணுவம் இன்று சின்னாபின்னப்பட்டுப்போயிருக்கிறது. படைகளிலிருந்து இராணுவத்தினர் தப்பியோட்டம், படைக் கட்டமைப்புகளிடையே சீரற்ற நிலை, தளபதிகளிடையே முரண்பாடு என எத்தனையோ பிரச்சினைகளால் சிறிலங்கா இராணுவம் இன்று ஈடாடுகிறது. கடந்த இரண்டு மாதங்களில் இராணுவத்துக்குப் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களின் எண்ணிக்கை அதிகம்.

14. நாட்டு மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காக படையினரின் மிகப்பெரிய தியாகத்தால் பெறப்பட்ட வெற்றி இன்று, அரசின் ஆற்றலற்ற போக்கினால் நாட்டுமக்களுக்கு எதையும் வழங்காத நிலையை ஏற்படுத்தியுள்ளது. போரினால் இடம்பெயர்ந்து முகாம்களில் துன்பப்படும் மக்களது • விடயத்தில் அரசிடம் முறையான திட்டமில்லை. அவர்களை அவர்களது உறவினர்களது வீடுகளிலாவது தங்க அனுமதிக்கும் நடவடிக்கை எதையும் அரசு மேற்கொள்ளவில்லை.

15. எனது தலைமையின் கீழ் எமது படைகள் இராணுவ வெற்றியை பெற்றுத் தந்துள்ளன. இதன் மூலம் தமிழ்மக்களது மனங்களை வெல்லும்வகையில் நாட்டில் அமைதியை ஏற்படுத்தாவிட்டால், இந்த வெற்றி உதாசீனப்படுத்தப்பட்டு, எதிர் காலத்தில் மீண்டும் கிளர்ச்சிக்கு முகம் கொடுக்க நாடு தள்ளப்படும்.

16. போரின் முடிவில் இந்த நாட்டில் அமைதி ஏற்படும் என்ற எதிர்பார்ப்பில் நாட்டுமக்கள் உள்ளனர். ஆனால், லஞ்சமும் ஊழலும் அதிகரித்து ஊடகங்களுக்கு எதிராக அடக்குமுறை மிதமிஞ்சி ஜனநாயக உரிமைகள் நசுக்கப்படுகின்றன. இதனால், தாய்நாட்டுக்காக எமது படையினர் மேற்கொண்ட அர்ப்பணிப்புகள் நிச்சயம் துஷ்பிரயோகமாகப் போகின்றன.

- இவ்வாறு அவர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (அ-சி)

# கரவெட்டிப் பிரதேச வைத்தியசாலை



இன்று (14.11.2009) சனிக்கிழமை கௌரவ அமைச்சர்
உயர்திரு. டக்ளஸ் தேவானந்தா, கௌரவ ஆளுநர்
ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரால் திறந்துவைக்கப்படும்.
கரவெட்டிப் பிரதேச வைத்தியசாலை மென்மேலும்
தனது சேவையை பிரதேச மக்களுக்கு வழங்க எமது நல்வாழ்த்துக்கள்.

நெல்லியடி வாணிபர் கழகம், கரவெட்டி.

(சி-562409)


# தமிழ்க் கைதிகள் மீதான தாக்குதல்; விசாரணைக்கு ஐ.தே.க. வலியுறுத்து

கொழும்பு, நவ. 14

வெலிக்கடைச் சிறைச்சாலையில் நேற்றுக்காலை தமிழ்க் கைதிகள் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி, இது தொடர்பாகப் பக்கசார்பற்ற முறையில் விசாரணை நடத்துமாறு நீதிமன்றம் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட விடமும் சிறைச்சாலை ஆணையாளரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஐ.தே.கட்சியின் எம்.பியான டாக்டர் ஜயலத் ஜயவர்தன கூறியவை வருமாறு:-

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தமிழ்க் கைதிகள் தாக்கப்பட்ட செய்தி கேட்டு நான் அங்கு விரைந்து சென்றேன். தாக்குதலுக்குள்ளான தமிழ்க் கைதிகள் ஐந்து பேரிடம் நான் உரையாடித் தாக்குதல் சம்பவம் தொடர்பாக விவரங்களைக் கேட்டறிந்தேன்.

உங்களது தலைவர் எங்கே? இணைப்பாளர் எங்கே? - என்று கேட்டு சிறைச்சாலை அதிகாரிகள் சிலரும் கைதிகள் சிலரும் தம்மீது தாக்குதல் நடத்தினர் என்று தமிழ்க் கைதிகள் என்னிடம் கூறினர்.

அந்த 5 கைதிகளின் உடம்பில் பல இடங்களில் காயங்கள் இருந்தமையை என்னால் அவதானிக்க முடிந்தது. இனப் பாகுபாட்டுடன் இவ்வாறு தாக்குதல் நடத்துவதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. அதை நாம் கண்டிக்கிறோம்.

இது தொடர்பாக பக்கசார்பற்ற முறையில் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நான் சிறைச்சாலை ஆணையாளரிடமும் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட விடமும் வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

## கைத்தொழில் பயிற்சிச் சபையின் மேசன் பயிற்சி திங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.14

கொல்சிம் லங்கா லிமிட்டெட்டும் தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபையும் நடத்தவுள்ள பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்புவோர் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இல.7, கோயில் வீதியில் அமைந்துள்ள தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை அலுவலகத்துக்கு சமுகமளிக்குமாறு அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் கேட்டுள்ளார்.

இடம்பெயர்ந்தோருக்கு மேற்படி பயிற்சி நெறிக்குத் முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (201)

# ஆசிரிய உதவியாளர்களாக....

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்வி நீருபா தங்கவேலு-மணல்வளவு, செல்வி ஜயந்தி தர்மகுலசிங்கம்- பாலாவித்தெரு, செல்வி கீதாஞ்சலி மகாதேவன்- சன்னதி கோயிலடி, தவனேஸ்வரன் சுபாஸ்-பொன்மலர் வீதி, செல்வி அனுஜா முருகேசபிள்ளை-ஆயிலடி, செல்வி ஸ்ரீ கௌரி சிவலிங்கம்- உந்தோடை, செல்வி துரைராஜா காயத்திரி-வல்லாவத்தை, செல்வி பிறேமினி அழகையா-அரசடி ஒழுங்கை, திருமதி இராஜேஸ்வரி பழனித்துரை-வீரகத்திப்பிள்ளையார் கோயிலடி, செல்வி விஜியேந்தி சித்திரநாதன்-மலையாளம் தோட்டம், திருமதி சுதன் ஞானரூபா-கற்கோவளம், திருமதி ரகுபதி கவிப்பிரியா- இமையாணன் கிழக்கு, திருமதி பரமேஸ்வரன் சுதேஸ்- 15ஆம் கட்டை தெற்கு, செல்வி பொன்னையா சகுந்தலா-கரவெட்டி கிழக்கு, செல்வி நவநீதராணி சிவகுமார்-புற்றளை, கந்தசாமி குகதாஸ்-நீண்டியம்பற்றை, நல்லதம்பி நிரஞ்சன்-பண்டாரத்தறை, செல்வி ஸ்ரீதரன் நித்தியா-குமாரவளவு, செல்வி செல்வ சபாபதிப்பிள்ளை-நெடியகாடு, செல்வி இரத்தினம் குமுதா-முருகையன் கோயிடி, திருமதி ஸ்ரீதரன் உசா- புலோலி தெற்கு, செல்வி அனுசியா மகேந்திரன்-குரம்பகட்டி, செல்வி ஜெயந்தி தங்கராசா- வெள்ளுருவை, கணேசன் வாசுதேவன்- கௌரி கோட்டம், சிவநாதன் சிவதாஸ்-அல்வாய் கிழக்கு, தர்மலிங்கம் ரதீஸ்வரன்- இமையாணன் கிழக்கு, யேசுதாசன் தவக்குமார்-பலாலி தெற்கு, செல்வி நர்மலா நடராசா-நாகநாதன் வீதி, குகதாஸ் ஜெயந்தன்-குடத்தனை கிழக்கு, கந்தசாமி ஸ்ரீதரன்-ரஜனி மஹால், பாலசிங்கம் கிருஷ்ணரூபன்-குரும்பகட்டி, சண்முகநாதன் ராஜ்குமார்-கலட்டி, திருமதி நிர்மலராணி தேவராஜா- லிங்காவாசா, பரஞ்சோதி சசிவண்ணன்- செல்வஜோதி, திருமதி சத்தியேந்திரா பாரதி-ஊரணி, செல்வி சிவரூபி சிவராசா-சாவகச்சேரி, திருமதி சிவமலர் மகேஸ்வரன்- சரசாலை வடக்கு, சந்திரன் குமரதாஸ்- நுணாவில் மேற்கு, திருமதி ஜெயந்தி நாதன் லோகேஸ்வரி- கைதடி கிழக்கு, செல்வி சரஸ்வதி சுதர்சன்-கைதடி வடக்கு, சடாட்சரம் ஏகாட்சரம், கெற்பேலி மேற்கு, திருமதி கணேசலிங்கம் பவானந்தி- அல்லாரை தெற்கு, தம்பிஐயா மஞ்சூரன்-மீசாலை கிழக்கு, தங்கராசா ஜெயகரன்-மாசேரி, திருமதி சிவயோகம் ராசவிநாயகம் - வெள்ளாம் போக்கட்டி, செல்வி துளசிமலர் வயித்தி- கச்சாய் வீதி, பாலசுந்தரக் குருக்கள்-மீசாலை கிழக்கு, செல்வி மரிய சுவர்ணா [illegible], திருமதி புஸ்பரஞ்சினி [illegible]காடு, திருமதி தனுஜா தேவராசா- பலகாடு, விஸ்வலிங்கம் பாலகுமார்-முதலாம் வட்டாரம், செல்வி சோமசுந்தரம் ரேணுகா-கருங்காலி, திருமதி ஜெயராஜ் டல்சி-10ஆம் வட்டாரம், செல்வி சிவநாதன் யாழினி- பிறவுண் வீதி, திருமதி உசாந்தினி யோககுமார்- 2ஆம்வட்டாரம், திருமதி துதிகரன் வசந்தி-5ஆம்வட்டாரம், திருமதி துளசிமலர் இரவிசங்கர்-8ஆம் வட்டாரம், நடராசா நர்த்தனன்- 6ஆம்வட்டாரம், திருமதி சுபாகரன் சுபாஜினி-5 ஆம் வட்டாரம்,செல்வி கந்தையா துர்க்காபரா-5ஆம்வட்டாரம், செல்வி பொனாவெந்தூஸ் டேனிற்றா-பிள்ளையார் கோயிலடி, திருமதி சுதாகர் ரேணுகா- 2ஆம்வட்டாரம், செல்வி சந்தியாம்பிள்ளை மேரி-5ஆம்வட்டாரம், செல்வி அன்ரனி ஆன் டயானா-3ஆம் வட்டாரம், செல்வி அருள் நாயகம்-மத்திய கிழக்கு வீதி, திருமதி அசோக்குமார் ஜெசித்திரா -2ஆம்வட்டாரம், திருமதி புஸ்பராணி சயந்தன்-5ஆம்வட்டாரம், செல்வி மரியபுஸ்பமலர் ஞானப்பிரகாசம்-நெடுந்தீவு மத்தி, திருமதி மேரிமக்டலின்-6ஆம் வட்டாரம், திருமதி அருள்ராஜனி சந்திரகுமார்-11ஆம் வட்டாரம், திருமதி ஜெயமலர் தோமஸ் அல்வின்-6ஆம் வட்டாரம், திருமதி நளாயினி [illegible] வட்டாரம், அகுஸ்தின் [illegible]-சரவணை மேற்கு, இராமநாதன் சுதாகரன்- வேலணை வடக்கு, செல்வி பெரியதம்பி சிவதர்சினி- நாராந்தனை வடமேற்கு, செல்வி தர்மிளா சந்திரசேகரம்- 7ஆம் வட்டாரம், செல்வி டிசாந்தி அன்ரனி-கரம்பன் கிழக்கு, செல்வி ஜோச் றஜீதா-உப்புக்குள வீதி, செல்வி டலிதா தருமலிங்கம்-5ஆம் வட்டாரம், செல்வி சங்கீதா நாகராசா-நாரந்தனை வடக்கு, செல்வி பத்மினி கோபாலசிங்கம்- நாரந்தனை வடக்கு, செல்வி நாகேந்திரன் மனோகரராணி-4ஆம்வட்டாரம், செல்வி பிறேமலா அருள்நேசதாசன்- நாராந்தனை தெற்கு, செல்வி வில்சன் சுதர்சினி- 12 ஆம் வட்டாரம், ஆசீர்தேவதாஸ் டே விற்ரென்- 6ஆம் வட்டாரம்,டிகால் பாக்[illegible] நாதன்-6ஆம் வட்டாரம், திருமதி தோமஸ் அன்ரனற் றொஷானி-10ஆம் வட்டாரம், பிலிப்தும் மார்சலின்ஸண்- குருநகர், செல்வி யாழினி செல்வேந்திரன்- வேலணை வடக்கு, செல்வி சிவபூஷணி சிவபாதசுந்தரம்- வேலணை மேற்கு, செல்வி உமாதேவி ஞானசம்பந்தன்-புளியங்குளம் தெற்கு, செல்வி உமாதேவி ஆறுமுகம்-கொட்டைப்புலம், கணபதிப்பிள்ளை - சடையாளி, திருமதி மகாலிங்கம் பிறேமலதா-கரம்பன் மேற்கு, திருமதி ஜெயராணி சிவநேச[illegible] -சரவணை கிழக்கு, திருமதி காந்த[illegible]ஜினி றமணன்- நயினாதீவு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாணவர்களுக்கு அரிய வாய்ப்பு

உங்கள் உயர்கல்வியை U.K., U.S.A, CANADA, NEWZELAND, AUSTRALIA, SINGAPORE மற்றும் MALASIYA போன்ற நாடுகளில் தொடர்வதற்குரிய வசதிகளை மிகக் குறைந்த செலவில் செய்து தருகிறோம்.

★ முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.
★ கல்லூரிக் கட்டணத்துக்கான இலகு கடன் வசதி
★ வங்கிவைப்புக்குரிய இலகுவான வசதிகள்
★ பகுதி நேரத் தொழில் வாய்ப்புடன் கூடிய கல்வி
★ எமது சேவைகள் யாவும் இலவசம் (90938)

தொடர்புகளுக்கு: 0772299900


## OUR HEARTIEST CONGRATULATIONS



We heart ly Congratulate Our best Friend

**Mr.N.B.KAGEETHARAN**

For Completing Higher National Diploma in Accounting **(HNDA).**
We Proudly Praise Our Friend for his excellant Performance in his education field.
Your friends have pleasure in your achievements.

P.Pageerathan
S.Jaisan
G.Lavan

(90934)

## யாழ்.மாவட்ட சகல சமாதான நீதிவான்களுக்கான ஓர் அறிவித்தல்

தங்களை சமாதான நீதிவான்களுக்கான மனித உரிமைகள் அமைப்பின் அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்வதற்கான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. சமாதான நீதிவான்கள் அனைவரையும் இக் கலந்துரையாடலில் பங்கேற்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.

இடம்:- புதிய உயர் கல்லூரி வளாக மண்டபம்
ஆரியகுளம் முன்பாக 95, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
காலம்:- நாளை 15.11.2009 (ஞாயிறு) பிற்பகல் 2 மணி.

மா.சண்முகநாதன் J.P (அகில இலங்கை)
இணைப்பாளர் யாழ்.மாவட்ட சமாதான நீதிவான்களுக்கான மனித உரிமைகள் அமைப்பு
*(COORDINATOR OF JAFFNA DISTRICT FOR THE HUMAN RIGHTS ORGANI ZATION OF JUSTCES OF PEACE)*
*T.P No:- 2228148, 2223208*

(90906)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 12.08.1925 மறைவு: 11.11.2008

**திருமதி திரேஸ் லூயிசா சூசைப்பிள்ளை (புஸ்பம்)**



ஓடி உருண்டது மம்மி, அக்கா
உமைப்பிரிந்து ஓராண்டு
வாடி வதங்குகின்றோம்
உம் பிரிவை எண்ணி நிதம்
ஆறுதல் சொல்லும் ஆலமரமாய்
இருந்துவிட்டு
அவசரமாய் சாய்ந்தது ஏனோ?
உங்கள் உடல்தான் மறைந்தது
உருவங்கள் மறையவே இல்லை
எமது உள்ளத்தில் உறைந்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்திபெற
கருணைக் கடவுளை யாம்
தினமும் வேண்டுகின்றோம்.

(சி-562233)

9, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

துயருறும்: மகனும் குடும்பமும், சகோதரர்களும் பிள்ளைகளும்.

## மரண அறிவித்தல்கள்

### யோவான் அமிர்தநாதர் (காமா)

(ஓய்வுபெற்ற இ.போ.ச. சாரதி, குருநகர், யாழ்ப்பாணம்)



மவுண்ட் கார்மல் வீதி, குருநகரைப் பிறப்பிடமாகவும் தற்போது இந்தியாவிலுள்ள திருவண்ணாமலையை வசிப்பிடமாகவும் கொண்ட யோவான் அமிர்தநாதர் (காமா) கடந்த 12.11.2009 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர்களான யோவான்-ஞானம்மா தம்பதியரின் அன்பு மகனும் முத்தையா-அக்கினேஸ் தம்பதியரின் அன்பு மருமகனும் திரேசம்மா (மலர்) வின் அன்புக் கணவரும் ஜெஜீனா (லண்டன்), காலஞ்சென்ற மரியகோசி (இமெல்டா), கிறிஸ்ரின்கீலர் (யாழ்ப்பாணம்), நீற்ராபரீடா (லண்டன்), அமிர்தசீலன் (பிரான்ஸ்), அமிர்தானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சாள்ஸ் (லண்டன்), உதயகுமார் (பிரான்ஸ்), சைலா (பிரான்ஸ்), பிரபா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் சாளினா, கிறிஸ்ரியன் (லண்டன்), நிதர்ஷன், அலெக்ஷன், அபிஷா (யாழ்ப்பாணம்), பெஞ்சமீன், அஸ்விதா (பிரான்ஸ்), ஜானா, அமீர்ஜன், யோசுவா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் திருவண்ணாமலையில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று (13.11.2009) வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0044 2086846975
0033 148961751
0049 21661463858 (90935)

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### சலோது அருளானந்தம்

(ஆயுள்வேத வைத்தியர்)

பலாலியைப் பிறப்பிடமாகவும் கடற்கரைவீதி, பருத்தித்துறையை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட சலோது அருளானந்தம். நேற்று முன்தினம் (12.11.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மரிய கொறற்றியின் கணவரும் காலஞ்சென்ற பேதுறு சலோது- ஆனாசி தம்பதியினரின் அன்புப் புதல்வருமாவார். அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (14.11.2009) சனிக்கிழமை பி.ப. 3 மணியளவில் பருத்தித்துறை புனித தோமையர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் பருத்தித்துறை சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

(விக்ரோமில்)
கடற்கரைவீதி,
பருத்தித்துறை. (சி/562296)

தகவல்:
அ.மரியகொறற்றி
(மனைவி).

## தொழில் நுட்ப பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்.நவ.14

இன்று நடைபெறவிருந்த இலங்கை தொழில் நுட்ப வியல் சேவையின் சிவில்/பட வரைஞர் பதவிகளின் பயிலுநர் தரங்களுக்கு ஆள் சேர்ப்புச் செய்யப்பட்டவர்களை இலங்கை தொழில் நுட்ப வியல் சேவையின் சிவில்/பட வரைஞர் வகுப்பு 11 பிரிவு ''ஆ'' பதவிகளுக்கான நியமனம் வழங்குவதற்கான தகைமைகாண் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சை எதிர்வரும்21 ஆம் திகதி அதே பரீட்சை நிலையத்தில் நடைபெறும் எனவும் யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (1)

## உலர் உணவு விநியோகம்

யாழ்ப்பாணம், வவுனியா நலன்புரிநிலையங்களில் தங்கியிருந்து மீளக் குடியமர்ந்தவர்களுக்கு 'போரூட்' நிறுவனம் உலர் உணவுப் பொருள்களை இன்றும் நளையும் நல்லூர் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்க உள்ளது. (1-111)


### வீடு அவசர விற்பனை

நெல்லியடி பஸ் நிலையத்தில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் (சயன்ஸ் சென்ரர் ரியூசன் முன்னால்) உள்ள வீடு விற்பனைக் குண்டு.
தொடர்பு: 0779008431
(சி/562281)


## குருவைப் போற்றி வாழ்ந்த ஆசிரியமணி பஞ்சாட்சரம்

**ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம் அவர்களின் பிறந்ததினம் நேற்றாகும். அவரது நினைவாக இக் கட்டுரை வெளியிடப்படுகிறது.**



ஆசிரியமணி அருணாசலம் - பஞ்சாட்சரம் அவர்களை தெரியாதவர்கள், அறியாதவர்கள் இல்லை. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல பல்வேறு நாடுகளிலும் அவரது பெயர் இன்றுவரை நிலைத்து நிற்கின்றது. அவரிடம் கற்ற மாணவர்கள் இன்று நல்ல நிலையில் இருந்து வருகின்றனர். கனடா போன்ற இடங்களில்கூட இவரது நினைவு அஞ்சலிக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

சிலருக்கு வேலையில் இருக்கும்வரைதான் மதிப்பு இருக்கும். வேலையிலிருந்து நீங்கியவுடன் தேடுவாரற்ற நிலையில் காணப்படுவர். ஆனால் ஆசிரியமணி போன்ற ஒருசிலர்தான் வாழ்நாள் முழுவதும் போற்றப்பட்டு வருகின்றனர். அவர்கள் சேவையை அர்ப்பணிப்புடன் செய்தவர்கள். தமிழ், சமயம் இரண்டையும் தனது இரு கண்களெனப் பாதுகாத்தவர்.

இவற்றிற்கெல்லாம் காரணமாயிருந்த தனது குருவாகிய பண்டிதமணியை இறுதி மூச்சுவரை மறக்காதவர். பண்டிதமணி ஒரு சமயம் ''தனக்கு வாய்த்த அனுமன்'' என்று கூறுகிறார் தன்சிறப்புக்கு சீடன் காரணம் எனக் குரு கூறுவது யாருக்கும் கிடைக்காத பாக்கியம் இத்தகைய மெச்சுதலை ஆசிரியமணி அவர்கள் பண்டிதமணியிடம் கேட்டதே பெரும்பேறு.

**தக்கார் மாண்பு**

எடுத்த காரியத்தைச் சாதிப்பதற்கும், விடாமுயற்சிக்கும் நிகரானவன் அனுமன் அனுமனுக்கு ''சொல்லின் செல்வன்'' என்றொரு சிறப்புப் பெயரும் உண்டு.

ஆசிரியமணி அவர்கள் தாம் பிறந்த உரும்பிராய் மண்ணை எந்நேரமும் நேசிப்பவர். உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயில், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் இரண்டையும் தன் இரண்டு கண்கள் என்றுகூறுவார். சைவத்தமிழ் வித்தியாலயத்தின் பெருமைக்குக் காரணகர்த்தாவாக விளங்குபவர் இவரேதான். உரும்பிராயில் அமைந்துள்ள ''கருணை இல்லத்தின்'' பொறுப்பாளராக இருந்து அரிய பணிகள் செய்துள்ளார்.

குருவை யார் போற்றி வருகின்றார்களோ அவர்கள் வாழ்க்கையில் கெட்டொழிந்தது கிடையாது. குருவின் ஆசியுடன் வாழ்ந்தால் அவர்களது வாழ்வு ஒளிமயமானதாக அமையும்.

ஆசிரியமணி பற்றி மாவை.பண்டிதர் க.சச்சிதானந்தன் அவர்கள் எழுதிய கவிதைவரிகள் சில வருமாறு:

அந்தி பகல்சாமம் மின்னல் அடைமழையோ
எந்த எடுத்ததுவும் முற்றுவிக்க - உந்துவண்டி
ஓயா துறங்காமல் ஓடும் இவர்சுமந்து
சாயாது தான்தளர்ந்து கீழ்

அப்பன் இசையானேல் அம்மைபதம் வீழ்ந்து
எப்படியும் எப்பணியும் முற்றுவிப்பான் -முப்பொழுதும்
மென்முகத்தால் இன்மொழியால் மீண்டும் கரைத்திடும்
பொன்முகத்தான் புன்முறுவல் பூண்டு

ஆசிரியமணி அவர்களின் செயல்களைப் படம்பிடித்துக் காட்டுகின்றது இந்தக் கவிதை.

பிறப்பவர்கள் யாவரும் என்றோ ஒருநாள் இறப்பது உண்மை. மனிதராகப் பிறந்த எவரும் இருக்கும் காலத்தில் நல்ல செயல்கள், நல்ல சிந்தனைகளுடன் செயற்படவேண்டும். அப்போதுதான் அவர் நல்ல முத்திரையைப் பதித்துச் செல்கின்றவராவார். அவர் இறந்த பின்பும் அவரது பெயர் நிலை பெற்றிருக்கும். இந்த வகைக்குள் அடங்கும் ஆசிரியமணி அவர்கள் என்றும் சிவன் பாதத்தில் வீற்றிருப்பார் என்பது எம் நம்பிக்கை.

—வாசுகி

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ.14

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் அங்கத்துவக் கழகங்களின் அணிகளுக்கு இடையிலான லீக் முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணியளவில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம் பெறவுள்ள அணிகளுக்கான போட்டியில் 'ஒல்கோல்ஸ்' விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (1-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ.14

யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களின் 40 வயதிற்கு மேற்பட்டவர்களைக் கொண்ட அணிகளுக்கு இடையே நடைபெற்றுவரும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை பாசையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

* நாவாந்துறை சென்.மேரிஸ் எதிர் பாசையூர் சென்.அன்ரனிஸ் 'ஏ' (மாலை-3.45 மணி)
* சென்.அன்ரனிஸ் 'பி' எதிர் பாரதி வி.க. (50-23)


### விற்பனைக்கு

முதிரை மரத்தில் செய்யப்பட்ட அழகிய கவுண்டர் மேசையும் (Counter Table), கறுப்புநிற பொம்மேரியன் நாய்க்குட்டிகளும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: வே.பத்மநாதன், நவாலி தெற்கு, மானிப்பாய்.
T.P.: 021 222 5460 (90932)

### மணமகள் தேவை

கொம்பியூட்டர் என்ஜினியராக வேலை செய்யும் யாழ்.கௌரவ குடும்ப, கிறிஸ்தவ, அழகிய மணமகனுக்கு வயது 32, நன்கு படித்த, சிவந்த அழகிய மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 021 3210804
(90931)

### தேவை

வீட்டில் தங்கியிருந்து ஒரு வயோதிப அம்மாவைக் கவனிக்க பெண் உதவியாளர் தேவை. கொடுப்பனவுகள் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 0777110426


## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாண லயன்ஸ் கழகத்தின் நீண்டகால உறுப்பினரும், தற்போதைய உப ஆளுநர் சபைப் பொருளாளர் (வடக்கு) லயன் ஸ்ரீபன் லெனாட் MJF அவர்களின் பாசமிகு தந்தை **பிரான்சிஸ் லெனாட்** அவர்கள் இறைபதம் எய்திய தகவலறிந்து மிக்க துயரடைவதுடன் அவர்களின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம்.

(C/562299)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற கௌரவ நீதிபதி ஆனந்தராஜா அவர்களின் பேரன்

**ஞானப்பிரகாசம் பத்திநாதர்**

அவர்கள் இறைவனடி சேர்ந்ததையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

சிறிலங்கா சிறைச்சாலை,
யாழ்ப்பாணம்.

சிறைச்சாலை அத்தியட்சகரும் உத்தியோகத்தர்களும்.
(90936)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசுக் கட்சி தனது தனித்துவத்தைப் பேணிச் செயற்படவே விரும்புகின்றதாம்

## 60 ஆவது ஆண்டுப் பூர்த்தி மாநாட்டில் முடிவு வெளியிடப்படும்

யாழ்ப்பாணம், நவ.14

தமிழின விடிவுக்காக தொடர்ந்து பாடுபட்டு வந்த அடிப்படைக் கொள்கைகளில் இருந்து பின் வாங்கி விடாத கட்சியென்ற வகையில் எமது தனித்துவத்தைப் பேண வேண்டிய தேவை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் யாழ். மாவட்டச் செயலாளர் சூ.கே.குலநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்றைய நிலை தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

அண்மைக்காலமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்த ஒரு சிலர் வெளியிட்டு வரும் கருத்துக்களுடன் நாம் உடன்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது 2004ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலை ஒட்டி ஏற்படுத்தப்பட்ட நான்கு கட்சிகளின் கூட்டமைப்பு ஆகும். இந்தக் கூட்டமைப்பில் கட்சிகளில் சாராதவர்கள் அப்போதைய சூழ்நிலையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

ஒரு சிலர் தன்னிச்சையாக கூட்டமைப்பினருக்கே பகிரங்க ஆலோசனை வழங்குவதும் கருத்து முரண்பாட்டின் வெளிப்பாடாகவே பார்க்கவேண்டும்.

கருத்தொற்றுமையற்ற அல்லது குறைவான இணைப்புக்கள் எதுவும் தமிழின விடிவுக்கோ விமோசனத்திற்கோ உதவப் போவதில்லை.

இந்த நிலையில் தமிழின விடிவுக்காக தொடர்ந்து பாடுபட்டு வந்த அடிப்படை கொள்கைகளில் இருந்து பின்வாங்கி விடாத கட்சியென்ற வகையில் எமது தனித்துவத்தைப் பேணவேண்டிய தேவை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது.

கூட்டமைப்பு என்பது நாடாளுமன்ற தேர்தலை மையப்படுத்தியதாகவோ, நாடாளுமன்றப் பதவிகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டும் உரித்தானதோ அல்ல.

இலங்கை தமிழரசுக்கட்சி பாரம்பரிய உட்கட்சி ஜனநாயக வழிமுறைகளை பின்பற்றி வரும் ஒன்றாகும். இக்கட்சிக்கு வெளியார் எவரிடமிருந்தும் ஆலோசனைகளோ, அறிவுறுத்தல்களோ வேண்டியதில்லை.

இலங்கைத் தமிழரசுக்கட்சி ஆரம்பித்த காலங்களிலிருந்த அதே இலக்குகளும், நோக்கங்களும், அபிலாசைகளும, இலட்சியங்களும் இன்றும் உயிரோட்டமாகவே உள்ளன. காலத்திற்குக் காலம் இவற்றை எய்துவதற்கான போராட்ட வழிமுறைகளும் வடிவங்களும் மாறினாலும் இலட்சியங்கள் மாறுபடவோ மறையவோ இல்லை. எனவே இவற்றை நோக்கிய பயணம் தொடரவேண்டிய ஒன்றாகும்.

இவை பற்றிய தீர்மானங்களும் முடிவுகளும் அடுத்த மாதம் 18ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள கட்சியின் 60ஆவது ஆண்டு பூர்த்தி மாநாட்டின் போது வெளியிடப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என உள்ளது. (அ-1)

# தென்மராட்சி வீதி விபத்தில் நால்வர் காயமடைந்தனர்

தென்மராட்சிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் நால்வர் காயமடைந்தனர்.

டச்சு வீதியில் வீதியின் குறுக்கே ஒடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் ரி.ஜெய்தீபன் (வயது 16), எஸ் ரிசர்வன் (வயது 16), ஆகியோரும்.

மீசாலைப் பகுதியில் இடம் பெற்ற விபத்தில் அல்லாரையைச் சேர்ந்த மாணிக்கம் மனோகரன் (வயது 53) என்பவரும்.

கொ[illegible]ப் பகுதியில் உழவு இயந்திரம் மி[illegible]வண்டி விபத்தில் எஸ்.தர்மலிங்கம் (வயது 60) என்பவரும் காயமடைந்தனா.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு எஸ்.தர்மலிங்கம் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (1-27)

# உண்மையும் பொய்யும்... எது, எதுவோ...?

சென்னை, நவ. 14

எதிர்வரும் 27ஆம் திகதி குறித்து தமிழகத்தில் பரபரப்புத் தகவல் ஒன்று பரவத் தொடங்கியுள்ளது. வழமையாக இந்த நாளில் தான் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் தின உரை நடைபெறுவது உண்டு. இம்முறை அந்த உரை நிகழ்த்தப்படுமா என்பது குறித்து கேள்விக்குறியும் அதே நேரத்தில் பரபரப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

''ஆனந்தவிகடன்' வார இதழ் வெளியிட்டுள்ள கட்டுரை குறித்து இங்கு பட்டி தொட்டி எங்கும் பேசப்படுகிறது. அந்த வார இதழ் வெளியிட்டுள்ள ''வருகிறார் பொட்டு'' என்ற நீண்ட கட்டுரை தமிழ் ஆர்வலர்கள், ஈழ ஆதரவாளர்கள் மத்தியில் பரவலாகப் பேசப்படுகிறது; அதுகுறித்து வாதப் பிரதிவாதங்களையும் தோற்றுவித்திருக்கிறது.

ஆனந்த விகடனில் பொட்டு அம்மானும் பிரபாகரனும் சேர்ந்து எடுத்த படம் ஒன்றும் பிரசுரமாகி உள்ளதால் அதில் வெளியான தகவல்களை நம்புவதா நம்பாமல் விடுவதா என்ற கருத்துக்குழப்பங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

''பிரபாகரன் வரமாட்டார்; ஆனால் பொட்டு அம்மான் தான் இந்த வருட மாவீரர் உரையை நிகழ்த்தவிருக்கின்றார்'' என்ற சேதியும் அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் பொட்டு அம்மான் பற்றி திருமதி அடேல் பாலசிங்கம் கூறியது குறித்தும் அந்தக் கட்டுரை விவரிக்கிறது.

எது உண்மை எது பொய் என்பது இன்னும் இரண்டு வாரங்களில் தெரிந்துவிடும்... (அ)

## முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட

# ஜி.சீ.ஈ. (சா/த) பரீட்சைக்கு தோற்றுபவர்களின் விண்ணப்பங்களை திங்கள் அனுப்ப ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 14

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களில் இம்முறை ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்கு பாடசாலைப் பரீட்சார்த்திகளாக தோற்றுவதற்கு விண்ணப்பித்துள்ளவர்களின் விண்ணப்பங்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இத்தகவலை யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களில் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள சாதாரண தரப் பரீட்சைக்கு பாடசாலை பரீட்சார்த்திகளாத் தோற்றுவதற்கு நூற்றுக்கணக்கான மாணவர்கள் தமது விண்ணப்பங்களை பாடசாலை அதிபர்கள் ஊடாக யாழ். கல்வி வலயத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அத்தகைய விண்ணப்பங்கள் மீள்பரிசீலனை செய்யப்பட்டுள்ளன. நாளை மறுதினம் திங்கட்கிழமை பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே இதுவரை சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்காத மாணவர்கள் உடனடியாக தமக்கு அயலில் உள்ள பாடசாலையின் அதிபர் ஊடாக யாழ்.கல்வி வலயத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார். (1-9)

# டிறிபேக் கல்லூரியில் ஒளி விழா நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 14

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி கிறிஸ்தவ மன்றத்தின் ஒளி விழா நாளை மறுதினம் கல்லூரி நாகேந்திரராஜா மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்வில் வழிபாட்டு நிழ்ச்சிகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (1-207)

# பம்பலப்பிட்டி கடலில் இளைஞர் கொலை; பொலிஸாரின் கவனயீனமே காரணம்

## குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸார் நீதிமன்றுக்கு அறிவிப்பு

கொழும்பு, நவ- 14

பொலிஸாரின் கவனயீனம் காரணமாகவே பம்பலப்பிட்டி கடலில் பாலசுப்பிரமணியம் சிவகுமாரின் மரணம் சம்பவித்துள்ளது என்று கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவின் பிரதி பொலிஸ்மா அதிபர் அனுர சேனாநாயக்க கொழும்பு நீதிமன்றத்துக்கு நேற்று தெரிவித்தார்.

பம்பலப்பிட்டிக் கடலில் இடம்பெற்ற கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களான இரு பொலிஸார் உட்பட நால்வரை கொழும்பு நீதவான் கிஹான் பலேப்பிடிய முன்னிலையில் நேற்று ஆஜர்ப்படுத்திய போதே பிரதி பொலிஸ்மா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸார், பொலிஸ் கொள்கைக்கு முரணாகவே செயற்பட்டுள்ளனர் என்றும் பிரதி பொலிஸ்மா அதிபர் மேலும் கூறினார்.

இச்சம்பவம் தொடர்பாக ஒளிப்பதிவு செய்யப்பட்ட காட்சியை பரிசோதிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் எனறும் அவர் நீதவானுக்குத் தெரிவித்தார்.

குறித்த வீடியோ காட்சியில் காட்சிப் படுத்தப்பட்டிருப்பதில் சந்தேக நபர்கள் குறித்த இளைஞரை நான்கு தடவையே தாக்கியுள்ளனர். அதனை சில தொலைக்காட்சிகள் நான்கு தடவைக்கு மேல் தாக்குதல் நடத்தப்பட்டது போன்று ஒளிபரப்பியுள்ளன. இதன் மூலம் பொலிஸ் சேவைக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அபகீர்த்தியை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வாறான சம்பவங்களை தொலைக்காட்சிகள் உரிய முறையில் ஒளிபரப்புவதற்கு உத்தரவிடுமாறும் பிரதிபொலிஸ்மா அதிபர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தார்.

அதேவேளை பொலிஸாரின் இந்த கோரிக்கை நியாயமானது எனத் தெரிவித்த நீதிவான் தொலைக்காட்சிகளுக்கு இவ்வாறு உத்தரவிடுவதற்கு முன்னர் குறித்த ஒளி நாடாவையும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பிய காட்சிகளையும் தாம் பார்வையிட வேண்டும் என்று குறிப்பிட்டார். இது தொடர்பான தீர்மானம் எடுப்பதை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நீதிவான் ஒத்திவைத்துள்ளார்.

கடந்த மாதம் 29ஆம் திகதி பம்பலப்பிட்டி கடலில் குறித்த இளைஞர் பொலிஸாரால் தாக்கப்பட்டு சாகடிக்கப்பட்டமை அறிந்ததே.

# கப்பலில் இருந்த இலங்கையர்கள் 78 பேரில் 20 பேர் இறங்கினர்

கொழும்பு, நவ. 14

இந்தோனேஷியாவில் கடந்த ஒரு மாத காலமாகக் கப்பலில் இருந்த 78 இலங்கையர்களில் 20 பேர் நேற்று ஓசியானிக் வைக்கிங்கிலிருந்து இறங்கியுள்ளனர்.

இந்தோனேஷிய அதிகாரிகளினால் மருத்துவப் பரிசோதனை மற்றும் பாதுகாப்பு சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் அவர்கள் ஓசியானிக் வைக்கிங் கப்பலிருந்து இறக்கப்பட்டு சிறிய படகுகள் மூலம் இந்தோனேஷியாவின் பின்டன் தீவுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் பின்னர் பின்டன் நகரிலுள்ள டன்ஜங் பினாங் தடுப்பு முகாமிற்குக் கொண்டு செல்லப்படுவர் என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

கப்பலிலிருந்து இறங்குபவர்களை அகதிகளாக ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு ஆறு வாரங்களுக்குள் தனது நாட்டில் அடைக்கலம் அளிப்பதாக ஆஸ்திரேலிய அரசு அறிவித்துள்ளதைத் தொடர்ந்தே இவர்கள் கப்பலிலிருந்து இறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தங்களை இந்தோனேஷிய தடுப்பு முகாம்களில் தங்கவைக்கக்கூடாது எனக் கூறி மேலும் பல இலங்கையர்கள் கப்பலிலிருந்து இறங்க மறுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மாதம் ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவுகளிலிருந்து செல்லும் வழியில் படகு பழுதடைந்ததைத் தொடர்ந்து ஆஸ்திரேலிய கடற்படையினர் இவர்களை மீட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரி, கரவெட்டி வைத்தியசாலைகளில் புதிய கட்டடங்கள் இன்று திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 14

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை யில் புதிதாக அமைக்கப்பட்ட மூன்று கட்டடங்களும் கரவெட்டிப் பிரதேச வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள வெளி நோயாளர் பிரிவுக் கட்டடமும் இன்று சனிக்கிழமை வைபவரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளன.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 'நெக்கொட்' திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வெளிநோயாளர் பிரிவு கட்டடமும் வடமாகாண சுகாதார அமைச்சின் பி.எஸ்.டி.ஜி. நிதி மூலம் கட்டப்பட்ட புதிய மருந்துக் களஞ்சியமும் அவுஸ்திரேலிய மருத்துவக் கழகத்தின் உதவியுடன் அமைக்கப்பட்ட பெண்கள் விடுதியும் இன்று காலை 8 மணிக்கு வைபவரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்குமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக வடக்குமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, 'நெக்கொட்' திட்டப் பணிப்பாளர் ரி.லங்காநேசன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

வட மாகாண சுகாதார அமைச்சின் பி.எஸ்.டி.ஜி. நிதி மூலம் கட்டப்பட்ட கரவெட்டி வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவுக்கட்டடமும் இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. யாழ். மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந் திரசிறி ஆகியோர் கலந்து கொள்வர்.

# ஹைலண்ட் பால்மாவின் விலை நேற்று நள்ளிரவு முதல் குறைப்பு

கொழும்பு, நவ- 14

'ஹைலண்ட்' நிறுவனத்தினால் தயாரிக்கப்படும் பால்மாவின் விலையை நேற்று நள்ளிரவு முதல் குறைக்க அரசு தீர்மானித்துள்ளது.

அதன்படி 400 கிராம் 'ஹைலண்ட்' பால் மா பைக்கற் ஒன்றின் விலை 20 ரூபாவால் குறைக்கப்படவுள்ளது என நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போது 230 ரூபாவாக விற்கப்படும் 400 கிராம் 'ஹைலண்ட்' பால் மா பைக்கற் நேற்று நள்ளிரவு முதல் 210 ரூபாவுக்கு விற்கப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆடை நீக்கப்பட்ட 'ஹைலண்ட்' 400 கிராம் பால் மா பைக்கற் ஒன்றின் விலை 25 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது எனவும், இதுவரை 275 ரூபாவாக விற்கப்படும் குறித்த பால் மா 250 ரூபாவாக குறைக்கப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஒருகிலோ 'ஹைலண்ட்' பால்மா பைக்கற்றின் விலை 490 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுமென நுகர்வோர் விவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியிலிருந்து இடம்பெயர்ந்தோரில் 50 வீதமானோர் மீள்குடியமர்வு

## மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறுகிறார்

கொழும்பு, நவ- 14

''வன்னியிலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் 50வீதமானவர்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள னர். நாளாந்தம் மக்கள் மீளக்குடியமர்தப்பட்ட வண்ணம் உள்ளனர். வெகுவிரைவில் அவர்கள் முழுமையாக மீளக்குடியமர்தப்பட்டு விடுவார்கள்''

-இவ்வாறு மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவிக்கின்றார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் ச்ந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வவுனியாவில் 43 ஆயிரத்து 251 குடும்பங்களை சேர்ந்த ஒரு இலட்சத்து 32 ஆயிரத்து 748 பேரும், யாழ்ப்பாணத்தில் 3 ஆயிரத்து 373 பேரும், மன்னாரில் 970 பேரும், திருகோணமலையில் 2 ஆயிரத்து 970 பேரும், வைத்தியசாலைகளில் 3 ஆயிரத்து 100 பேரும் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளனர். தற்போது முகாம்களில் கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து 43 ஆயிரத்து 161 பேரே உள்ளனர். கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் இது பத்தாயிரத்தால் குறைவடைந்துள்ளது. அதாவது ஒரு வாரத்தில் நாம் 10 ஆயிரம்பேரை மீளக்குடியமர்த்தியுள்ளோம்.

கண்ணிவெடிகளை அகற்ற இலங்கைக்கு 24 உபகரணங்கள் கிடைத்துள்ளன. அதில் 19 உபகரணங்களை இலங்கை அரசு கொள்வனவு செய்தவை. ஏனையவை ஐக்கிய நாடுகளால் வழங்கப்பட்டன. யுத்தத்தால் இடம் பெயர்ந்த மக்களில் 50 வீதமானோர் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்காக இலங்கை அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கை சர்வதேச ரீதியில் பலரது பாராட்டைப் பெற்றுள்ளது. மீளக்குடியமர்த்தும் பணிகள் நாளாந்தம் இடம் பெற்ற வண்ணமே உள்ளன. அத்துடன் மீளக் குடியமர்த்தப்படும் மக்களுக்கு தேவையான தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்து அவர் கள் சுயமாக சம்பாதித்து உண்ணும் போதே நாம் அதனூடாக முழுமையான பயனை அடைய முடியும். எனவே எதிர்வரும் காலங்களிலும் தொடர்ந்து மீளக்குடியமர்த்தும் பணி கள் இடம்பெறும். ஜனவரி 31 ஆம் திகதிக்குள் பெரும்பாலானவர்களை மீளக்குடியமர்த்தப்படுவார்கள் என எதிர்பார்க்கின்றோம்- என்றார்.

# கனகரட்ணம் எம்.பி. நேற்று வவுனியா நீதிமன்றில் ஆஜர்

கொழும்பு, நவ- 14

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதா சிவம் கனகரத்தினம் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் பயங்கரவாத பிரிவு பொலிஸாரினால் நேற்று காலை ஆஜர்படுத்தப்பட்டார் என தெரிவிக்கப்படுகிறது.

விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அதற்கு கால அவ காசம் வழங்குமாறும் பதில் நீதிவான் எம். சிற்றம்பலத்திடம் பொலிஸார் அனுமதி கோரினர்.

அதனை ஏற்றுக்கொண்ட நீதிவான் எதிர்வரும் 4 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத் தில் ஆஜர்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் வன்னயில் யுத்தம் தீவிரமாக இடம்பெற்றபோது அங்கு மக்களுடன் தங்கியிருந்தார்.

பின்னர் வவுனியா நலன்புரி முகாமில் வைத்து கைது செய்யப்பட்டு கடந்த ஆறு மாதங்களாக பயங்கரவாத தடுப்பு பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார் என்பது குறிப்படத்தக்கது.

## அக்கரைப்பற்றில் மூன்று தமிழ் இளைஞர் கைது

கொழும்பு, நவ.14

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று, திருக்கோவில் ஆகிய பிரதேசங்களில் நேற்று காலை விசேட அதிரடிப்படையினர் நடத்திய தேடுதலில் மூன்று தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

---

### பொன்சேகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் அனுஷ பல்பிட்ட இதனைத் தெரிவித்தார்.

சரத் பொன்சேகா ஓய்வு பெறவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உடனடியாகவே அனுமதி வழங்கிவிட்டார் என்று அவர் ரொய்ட்டர் செய்திச் சேவைக்குத் தெரிவித்தார். (அ-சி)

---

### ஐ.தே.முன்னணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பியும் பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

இத் தாக்குதலின்போது 12 வாகனங்கள் சேதமடைந்ததோடு 15 பேர் காயமடைந்தனர் என்றும் அவர் சொன்னார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எமது கூட்டமைப்பின் கொள்கைப் பிரகடனத்தைக் கண்டியில் வெளியிடுவதற்காக நாம் கொழும்பில் இருந்து வாகனப் பேரணியாக கண்டி நோக்கிப் புறப்பட்டோம். சுமார் ஆயிரத்து 300 வாக னங்கள் இப் பேரணியில் பங்கேற்றன.

நாம் நிட்டம்புவ, கொரகொல்லவை நெருங்கும் போது அரசின் கம்பஹாமாவட்ட எம்.பியான சரண குணவர்தன அவரது அடியாள்களுடன் வந்து எமது வாகனப் பேரணி மீது தாக்குதல் நடத்தினார். இதனால், எமது 12 வாகனங்கள் சேதமடைந்ததோடு 15 பேர் காயமடைந்தனர்.

கூட்டமைப்பின் பலத்தைப் பார்த்து அஞ்சும் இந்த அரசு அடியாள்களை அனுப்பி இவ்வாறு தாக்குதல்களை நடத்துகின்றது. இத்தாக்குதலை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம் - என்றார். (அ-சி)

---

### ஏ-9 பாதையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அமைச்சின் சார்பில் இராணுவ இணைப்பதிகாரி மேஜர் ஜெனரல் டபிள்யு.பி.பி. பெர்னாண்டோ இந்த விவரத்தை நேற்று அறிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் ஏ-9 பாதையூடாக பயணம் செய்வோர் இதுவரை பாதுகாப்புத்தரப்பினரின் பயண அனுமதி ('கிளியரன்ஸ்') இன்றிப் பஸ்களில் பயணம் செய்ய முடியாத வாறு தடைவிதிக்கப்பட்டிருந்தது.

அந்தத் தடை நீக்கப்பட்டதால் மக்கள் இருவழிப் போக்கு வரத்தையும் சுலபமாக மேற்கொள்ளமுடியும் என்பது குறிப்பிடத் தக்கது.

பஸ்களில் ஏ-9 பாதையூடாக செல்லும் பயணிகள் வழமையான பாதுகாப்பு சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் பயணம் செய்ய இயலும் என்றும், பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. விமானமூலம் பயணம் செய்வோருக்கு பாதுகாப்பு அனுமதி (கிளியரன்ஸ்) நீக்கப் பட்டதா என்பது குறித்து தகவல் எதனையும் நேற்றிரவுவரை பெற இயலவில்லை. (அ-1)

---

### நல்லூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைக்கத் தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் டளஸ் அலகப்பெரும தெரிவித்தார்.

வடக்கின் நண்பன் திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள 30ஆவது ரயில் நிலை யமாக நல்லூர் ஆலய நிலையம் அமையும். உத்தேச ரயில் நிலையத்தின் மூலம் கந்தசாமி பெரியகோயிலுக்கு செல்லும் பக்தர்களுக்கு சிறந்த சேவையும் வசதி யும் கிடைக்கும் என்றும் அமைச்சர் கூறினார். (அ-சி)

---

### இந்திய அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றமை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது .

தனது பயணத்தின்போது ஜனாதிபதி மஹிந்த, வெளியுறவு அமைச்சர் ரோஹித போகொல்லாகம, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை பிரணாப் முகர்ஜி சந்திப்பார். பொன்சேகாவையும் அவர் சந்திக்கக்கூடும் என்றும் ஒரு தகவல் கூறுகிறது. (அ-சி)

---

### மகஸின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவத்தால் அச்சிறைச்சாலையில் நேற்றுக் கடும் பதற்றம் ஏற்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக பல அரசியல் கட்சிகள் கண்டனங்களைத் தெரிவித்துள்ளன.

தாம் தாக்கப்பட்ட சம்பவத்தை தமிழ்க் கைதிகள் நேற்றுக் காலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களுக்குத் தெரியப்படுத்தினர். இதுதொடர்பாக உடனடி விசாரணை மேற்கொள்ளுமாறு கூட்டமைப்பு எம்.பி. மாவை சேனாதிராஜா நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொரகொடவிடம் வேண்டுகோள் விடுத்தார்.

**தாக்கியவர்கள் கைதாகவில்லை**

இதேவேளை, ஐ.தே.க. எம்.பி. டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவும் சிறைச் சாலைக்குச் சென்று தாக்கப்பட்ட கைதிகளைச் சந்தித்து உரையாடினார்.

இதுதொடர்பாக பக்கச்சார்பற்ற முறையில் விசாரணை நடத்துமாறு அவர் சிறைச்சாலை ஆணையாளரிட மும், அமைச்சர் மிலிந்த மொரகொடவிடவும் வேண்டுகோள் விடுத்தார்.

தாக்குதலில் காயமடைந்த கைதிகள் வைத்தியசாலையில் சேர்க்கப்படாமல் சிறைச்சாலையில் வைத்து சிகிச்சையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. தாக்கிய சிங்கள கைதிகள் எவரும் கைது செய்யப்படாத நிலையில் தாக்கப்பட்ட தமிழ்க் கைதிகள் ஒழுக்காற்று விசாரணைக்காகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளர் என்று பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதல் சம்பவத்தின்போது சில தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்டனர் என்று முதலில் செய்தி வெளியாகியது. ஜயலத் ஜயவர்த்தன எம்.பி. சிறைச்சாலைக்கு நேரில் சென்று கைதிகளை பார்வையிட்ட பின்னர் அச்செய்தி பொய் என்பது தெரியவந்தது. (அ-சி)


**நேரில் வரவும்**

★ பக்க வடிவமைப்பாளர்
★ கணனித் தட்டெழுத்தாளர்

1. வேலை நேரம் நண்பகல் 12மணிமுதல் இரவு 9 மணிவரை
2. முழு நேரமாகவோ பகுதி நேரமாகவோ வேலை நேரம் பேசி முடிவு செய்யலாம்.

★ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
★ நேரில் வரவும்.

உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**G.A.Q 1st in Com**
பேராதனை, யாழ்

G.C.E A/L எப்பிரிவேனும் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

★ விரிவுரைகள் 21.11.2009 இல் ஆரம்பமா கின்றன.

விபரங்களுக்கு:
பட்டப்படிப்புகள் கல்லூரி,
57/18, ஸ்ரான்லி வீதி,
(இலங்கை வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்.

(ஜ/562206)

கடந்த மூன்று தசாப்த காலமாக வெளிவரும் பட்டப்படிப்புகளுக்கென தனித்துவமாக இயங்கிவரும் நிறுவனம்.

**Phillips Nursing Home**
**பிலிப்ஸ் நேசிங் ஹோம்**

★ அதி நவீன சத்திர சிகிச்சைக் கூடத்தில் நியாயமான கட்டணத்தில் சத்திர சிகிச்சைகள்.
★ தனித்தனி தொலைக்காட்சி வசதிகளுடன் கூடிய சுகாதாரமான வார்ட் வசதிகள்.
★ இலவச வைத்திய ஆலோசனைகளுடன் கூடிய அடிப்படை உடற்பரிசோதனையும் (Basic Full Body Check-up) கணனி மய ஆய்வு கூட பரிசோதனைகளும்.
★ நிபுணத்துவமிக்க யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களால் வழங்கப்படும் (OPD) வெளிநோயாளர் சேவை.

(ஜ/562401)

223, பிரதான வீதி,
(யாழ்.சிறைச்சாலை முன்பாக)
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 4172

**LAVA HOSPITAL**

75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333

ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வு கூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்

★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=

**S&M Consultant Service, Branch Office**
148, Temple Road, Jaffna. (யுனிசெவ் முன்பாக)

யாழ். மாணவர்களுக்கு லண்டனில் விசா பெற்றுக் கொடுப்பதில் முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம் !!!

* நவம்பர் மாதப் பிரவேசத்துக்கான நடவடிக்கைகள் அனைத்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
* விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
* இவ்வருடத்திற்கான இறுதிப்பிரவேசத்தில் இணைந்து இலகுவான நடைமுறையின் கீழ் விசாக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
* சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்!!!
* வாரநாள்களில் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை அலுவலகத்தில் நேரடியாக சந்தித்துக் கொள்ளலாம்.

**STUDY IN EUROPE-MBBS / MD**

"LAGANSK STATE MEDICAL UNIVERSITY" (UKRAINE-EAST EUROPE) இல் இணைந்து சிறிலங்கா MEDICAL COUNCIL லினால் அங்கீகரிக்கப்பட்ட டாக்டராக நீங்களும் வர விரும்பினால் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

உடன் தொடர்பு - 0774528818
0212223818
E.mail : mg1404_2009 @yahoo.com

148, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
(யுனிசெவ் முன்பாக)

(சி/562403)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org